164
1.56
NN 24 557

# திருப்புகழ்த் திரட்டு

## ௨௨௫ பாடல்கள்

### குறிப்புரையுடன்



OF THE REGISTRAR OF
11 JAN 1956
MADRAS

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

கழக வெளியீடு: அகஅ

# திருப்புகழ்த் திரட்டு

## [குறிப்புரையுடன்]

**225 பாடல்கள்**

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Dec., 1955.

# THIRUPPUGAZH THIRATTU

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1620.

# பதிப்புரை

உலகம் எங்கும் இறைவன் வடிவம்; அவன் நீக்கமற எங்கும் நிறைந்துளான். இவ் இறைவனை நம் தமிழ் நாட்டினர் பண்டைக் காலந்தொட்டே மலையகத்தும் காட்டகத்தும் நாட்டகத்தும் வைத்துப் பல்வேறு குணங்குறிகளுடன் அமைத்து வழிபாடாற்றி வந்தனர்.

அக்குறிகளுள் ஒன்றே முருகு என்னும் பெயர் கொண்ட சேயோன். இவ்வியற்கையைச் 'சேயோன் மேய மைவரை உலகம்' எனத் தொல்காப்பியம் செப்புகின்றது. இச் சேயோன் (குழந்தை) வடிவினனான முருகப்பெருமான் திருக்கோவில் கொண்டெழுந்தருளிய இடங்கள் பலப்பல.

"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே."

எனத் திருமுருகாற்றுப்படைக்கண் புலவர் பெருமான் நக்கீரனார் விதந்தெடுத்துக்கூறுதலான் அறியலாம்.

இவ்வாறு குணங்குறி கடந்த இறைவனுக்கு அவையமைத்து வழிபட்டவிடத்து இறைவன் திருவருள்பெற்று விளங்கிய பெரியார்கள் பலர். அவருள் ஒருவர் கந்தர் திருவடி பிடித்துக் கந்தரனுபூதி பெற்ற அருணகிரிநாதப் பெருமானாவர்.

இவர் இறைவனை நோக்கிப் பொழிந்த அருட்பாடல்கள் பல. அவற்றுள் திருப்புகழ் எனப்

பெயர்கொண்டு போற்றப்பெறும் சந்தப்பாக்கள் தலைசிறந்தன. பத்திச் சுவையை ஊட்டுவன; இறை முருகப் பெருமான்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கச் செய்வன. தம், இனிய இசை நயத்தால் கேட்டார்ப்பிணிக்கும் தகையன. அவை யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய, வந்த இருவினைக்கு மாமருந்து; பிறவித்துன்பம் நீக்கும் பேரமிழ்து; முருகப்பெருமானை முன்வரச் செய்யும் முத்தமிழ்த் திருமணி.

இத்தகைய செம்மைசான்ற திருப்புகழ்ப் பாக்களில் இழுமென் ஓசைநயமும், பொருட் செறிவும், சொல்லின்பமும் வாய்ந்தனவாய்ப் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய முருகனைப் பாடும் பணியே பணியாகச்செய்யும் உஉ௬ பாக்களைப் பொறுக்கித் தொகுத்துப் படைவீடுகளின் வரிசை முறைப்படி அவ்வப் பாடல்களின் இன்றியமையாத சொற்களுக்குப் பொருள் எழுதுவித்துத் 'திருப்புகழ்த் திரட்டு' என்னும் பெயருடன் நூல்வடிவாக்கி வெளியிட்டுள்ளோம்.

முருகன் திருவடியார்களும், அன்பர்களும் இசைவாணர்களும், கல்வி கேள்வி, மிக்க நல்லோர்களும் வாங்கிக் கற்று மனமுருகப்பாடி மகிழ்ந்து முருகப் பெருமான் திருவடி யன்பர்களாய் இன்பத்துடன் நன்கு வாழ்வார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# அருணகிரிநாதர் வரலாற்றுச் சுருக்கம்

முருகப் பெருமான் திருவருள் பெற்றிலங்கிய அருணகிரிநாதர் விளங்கியிருந்த காலம் ஏறக்குறைய ஐந்நூறாண்டுகட்கு முன்னரென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இவர் நடுநாட்டிலுள்ளதான திருவண்ணாமலையில் தோன்றியவர்; இவர் தம் இளமைக் காலத்தில் கல்வியில் ஒழுங்காகப் பயிற்சி பெறவில்லை. காதல் மங்கையர் கலக்கக் கலக்குண்டு அவர் வழி யொழுகித் தமக்குரிய செல்வம் முதலிய யாவற்றையும் இழந்து நோய்வாய்ப்பட்டனர்.

இவ்வாறு இவர் வருந்திய காலத்தில் முன்னைத் தவப் பேற்றாலே, முருகக்கடவுள் குருவுருவந்தாங்கி யெழுந்தருளிவந்து தடுத்து ஆட்கொண்டருளினர். அது முதல் உலகப் பொருள் யாவற்றின்மீதும் பற்றற்ற தன்மையராய் இலகுறுவாராயினர்.

சந்த இசைப் பாக்களினால் முருகப் பெருமானுடைய புகழைப் பாடுவதையே தம் கடமையாகக் கொண்டு அவ் இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்கள்தோறுஞ் சென்று திருப்புகழ்ப் பாடல்கள் பாடி மகிழ்ந்துவருவாராயினர். இவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் பதினாறாயிரமென்ப. அவற்றுள் கிடைக்கப் பெறுவன ஆயிரத்து முந்நூறு பாடல்களே. இன்னும் இவர் இத் திருப்புகழ்ப் பாடல்களே யன்றி திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி முதலிய அருள்நூல்களும் அருளிச்செய்துள்ளனர்.

இவர் காலத்தே பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வார் தமிழ்மொழியிற் புலமை வாய்ந்து செருக்குற்றுக் கல்வியிற் சாலா இளம்புலவர்கள் தாம் கேட்கும் வினாக்களுக்குத் தக்க விடை கொடாவிட்டால்

அவர்கள், காதுகளைக் குடைந்து தோண்டி எட்டின மட்டும் அறுக்கின்ற குணமுடையவராக இருந்தனர்.

அவருக்கும் இவருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்து முடிவில் கந்தரந்தாதி பாடி வில்லிபுத்தூராரைப் பொருள் கூறும்படி கூற, அவர் அதில் ஒருபாட்டுக்குப் பொருள்கூற இயலாது நிற்க, அருணகிரிநாதர் வென்றனர்; அதுமுதல் ஆழ்வார் செருக்கொழிந்து இருந்தனரென்ப.

பின்னரும் முருகப்பெருமான் திருவருளையே புகழ்ந்து பாடிக் காலத்தை இன்புடன் கழித்து வருவாராயினர்.

இவர் காலத்தில் திருவண்ணமலையில் பிரபுடதேவ அரசன் இருந்தவனவன். அந்தக் காலத்தில் சம்பந்த ஆண்டான் என்பவன் அருணகிரிநாதர்மீது பொறாமை கொண்டு இவரைச் சூழ்ச்சியால் வெல்லக் கருதினன். தன் கருத்து நிறைவேறாது போகவே தானே உயிர்துறக்கலானன்.

பின்னர்ப் பன்னெடுங்காலம் இருந்து முருகப்பெரு மான் திருவருள்பாடி அன்பர்கள் பலர்க்கு நல்லருள் செய்து ஒரு நன்னாளில் முருகப்பெருமான் திருவடி நிழல் எய்தினர் என்று கூறுப.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | 3 |
| | அருணகிரிநாதர் வரலாற்றுச் சுருக்கம் | 5 |
| | சிறப்புப்பாயிரம் | ௧ |
| | பிள்ளையார் வணக்கம் | ௧௫ |
| **நூல் :** | | ௭ |
| க. | திருப்பரங்குன்றம் | ௮ |
| உ. | திருச்செந்தூர் | ௧௧ |
| ங. | பழனி (திருவாவினன்குடி) | ௨௯ |
| ச. | சுவாமி மலை (திருவேரகம்) | ௪௬ |
| ரு. | குன்றுதோறாடல் | ௫௨ |
| சா. | பழமுதிர்சோலை | ௮௧ |
| **ஐம்பூதத் திருப்பதிகள் :** | | ௮௫ |
| க. | திருக்காளத்தி | ,, |
| உ. | சிதம்பரம் | ,, |
| ங. | காஞ்சி | ௯௧ |
| ச. | திருவானைக்கா | ௯௭ |
| ரு. | திருவருணை | ௧௦௧ |
| **பல திருப்பதிகள் :** | | ௧௦௬ |
| | அத்திப்பட்டு | ௧௩௪ |
| | இராமேசுரம் | ௧௦௮ |
| | இலஞ்சி | ௧௦௭ |
| | உத்திரமேரூர் | ௧௧௦ |
| | எழுகரைநாடு | ௧௩௯ |
| | கருவூர் (வஞ்சி) | ௧௩௬ |

| | பக்கம் |
|---|---|
| காசி | ௧௦௭ |
| குறட்டி | ௧௫௪ |
| கோடி (குழகர் கோயில்) | ௧௧௪ |
| கோடைநகர் | ௧௨௦ |
| சீகாழி | ௧௨௨ |
| சேலம் | ௧௫௭ |
| சோமநாதன் மடம் | ௧௫௨ |
| தஞ்சை | ௧௫௮ |
| திருக்கடவூர் | ௧௫௦ |
| திருக்குற்றாலம் | ௧௧௪ |
| திருக்கூடலையாற்றூர் | ௧௨௧ |
| திருப்புக்கொளியூர் அவிநாசி | ௧௫௭ |
| திருப்போரூர் | ௧௨௦ |
| திருமயிலை | ௧௧௧ |
| திருமுட்டம் | ௧௨௮ |
| திருவாரூர் | ௧௦௯ |
| திருவாலங்காடு | ௧௧௯ |
| திருவிடைக்கழி | ௧௫௧ |
| திருவிடைமருதூர் | ௧௧௨ |
| திருவீழிமிழலை | ௧௦௯ |
| தேவனூர் | ௧௨௪ |
| நிம்பபுரம் | ௧௨௬ |
| நெடுங்களம் | ௧௫௫ |
| புள்ளிருக்குவேளூர் | ௧௨௮ |
| பெரிய மடம் | ௧௫௧ |
| பேரூர் | ௧௫௯ |
| மதுரை | ௧௩௭ |
| வயலூர் | ௧௨௨ |
| **பொது:** | ௧௪௦ |
| குறிப்புரை | ௧௬௧ |
| செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை | ௧௮௪ |

உ

வேலு மயிலுந் துணை

# சிறப்புப்பாயிரம்

## நூற்சிறப்பு

நேரிசை வெண்பா

எல்லாரும் ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி. க

மாணிக்கம் பூண்பார்க்கு மற்றொருகல் வேண்டுமோ
ஆணிப்பொன் கையுறுவார்க் கையுறவேன்—பேணிப்பின்
செவ்வேல் விநோதன் திருப்புகழ்சிந் தித்திருப்பார்க்
கெவ்வேலை வேண்டும் இனி. உ

சீரார்ந் திருப்புகழைச் செவ்வேள்மேல் அன்பாக
ஆராய்ந் துரைத்தான் அருணகிரி—நேராக
அந்தப் புகழை யநுதினமும் ஓதாமல்
எந்தப் புகழோது வீர். ௩

அருணகிரி நாதன் அகிலதலத் துன்னைக்
கருணையினாற் பாடுங் கவிபோற்—பிரியமுற
வேறுமோர் புன்கவிகள் வேலோனே நின்செவியில்
ஏறுமோ என்னே யினி. ௪

ஆனைமுக வற்கிளைய ஐயா அருணகிரி
தேனனைய சொல்லான் திருப்புகழை—யானினைந்து
போற்றிடவும் நின்னைப் புகழ்ந்திடவும் பொற்கமலஞ்
சாத்திடவும் ஓதிடவுந் தா. ௫

வேதம்வேண் டாஞ்சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்தாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம். ௬

## நூற்பயன்

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேயிக் கூறு. ௧

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால். ௨

பொருப்பது பொடிப்பட விடுத்திடுகை வேலா
இருப்பிட முனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் விழுக்குல மொழுக்கமில ரேனுந்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம். ௩

திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்புக மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்றபெரு மாளே. ௪

ஓராறு மாமுகனும் உச்சிதமெய்ஞ் ஞானகுகன்
பேரால் அருணகிரி பேருலகிற்—சீராருந்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினவர் ஈடேறு வார். ௫

வள்ளிமண வாளன் மயிலேறும் வள்ளல்தனைத்
தெள்ளுதமி ழாற்புனைந்து சீர்பெறவே—உள்ளபடி
வைப்பாம் அருணகிரி வாழ்த்துந் திருப்புகழைக்
கற்பார் கரையேறு வார். ௬

அருணகிரி நாதர்பதி னாறா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோர்தீர்—பரகதிக்கஃ
தேணி யருட்கடலுக் கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம். ௭

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத்—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கெர்ச்சிக்க லாமே கெடீ. ௮

மடங்கல் நடுங்கும் தனைச்சுடும் ஈதென்று மாதிரத்தோர்
அடங்கி நடுங்குவர் சூலா யுதமென் றசுரர்கடல்
ஒடுங்கி நடுங்குவர் வேலா யுதமென் றுரகனுங்கீழ்க்
கிடங்கில் நடுங்கும் மயிலோன் திருப்புகழ் கேட்டனவே. ௯

திருப்புகழ் வல்ல சுரர்மகள் நாயகன் சங்கரற்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் சண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல அருண கிரிப்பெயர் வள்ளல்சொன்ன
திருப்புகழ் வல்லவர் சீர்பாதத் தூளிஎன் சென்னியதே. ௧௦

உ

# திரு அருணை

---

## முருகக்கடவுள் வணக்கம்

ஆசிரியவிருத்தம்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

வேலுமயிலுந் துணை

---

அருணகிரிநாதர்

அருளிய

# திருப்புகழ்

## பிள்ளையார் வணக்கம்

### க

*தத்தன தனதன தத்தன தனதன*
*தத்தன தனதன தனதான.*

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே.

## உ

தந்ததனத் தானதனத் தனதான.

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

## ௩

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தனதான.

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கினச மர்த்தனெனும் அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமானே.

## நூல்

௧

தந்தத் தன தந்தத் தனதன தனதான.

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட் பர மற்குச் சுருதியின்
முற்பட் டது கற்பித் திருவரும்
முப்பத் துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற் கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத் தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட் கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப் பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற் றெழ நட்பற் றவுணரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப் பட வொத்துப் பொரவல பெருமாளே.

# ௬. திருப்பரங்குன்றம்

## ௫

*தனனதந்த தத்தத்த தந்த தனதான.*

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகிக்
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறியங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி
அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

இரவியிந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்றும் ஒப்பற்ற உந்தி
இறைவன்எண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்
எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அநுமனென்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே
அயனையும்பு டைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப்ப ரிந்து
அருள்பரங்கி ரிக்குட்சி றந்த பெருமானே.

௬

தனத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந் தனதான.

தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டல்தண்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்

கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே

படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா

குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமானே.

௭

தந்தனத் தந்தத் தனதான.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமானே.

# அ

தனத்த தந்தன தனதன தனதன தனதான.

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு

உளத்து ளன்பின ருறைவிடம் அறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோர்தே

கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே

வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா

மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை உடையோனே

தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி னவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ மகிழ்வோனே

தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

## உ. திருச்செந்தூர்

௪௯

தந்ததன தந்தனம் தந்ததன தந்தனம்
தந்ததன தந்தனம் தந்ததான.

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்

தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடமணைந்துநின் றன்புபோலக்

கண்டுறகடம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்

கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ

புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது

பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்

கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே

கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே.

௫௦

தந்தத் தனனத் தந்தத் தனனத்
தந்தத் தனனத் தனதான.

அம்பொத் தவிழித் தந்தக் கலகத்
தஞ்சிக் கமலக் கணையாலே

அன்றிற் குமனற் றென்றற் குமினைத்
தந்திப் பொழுதிற் பிறையாலே

எம்பொற் கொடிமற் றுன்பக் கலனற்
றின்பக் கலவித் துயரானுன்
என்பெற் றுலகிற் பெண்பெற் றவருக்
கின்பப் புலியுற் றிடலாமோ
கொம்புக் கரிபட் டஞ்சப் பதுமக்
கொங்கைக் குறவிக் கினியோனே
கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே
செம்பொற் சிகரப் பைம்பொற் கிரியைச்
சிந்தக் கறுவிப் பொரும்வேலா
செஞ்சொற் புலவர்க் கன்புற் றதிருச்
செந்திற் குமரப் பெருமானே.

கக

தானனா தந்தனம் தானனா தந்தனம்
தானனா தந்தனம் தனதான

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலினார் தந்துடன் கொடுபோகக்
காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலறாமுன்
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்
ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழுன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமானே.

## கஉ

தந்தன தந்தனத் தந்தன தந்தனத்
தந்தன தந்தனத் தனதான.

சங்குபோல் மென்கழுத் தந்தவாய் தந்தபற்
சந்தமோ கின்பழுத் தெனவானிற்
றங்குகார் பைங்குழற் கொங்கைநீள் தண்பொருப்
பென்றுதாழ் வொன்றறுத் துலகோரைத்
துங்கவேள் செங்கைபொற் கொண்டல்நீ யென்றுசொற்
கொண்டுதாய் நின்றுரைத் துழலாதே
துன்பநோய் சிந்தநற் கந்தவே ளென்றுனைத்
தொண்டினு லொன்றுரைக் கருள்வாயே
வெங்கண்வ்யா ளங்கொதித் தெங்கும்வே மென்றெடுத்
துண்டுமே லண்டருக் கமுதாக
விண்டநா தன்திருக் கொண்டல்பா கன்செருக்
குண்டுபே ரம்பலத் தினிலாடி
செங்கண்மால் பங்கயக் கண்பெரு தந்தரத்
தின்கணு டுந்திறற் கதிராழித்
திங்கள்வா ழுஞ்சடைத் தம்பிரா னன்புறச்
செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமாளே.

## கந

தத்ததன தானதன தத்தான தனதான.

சத்தமிகு மேழுகட லைத்தேனை
உற்றமது தோடுகணை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு
தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவிளை வானகடு வைச்சீறு
தத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்
மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடநிகர் செப்பான தனமீதே

வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வச்ரமயில் மீதிலினி எப்போது வருவாயே

சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பனு வற்கார
திக்கினும்ந டாவுபுர விக்கார குறமாது

சித்தஅநு ராககல விக்கார
துட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள்

முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைநிகர் தூயவனி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான

முத்தமிழை ஆயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபரி சைக்கார
முத்துலவு வேலைநகர் முத்தேவர் பெருமாளே.

## ௧௫

*தந்ததன தான தானத் தான தனதான.*

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி உழலாதே

முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்

செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயே

அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்தினகர் வாழும் ஆண்மைக் கார பெருமாளே.

## கரு

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூறக்
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீரக்
குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமானு கந்த இறையோன்ம கிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த அதிதீரா
அறிவால றிந்துன் இருதாளி றைஞ்சும்
அடியாரி டைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயு கந்த பெருமாளே.

## ௧௬

தனதனன தனதனன தனதனன தனதனன
தனதனன தனதனன தனதான.

அறிவழிய மயல்பெருக உரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ உறவுமழ
அழலினிகர் மறலியெனை அழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவரம் அருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரும் இளையோனே
மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமானே.

## ௧௭

தனதனன தனன தந்தத் தனதான.

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவ னிளைய கந்தப் பெருமானே.

## கஅ

தனதந் தனதந் தனதான.

வரியார் கருங்கண் மடமாதர்
மகவாசை தொந்தம் அதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
இருதாளின் அன்பு தருவாயே
பரிபா லனஞ்செய் தருள்வோனே
பரமேசு ரன்றன் அருள்பாலா
அரிகேச வன்றன் மருகோனே
அலைவாய் அமர்ந்த பெருமாளே.

## கக

தந்ததன தந்த தந்த தந்ததன தந்த தந்த
தந்ததன தந்த தந்த தனதான.

கண்டுமொழி கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள் குழல் கொண்ட லென்று பலகாலுங்
கண்டுளம் வருந்தி நொந்து மங்கையர்வ சம்பு ரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே

பண்டைவினை கொண்டு முன்று வெந்துவிழு கின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்
பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்ச லஞ்ச லெனவாராய்

வண்டுபடு கின்ற தொங்கல் கொண்டறநெ ருங்கி யிண்டு
வம்பினைய டைந்து சந்தின் மிகமூழ்கி
வஞ்சிமுழு னிந்த கொங்கை மென்குறம டந்தைசெங்கை
வந்தருகு டன்க லந்த மணிமார்பா

திண்டிறல்பு னைந்த அண்டர் தங்களப யங்கள் கண்டு
செஞ்சமர்பு னைந்து துங்க மயில்மீதே
சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடை மணம்பு ணர்ந்து
செந்தில்நகர் வந்த மர்ந்த பெருமாளே.

## உ௦

தந்தன தானன தானன
தந்தன தானன தானன தனதான.

கொம்பனை யார்காது மோதிரு
கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூடண நகமேவு

கொங்கையில் நீராவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோலையில் மருளாதே

உம்பர்கள் சாமீந மோநம
எம்பெரு மானேந மோநம
ஒண்டொடி மோகாந மோநம எனநாளும்

உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே

பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி

பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனொ டெதிர்போர்கண்

டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா

இன்சொல்வி சாகாக்ரு பாகர
செந்திலில் வாழ்வாகி யேஅடி
யென்றனை ஈடேற வாழ்வருள் பெருமாளே.

## ௨௧

தந்த தனதனன தந்த தனனதன
தந்த தனதனன தனதான.

தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுன
தங்கை மருகருயி ரெனவேசார்
மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவும்
அந்த வரிசைமொழி பகர்கேடா
வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே
சிந்தை மகிழுமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை பெருமானே.

## ௨௨

தந்தந்தந் தந்த தனந்தன தனதான.

துன்பங்கொண் டங்க மெலிந்தற
நொந்தன்பும் பண்பு மறந்தொளி
துஞ்சும்பெண் சஞ்ச லமென்பதில் அணுகாதே
இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச லெனும்படி
என்றென்றுந் தொண்டு செயும்படி அருள்வாயே
தின்பங்கொன் றுங்கு றமின்சர
ணங்கண்டுந் தஞ்ச மெனும்படி
நின்றன்பின் றன்ப டுகும்பிடும் இளையோனே
பைம்பொன்சிந் தின்று றைதங்கிய
குன்றெங்குஞ் சங்கு வலம்புரி
பம்புந்தென் செந்திலில் வந்தருள் பெருமானே.

## உரு

*தந்த தனன தனனு தனனதன தனதான.*

தொந்தி சரிய மயிரே வெளிறநிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்

தொண்டு கிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி

மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே யினிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா

திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமானே.

## ௨௫

தன்தனன தானதான தந்தன
தனதனன தானதான தந்தன தந்ததான.

படர்புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனினுரை பானு வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்க ளுந்தெரி சங்கபாடல்

பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை;

மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு

மதுரகவி ராஜ னுனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொ டுலாவு மால கந்தைத விர்த்திடாதோ;

அடல்பொருது பூச லேவி ளைந்திட
எதிர்பொரவொ ணும லேக சங்கர
அரகர சிவாம ஹாதே வென்றுனி அன்றுசேவித்

தவனிவெகு கால மாய்வ ணங்கியு
ளுருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபெல கடோர மாச லந்தரன் றொந்துவீழ;

உடல்தடியு மாழி தாவெ னம்புய
மலர்கள்தச நூறு தாளி டும்பக
லொருமலரி லாது கோவ ணிந்திடு செங்கண்மாலுக்

குதவியம கேசர் பால இந்திரன்
மகளைமண மேவி வீறு செந்திலில்
உரியஅடி யேனை யாள வந்தருள் தம்பிரானே.

## ௨௫

தனதன தனதன தந்தத் தந்தத் தனதான.

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானார்
படையம படையென அந்திக் குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை யின்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டப்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
செயசெய அரஅர செந்திற் கந்தப் பெருமானே.

## ௨௬

தானன தான தந்த தானன தான தந்த தனதான

பூரண வார கும்ப சீதப டீர கொங்கை
மாதர்வி கார வஞ்ச லீலையி லேயு ழன்று
போதவ மேயி ழந்து போனது மான மென்ப தறியாத

பூரிய னாகி நெஞ்சு காவல்ப டாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு மாசையி லேயு ழந்து மயல்தீரக்

காரண காரி யங்க ளானதெ லாமொ ழிந்து
யானெனு மேதை விண்டு பாவக மாயி ருந்து
காலுட லூடி யங்கி நாசியின் மீதி ரண்டு விழிபாயக்

காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம்வி டாம லுன்றன் நீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்செய் யோகிக ளாய்வி ளங்க அருள்வாயே

ஆரண சார மந்த்ர வேதமெ லாம்வி ளங்க
ஆதிரை யானு நின்று தாழ்வனெ னாவ ணங்கும்
ஆதர வால்வி ளங்கு பூரண ஞான மிஞ்சும் உரவோனே

ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மான வென்று வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீரமு னாள்ம கிழ்ந்த முருகேசா

வாரண மூலமென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த
மாமுகில் போலி ருண்ட மேனிய னுமு குந்தன் மருகோனே

வாளுக மீது வண்ட லோடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி ஈன உந்து
வாரிதி நீர்ப ரந்த சீரலை வாயு கந்த பெருமாளே.

## உஎ

தானதன தான தானந்த தானந்த தனதான.

மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி ஏதுஞ்செ யாவஞ்சி அதிபார

மோகநினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடவரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துனதாகி

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்கண்
நாமமதி மீதி லூறுங்க லாவின்ப அமுதூறல்

நாடியதன் மீது போய்நின்ற ஆனந்த
மேலைவெளி ஏறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ டனல்வாயு

காதி முதிர்வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை ஏறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாணல்பர் தாம்வந்து தொழுமாது

வாளமுழு தாளு மோர்தண்டு மாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி னுளின்சொல்
வாழுமுமை மாதராள்மைந்த னேயெந்தை இளையோனே
மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னே நின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற பெருமாளே.

## உ௮

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன தனதான.

வஞ்சத் துடனொரு நெஞ்சிற் பலநினை
வஞ்சிக் கொடியிடை மடவாரும்
வந்திப் புதல்வரும் அந்திக் கிளைஞரும்
மண்டிக் கதறிடு வகைகூற
அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென உடன்மேவ
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியிணை தரவேணும்
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடு மயில்வீரா
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
கண்டத் தழகிய திருமார்பா
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநகர் உறைவோனே
செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல பெருமாளே.

## உ௯

தந்தன தான தந்தன தான
தந்தன தான தனதான.

விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி இனிமேலோ
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்;

வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி
வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்;

எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென்கணி லாடு தழல்வேணி
எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்கள்சு வாமி அருள்பாலா;

சுந்தர ஞான மென்குற மாது
தன்திரு மார்பில் அணைவோனே
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமானே.

## ௩௦

தனன தானன தந்தன தந்தன தனதான

கமல மாதுடன் இந்திரை யுஞ்சரி
சொலவொ ணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையில் அங்கையில் இருபோதேய்

கள்வு நூல்தெரி வஞ்சனை அஞ்சன
விழியில் மோகித கந்தசு கந்தரு
கரிய ஓதியில் இந்துமு கந்தனில் மருளாதே

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலைவி லாதஅ றப்பொரு ளின்பமும்
அடைய ஓதியு ணர்ந்துத ணந்தபின் அருள்தானே

அறியு மாறுபெ றும்படி அன்பினின்
இனிய நாதசி லம்புபு லம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை அம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி   எமதாயி

குறைவி லாளுமை மந்தரி அந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூடிக முந்திய ஐங்கர   கணராயன்

மமவி நாயக னஞ்சுமிழ் கஞ்சுகி
அணிக சானன விம்பமெ ரம்புலி
மவுலி யாளுறு சிந்தையு கந்தருள்.   இளையோனே

வளரும் வாழையு மஞ்சளும் இஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை   பெருமாளே.

## ௩௬.

தந்தன தந்தன தந்தன

சங்கைதா னென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா   ரம்பமாயன்
சந்தொடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா   னந்தமாயன்

மங்கைமார் கொங்கைசேர் அங்கமோ கங்களால்
வம்பிலே   துன்புறுமே
வண்குகா நின்சொரூ பம்ப்ரகா சங்கொடே
வந்துநீ   அன்பிலாள்வாய்

கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே   விஞ்சையூரா
கம்பியா நிந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே   சன்சொல்வீரா

செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றுமோ   தும்ப்ரதாபா
செங்கண்மால் பங்கசா னன்தொழா னந்தவேள்
செந்தில்வாழ்   தம்பிரானே.

## ௩௨

தனதனன தான தானன தனதனன தான தானன
தனதனன தான தானன தந்தத் தந்தத் தனதான

அருணமணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவவி சால பூரண
அம்பொற் கும்பத் தனமோதி

அளிகுலவு மாதர் லீலையின் முழுகியபி ஷேக மீதென
அறவுமுற வாடி நீடிய
அங்கைக் கொங்கைக் கிதமாகி

இருணிறைய மோதி மாலிகை சருவியுற வான வேளையில்
இழைகலைய மாத ரார்வழி
இன்புற் றன்புற் றழியாதே

இரவுபகல் மோன மாகிய நினதடிய ரோடு யானுமுன்
இணையடிகள் பாடி யாடிட
நெஞ்சிற் செஞ்சொல் தருவாயே

தருணமணி யாட ராவணி குடிலசடி லாதி யோதிய
சதுர்மறையி னாதி யாகிய
சங்கத் துங்கக் குழையாளர்

தருமுருக மேக சாயலர் தமரமக ராழி சூழ்புவி
தனைமுழுதும் வாரி யேயமு
துண்டிட் டண்டர்க் கருள்கூரும்

செருமுதலை வாயின் மேவிய அதிமதக போல மால்கரி
தெளிவினுடன் மூல மேயென
முந்தச் சிந்தித் தருள்மாயன்

திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை யேவிய
செய சரவ ணாம னோகர
செந்திற் கந்தப் பெருமாளே.

௩௩.

தனத்தந்தன தனத்தந்தன தனத்தந்தன தனதான.

தரிக்குங்கலை நெகிழ்க்கும்பர
தவிக்குங்கொடி மதனேவில்
தகைக்குந்தனி நிகைக்குஞ்சிறு
தமிழ்த்தென்றலின் உடனேநின்

றெரிக்கும்பிறை எனப்புண்படு
மெனப்புன்கவி சிலபாடி
இருக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட அறியாரே

அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர
மனுக்குந்தெரி வரிதான
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு
மரற்கும்புரி தவபாரக்

கிரிக்கும்பதன் முனிக்குங்க்ருபை
வரிக்குங்குரு பரவாழ்வே
கிளைக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய பெருமாளே.

## ௩. பழனி (திருவாவினன்குடி)

### ௩௪

தான தந்தன தானன தானன தனதான.

நாத விந்துக லாதீந மோநம
வேத மந்த்ரசொ ரூபாந மோநம
ஞான பண்டித சாமீந மோநம வெகுகோடி

நாம சம்புகு மாராந மோநம
போக அந்தரி பாலாந மோநம
நாக பந்தம யூராந மோநம பரசூரர்

சேத தண்டவி நோதாந மோநம
கீத கிண்கிணி பாதாந மோநம
தீர சம்ப்ரம வீராந மோநம கிரிராஜ

தீப மங்கள சோதீந மோநம
தூய அம்பல லீலாந மோநம
தேவ குஞ்சரி பாகாந மோநம அருள்தாராய்

ஈத லும்பல கோலால பூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராச கெம்பிர நாடாளு நாயக வயலூரா

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

## ௩௫

*தான தந்தன தான தத்தன தனதான.*

மூல மந்திர மோத லிங்கிலை
யீவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை மடவார்கள்

மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் பயிலாத

கோல முங்குண வீன துன்பர்கள்
வார்மை யும்பல வாக வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்

கூடு கொண்டுழல் வேனை யன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே

பீலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு

பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே

ஆல முண்டவர் சோதி யங்கனர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா

ஆர ணம்பயில் ஞான புங்கவ
சேவ லங்கொடி யான பைங்கர
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமானே.

## ௩௫

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன தனதான.

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்

அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே

நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு வினைகோவே

தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

## ௩௭

தனதான தந்தனத் தனதான.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

## ௩௮

*தனனதன தான தந்த தனனதன தான தந்த*
*தனனதன தான தந்த தனதான.*

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள்பல வேதெ ரிந்து மதனாலே

கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி

அரகரசி வாயவென் று தினமுநினை யாமல் நின் று
அறுசமய நீதி யொன் றும் அறியாமல்

அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல்நின் று
அனுதினமு நாண மின் றி அழிவேனோ

உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே

உபயகுல தீப துங்க விருதுகவி ராச சிங்க
உறைபுகலி யூரி லன் று வருவோனே

பரவைமனை மீதி லன் று ஒருபொழுது தூது சென் ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா

பகையசுரர் சேனை கொன் று அமரர்சிறை மீள வென் று
பழனிமலை மீதில் நின் ற பெருமானே.

## ௩௯

*தனன தானன தானா தானா தனதான.*

கலக வாள்விழி வேலோ சேலோ
மதுர வாய்மொழி தேனோ பாலோ
கரிய வார்குழல் காரோ கானோ துவரோவாய்

கனமு நீள்கமு கோதோள் வேயோ
உதர மானது மாலேர் பாயோ
களப வார்முலை மேரோ கோடோ இடைதானும்

இழைய தோமலர் வேதா வானோ
னெழுதி னானிலை யோவாய் பேசீ
ரிதென மோனமி னாரே பாரீர் எனமாதர்

இருகண் மாயையி லேமூழ் காதே
யுனது காவிய நூலா ராய்வே
னிடர்ப டாதருள் வாழ்வே நீயே தரவேணும்

அலைவி லாதுயர் வானோ ரானோர்
நிலைமை யேகுறி வேலா சீலா
அடியர் பாலரு ளீவாய் நீபார் மணிமார்பா

அழகு லாவுவி சாகா வாகா
ரிபமி னாள்மகிழ் கேள்வா தாழ்வா
ரயனு லாவிய சீலா கோலா கலவீரா

வுலைப கேள்வர்பி னானாய் கானார்
குறவர் மாதும னாளா நாளார்
வனச மேல்வரு தேவா மூவா மயில்வாழ்வே

மதுர ஞானவி நோதா நாதா
பழனி மேவுகு மாரா தீரா
மயுர வாகன தேவா வானோர் பெருமானே.

## ௯௦

தனன தனன தனன தனன
தனன தனன தனதான.

தமரு மமரு மனையும் இனிய
தனமும் அரசும் அயலாகத்

தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே

கமல விமல மரகத மணி
கனக மருவும் இருபாதங்

கருத அருளி யெனது தனிமை
கழிய அறிவு தரவேணும்

குமர சமர முருக பரம
குலவு பழனி மலையோனே
கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரும் அவுண ருடலும்
அழிய அமர்செய் தருள்வோனே
அறமும் திறமும் அயிலும் மயிலும்
அழகு முடைய பெருமானே.

௩௧

தனத்த தானன தனதன தனதன தந்ததான.

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியும் உறவோரும்
அடுத்த பேர்களும் இதமுறு மகவொடு வளநாடும்
தரித்த வூருமெ யெனமன நினைவது நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக உபதேசம்
இசைத்த நாவின இதணுறு குறமகள் இருபாதம்
பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
பதிக்கொ ளாறிரு புயபழ னியிலுறை பெருமானே.

௩௨

தானதன தானதன தானதன தானதன தனதான.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ

நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா
சீறிவரு மாறவுணன் ஆவியுணும் ஆனைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழனி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

## ௬௬

தனதனனத் தனதனனத் தனதனனத் தனதான.

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசொர்க் கமுமீதே
இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கொக் கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா
பலவயலிற் றரளநிறைப் பழனிமலைப் பெருமானே

## ௬௭

தானந்த தனன தான தானந்த தனன தான
தானந்த தனன தான தனதான.

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி
நாவின்ப ரசம தான ஆனந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி இருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்

தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்கன் எனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன சோதி
சேர்பங்கின் அமல நாதன் அருள்பாலா
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு முருகோனே
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமணி சேர்வை
காணெங்கள் பழனி மேவு பெருமானே.

## ௪௫

*தனதனன தனதனன தானத் தானத் தனதான.*

ஒருபொழுதும் இருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழ னிமலையெனும் ஊரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனென் ஆசைப் பாடைத் தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமானே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமானே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமானே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப் பெருமானே.

## ௪௬

*தனனதன தான தந்த தனதான.*

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்றன் அருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை அணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழனிமலை வாழ வந்த பெருமானே.

## ௬௭

தனதனன தாத்த தனதான.

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றில் உழலாதே
இசை பயில்ச டாட்ச ரமதாலே
இகபர செளபாக்யம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழனிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

## ௬௮

தனன தனன தனன தனன
தனன தனன தனதான.

திமிர வுததி யனைய நரக
செனனம் அதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவும் நிறையும் வரவேநின்
அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவெ லசுரர் தமது
தலைகள் உருள மிகவேநீள்
சலதி யலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே
வெமர வணையில் இனிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழனி
விரவு மமரர் பெருமானே.

## ௬௯

தனனத்தன தான தந்தன தனனத்தன தான தந்தன
தனனத்தன தான தந்தன தனதான.

பகர்தற்கரி தான செந்தமி ழிசையிற்சில பாடலன்பொடு
பயிலப்பல காவி யங்களை உணராதே
பவளத்தினை வீழி யின்கனி யதனைப்பொரு வாய்மடந்தையர்
பசலைத்தன மேபெ றும்படி விரகாலே
சகரக்கடல் சூழும் அம்புவி மிசையிப்படி யேதி ரிந்துழல்
சருகொத் துளமேய யர்ந்துடல் மெலியாமுன்
தகதித்திமி தாகி ணங்கிண எனவுற்றெழு தோகை யம்பரி
தனிலற் புதமாக வந்தருள் புரிவாயே
நுகர்வித்தக மாகு மென்றுமை மொழியிற்பொழி பாலை யுண்டிடு
நுவல்மெய்ப்புள பாலன் என்றிடும் இளையோனே
நுதிவைத்தக ராம லைந்திடு களிறுக்கரு ளேபு ரிந்திட
நொடியிற்பரி வாக வந்தவன் மருகோனே
அகரப்பொரு ளாதி யொன்றிடு முதலக்கர மான தின்பொருள்
அரனுக்கினி தாமொ ழிந்திடு குருநாதா
அமரர்க்கிறை யேவ ணங்கிய பழனித்திரு வாவி னன்குடி
அதனிற்குடி யாயி ருந்தருள் பெருமானே.

## ௭௦

தான தனதனன தான தனதனன
தான தனதனன தனதான.

சீற லசடன்வினை காரன் முறைமையிலி
தீமை புரிகபடி பவநோயே
தேடு பரிசிகன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதுமிலி எவரோடுங்;
கூறு மொழியதுபொய் யான கொடுமையுள
கோளன் அறிவிலியுன் அடிபேணக்
கூனு னெனினுமெனை நீயுன் அடியரொடு
கூடும் வகைமையருள் புரிவாயே

மாறு படுமவுணர் மாள அமர்பொருது
வாகை யுளமவுலி புனைவோனே
மாக முகடதிர வீசு சிறைமயிலை
வாசி யெனவுடைய முருகோனே;

வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை யுடையோனே
வீரை யுறைகுமர தீர தரபழனி
வேல இமையவர்கள் பெருமானே.

## ருக

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான.

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்

சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோதும் அன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்றன் அடிசேராய்

மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க வடிவேலா

பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழனிமலை மேல மர்ந்த பெருமானே.

## ௫உ

தனதன தனத்தான தானான தானதன தனதான.

தலைவலி மருந்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விடப்பாக மாயாவி காரபிணி அணுகாதே

தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி யெனக்காது கேளாது போலுமவர்
சரியும்வய துக்கேது தாரீர்சொ லீரெனவும் விதியாதே

உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரணம்
உனதடி யினிற்சூட வேநாடு மாதவர்கள் இருபாத

உளமது தரித்தேவி ஞானோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தானுதவ
உரகம தெடுத்தாடு மேகார மீதின்மிசை வரவேணும்

அலைகட லடைத்தேம காகோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான சானகியை
அடலுட னழைத்தேகொள் மாயோனை மாமனெனும் மருகோனே

அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேயெனவும் வருவோனே

பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
யிருசரணா வித்தார வேலாயு தாவுயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவமோகமுறு மணவாளா

பதுமவய லிற்பூத மீதேவ ராலகள் துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழனிவரு கற்பூர கோலாக லாவமரர் பெருமானே.

## ௫௩

தத்தத்தத் தத்தத் தத்தன தனதான.

முத்துக்குச் சிட்டுக் குப்பிமு
டித்துச்சுக் கைப்பிற் சுற்றியு
முற்பக்கத் திற்பொற் புற்றிட நுதல்மீதே

முக்யப்பச் சைப்பொட் டிட்டணி
ரத்நச்சுட் டிப்பொற் பட்டிவை
முச்சட்டைச் சித்ரக் கட்டழ கெழிலாடத்

தித்திக்கச் சொற்சொற் றுப்பிதழ்
நச்சுக்கட் கற்புச் சொக்கியர்
செப்புக்கொக் கக்கச் சுப்பெறு தனமேருத்

திட்டத்தைப் பற்றிப் பற்பல
லச்சைக்குட் பட்டுத் தொட்டுயிர்
சிக்கிச்சொக் கிக்கெட் டிப்படி உழல்வேனோ

மெத்தத்துக் கத்தைத் தித்தியி
னிச்சித்தத் திற்பத் தத்தொடு
மெச்சிச்சொர்க் கத்திற் சிற்பரம் அருள்வாயே

வித்தைக்குக் கர்த்தத் தற்பர
முக்கட்சித் தர்க்குப் புத்திர
விச்சித்ரச் செச்சைக் கத்திகை புனைவோனே

நித்யக்கற் பத்திற் சித்தர்க
ளெட்டுத்திக் குக்குட் பட்டவர்
திட்டைக்கற் புற்றப் பத்தர்கள் அமரோரும்

நெட்டுக்குப் புட்பத் தைக்கொடு
முற்றத்துற் றர்ச்சிக் கப்பழ
னிக்குட்பட் டத்துக் குற்றுறை பெருமாளே.

## ருரு

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான தனதான.

ஒருவரை ஒருவர் தேறி அறிகிலர் மதவி சாரர்
ஒருகுண வழியு றாத பொறியாளர்
உடலது சதமெ னாடி களவுபொய் கொலைக ளாடி
உறநம னரகில் வீழ்வர் அதுபோக

வருமொரு வடிவ மேவி இருவினை கடலு ளாடி
மறைவரி னனைய கோலம் அதுவாக
மருவிய பரம ஞான சிவகதி பெறுக நீறு
வடிவுற உதவு பாதம் அருள்வாயே

திரிபுர மெரிய வேழ சிலைமத னெரிய மூரல்
திருவிழி அருள்மெய்ஞ் ஞான குருநாதன்
திருசரஸ் வதிம யேசு வரியிவர் தலைவ ரோத
திருநட மருளு நாதன் அருள்பாலா

சுரர்பதி அயனும் மாலும் முறையிட அசுரர் கோடி
துகளெழ விடுமெய்ஞ் ஞான அயிலோனே
சுககுற மகள்ம ணாள னெனமறை பலவு மோதி
தொழமுது பழனி மேவு பெருமாளே.

## ருரு

தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன
தனத்ததன தனத்ததன தனத்தன தனதன தனதான.

கருப்புவிலில் மருப்பகழி தொடுத்துமதன் விடுத்தனைய
கடைக்கணொடு சிரித்தணுகு
கருத்தினால் விரகுசெய் மடமாதர்

கதக்களிறு திடுக்கமுற மதர்த்துமிக எதிர்த்துமலை
கனத்தவிரு தனத்தின் மிசை
கலக்குமோ கனமதில் மருளாமே

ஒருப்படுதல் விருப்புடைமை மனத்தில்வர நினைத்தருளி
உனைப்புகழு மெனைப்புவியில்
ஒருத்தனும் வகைதிரு அருளாலே
உருத்திரனும் விருத்திபெற அனுக்கிரகி எனக்குருகி
உரைக்கமறை அடுத்துபொருள்
உணர்த்துநா ளடிமையும் உடையேனோ

பருப்பதமும் உருப்பெரிய அரக்கர்களும் இரைக்குமெழு
படிக்கடலு மலைக்கவல
பருத்ததோ கையில்வரு முருகோனே
பதித்தமர கதத்தினுட னிரத்நமணி நிரைத்தபல
பணிப்பனிரு புயச்சயில
பரக்கவே இயல்தெரி வயலூரா

திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளும் இசைப்பிரிய
திருத்தமா தவர்புகழ் குருநாதா
சிலைக்குறவ ரிலைக்குடிலில் புகைக்களக முகிற்புடைசெல்
திருப்பழனி மலைக்குளுறை
திருக்கைவே லழகிய பெருமானே.

(இப்பாட்டின் ஒவ்வோரடியிலுமுள்ள ஈற்றுவரிகளைச் சேர்த்தால் கீழ்வரும் பாடல் அமைதல் காண்க.)

### ௫௪

தனத்தன தனதன தனதான.

கருத்தினுல் விரகுசெய் மடமாதர்
கலக்குமோ கனமதில் மருளாமே
ஒருத்தனும் வகைதிரு வருளாலே
உணர்த்துநா ளடிமையும் உடையேனோ
பருத்ததோ கையில்வரு முருகோனே
பரக்கவே இயல்தெரி வயலூரா
திருத்தமா தவர்புகழ் குருநாதா
திருக்கைவே லழகிய பெருமானே.

## ருஎ

தனன தனதனன தந்தத்த தந்ததன    தனதான.

அதல விதலமுத லந்தத்த லங்களென
அவனி எனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென அங்கிபானு

அமுத கதிர்களென அந்தத்த மந்த்ரமென
அறையு மறையெனஅ ருந்தத்து வங்களென
அணுவி லணுவெனநி றைந்திட்டு நின்றதொரு சம்ப்ரதாயம்

உதய மெழஇருள்வி டிந்தக்க ணந்தனிலி
ருதய கமலமுகி ழ்ங்கட்ட விழ்ந்துணர்வில்
உணரு மநுபவம னம்பெற் றிடும்படியை வந்துநீமுன்

உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற் றிருந்துபுகழ்
உரிய அடிமையுனை அன்றிப்ர பஞ்சமதை நம்புவேனே

திதத ததததத தந்தத்த தந்ததத
திதிதி திதிதிதி திந்தித்தி திந்திதிதி
தகுகு தகுதகுகு தந்தத்த தத்தகுகு திந்திதோதி

சகக சககெணக தந்தத்த குங்கெணக
டிடிடி டிடிடிடிடி டிண்டிட்டி டிண்டிடிடி
தகக தகதகக தந்தத்த தந்ததக என்றுதாளம்

பதலை திமிலைதுடி தம்பட்ட மும்பெருக
அகில நிசிசரர்ந டுங்கக்கொ டுங்கழுகு
பரிய குடர்பழுவெ லும்பைப்பி டுங்கரண துங்ககாளி

பவுரி இட்டநரிபு லம்பப்ப ருந்திறகு
கவரி இடவிகலை வென்றுச்சி கண்டிதனில்
பழனி மலையின்மிசை வந்திக்கும் இந்திரர்கள் தம்பிரானே.

## ருஅ

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன தனதான.

கடலை பொரியவரை பலக னிகளை நுகர்
　　கடின குடவுதர　　விபரீத
கரட தடமுமத நளின சிறுநயன
　　கரிணி முகவரது　　துணைவோனே
வடவ ரையின்முகடு அதிர ஒருநொடியில்
　　வலம்வ ருமரகத　　மயில்வீரா
மகப திதருசுதை குறமி னுடிருவரு
　　மருவு சரசவித　　மணவாளா
அடல சுரர்கள்குல முழுது மடியவுயர்
　　அமரர் சிறையைவிட　　எழில்மீறும்
அருண கிரணவொளி ஒளிரு மயிலைவிடும்
　　அரக ரசரவண　　பவலோலா
படல உடுபதியை இதழி அணிசடில
　　பசுப திவரநதி　　அழகான
பழனி மலையருள்செய் மழலை மொழிமதலை
　　பழனி மலையில்வரு　　பெருமாளே.

## ருகூ

தனனு தனனு தனதான.

வரதா மணிநீ　　எனவோரில்
　　வருகா ததுதான்　　அதில்வாரா
திரதா திகளால்　　நவலோகம்
　　இடவே கரியாம்　　இதிலேது
சரதா மறையோ　　தயன்மாலும்
　　சகலா கமநூல்　　அறியாத
பரதே வதையாள்　　தருசேயே
　　பழனு புரிவாழ்　　பெருமாளே.

# ௪. சுவாமிமலை (திருவேரகம்)

## கா௦

*தனனதன தானதத்த தனனதன தானதத்த*
*தனனதன தானதத்த தனதான.*

சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம் அணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

## கா௧

*தான தனதன தான தனதன*
*தான தனதன தனதான.*

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா

காது மொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமானே.

௬௨

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான.

வாதமொடு சூலை கண்ட மாலைகுலை நோவு சந்து
மாவலிவி யாதி குன்ம மொடுகாசம்
வாயுவுட னேப ரந்த தாமரைகள் பீனசம்பின்
மாதர்தரு பூட ணங்கள் எனவாகும்
பாதகவி யாதி புண்கள் ஆனதுட னேதொ டர்ந்து
பாயலைவி டாது மங்க இவையால்நின்
பாதமல ரான தின்க ணேயமற வேம றந்து
பாவமது பான முண்டு வெறிமூடி
ஏதமுறு பாச பந்த மானவலை யோடு மன்று
ஈனமிகு சாதி யின்கண் அதிலேயான்
ஈடழித லான தின்பின் மூடனென வோது முன்புன்
ஈரவருள் கூரவந்து எனையாள்வாய்
சூதமகிழ் பாலை வன்னி தாதுவளர் சோலை துன்றி
சூழுமதில் தாவி மஞ்சின் அளவாகத்
தோரண நன் மாட மெங்கு நீடுகொடி யேத ழைந்த
சுவாமிமலை வாழ வந்த பெருமானே.

### சங

தானன தானதத்த தானன தானதத்த
தானன தானதத்த தனதான.

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்குன் அருள்கூர
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாவனைச்சொல் அருள்வாயே
சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரர்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமானே.

### சச

தனதன தனதன தனதான.

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமானே.

௬௩

தானதத்த தந்த தனதான.

காமியத்த ழுந்தி இளையாதே
கால்ர்கைப்ப டிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்தம் அருள்வாயே
தூமமெய்க்க ணிந்த சுகலீலா
சூரனைக்க டிந்த கதிர்வேலா
ஏமவெற்பு யர்ந்த மயில்வீரா
ஏரகத்த மர்ந்த பெருமாளே.

௬௪

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனதான.

குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான
குழக சிவசுத சிவய நமவென
குரவன் அருள்குரு மணியேயென்

றமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதினம் உனையோதும்
அமலை அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுரல் அறியாயோ

திமிர எழுகடல் உலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்
சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா

நமனை யுயிர்கொளும் அழலின் இணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா
நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே.

## ௬௯

தனதான தத்த தந்த தனதான தத்த தந்த
தனதான தத்த தந்த தனதான.

கடிமாம லர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமாக டப்ப மைந்த தொடைமாலை
கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா
வடிவார்கு றத்தி தன்பொ னடிமீது நித்த முந்தன்
முடியான துற்று கந்து பணிவோனே
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்கி ணங்க உலகாமு வப்ப என்று
னருளால ளிக்கு கந்த பெரியோனே
அடியே னுரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
னருளேத ழைத்து கந்து வரவேணும்
செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்கண் உறலாமோ
திறமாத வர்க்க ணிந்துன் இருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமானே.

## ௬௮

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான தனதான.

இருவினை புனைந்து ஞான விழிமுனை திறந்து நோயி
னிருவினை யிடைந்து போக மலமூட
இருளற விளங்கி யாறு முகமொடு கலந்து பேத
மிலையென இரண்டு பேரும் அழகான
பரிமள சுகந்த வீத மயமென மகிழ்ந்து தேவர்
பணியவிண் மடந்தை பாத மலர்தூவப்
பரிவுகொ டனந்த கோடி முனிவர்கள் புகழ்ந்து பாட
பருமயி லுடன்கு லாவி வரவேணும்

அரியய னறிந்தி டாத அடியிணை சிவந்த பாதம்
அடியென விளங்கி யாடு நடராசன்
அழலுரு மிரும்பின் மேனி மகிழ்மர கதம்பெ ணாகம்
அயலணி சிவன்பு ராரி அருள்சேயே

மருவலர் கள்திண்ப ணார முடியுடல்ந டுங்க ஆவி
மறலியுண வென்ற வேலை யுடையோனே
வளைகுல மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே.

## சௗ௩௰

தனதனன தானதன தானதன தானதன
தனதனன தானந் தனதான.

அவாமருவி னாவுசுவை காணுமட வாரெனுமை
வார்கனலில் வாழ்வென் றுணராதே
அராநுகர வாதையுறு தேரைகதி நாடுமறி
வாகியுள மால்கொண் டதனாலே

சிவாயநம நாமமொரு காலுநினை யாததிமி
ராகரனை வாவென் றருள்வாயே
திரோதமல மாறுமடி யார்களரு மாதவர்தி
யானமுறு பாதந் தருவாயே

உவாவினிய காவினிலு லாவுமயில் வாகனமு
லாசமுட னேறுங் கழலோனே
உலாவுதய பானுசத கோடியுரு வானவொளி
வாகுமயில் வேலங் கையிலோனே

துவாதசபு யாசலச டானனவ ராசிவசு
தாவெயினர் மானன் புடையோனே
சுராதிபதி மாலயனு மாலொடு சலாமிடுசு
வாமிமலை வாழும் பெருமாளே.

# ரு. குன்றுதோருடல்

## ௭௦

தனனந் தனன தந்த தனதான.

அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலுமு மர்ந்த பெருமாளே.

## ௭௧

தந்தன தான தான தந்தன தான தான
தந்தன தான தான தனதான.

வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரி காரி யென்றிசை வாது கூறி
வந்தியர் போல வீணில் அழியாதே
செஞ்சர ணாத கீத கிண்கிணி நீப மாலை
திண்டிறல் வேல்ம யூர முகமாறும்
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொல் அருள்வாயே
பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாப மோடு
பஞ்சற வாது கூறு சமண்மூகர்
பண்பறு பீலி யோடு வெங்கழு வேற வோது
பண்டித ஞான நீறு தருவோனே
குஞ்சரம் யாளி மேவு பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி வெறியாடிக்
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதொ றாடல் மேவு பெருமாளே.

# 1. திருத்தணிகை

## எ௨

தனதான தனத்தன தான தனதான.

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனாலே

நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினவால்நி னடித்தொழில் பேணி துதியாமல்

தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகி தடுமாறித்

தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநின் அருள்தாராய்

கலியாண சுபுத்திர னாக
குறமாது தனக்குவி நோத
கவினாரு புயத்திலு லாவி விளையாடிக்

கவிகூறு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனாகு மிதுக்கன மாகு முருகோனே

பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வோனே

பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமானே.

## ௭௩.

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந் தனதான.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
தளத்துட னடக்கும் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

## ௭௪

தனன தந்த தத்த தனன தந்த தத்த
தனன தந்த தத்த தனதான.

எனைய டைந்த குட்டம் வினைமி குந்த பித்த
மெரிவ ழங்கு வெப்பு வலிபேசா
இகலி நின்ற லைக்கு முயல கன்கு லைப்பொ
டிரும லென்று ரைக்கும் இவையோடே
மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
மதிம யங்கி விட்டு மடியாதே
மருவி யின்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
மயிலில் வந்து முத்தி தரவேணும்

நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
நெறியில் நின்ற வெற்றி முனைவேலா
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கு முருகோனே
தினைவி ளங்க லுற்ற புனஇ ளங்கு றத்தி
செயல றிந்த ணைக்கு மணிமார்பா
திசைமு கன்றி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே.

## எரு

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதான.

அரகர சிவனரி அயனிவர் பரவிமுன்
அறுமுக சரவண பவனேயென்
றநுதின மொழிதர அசுரர்கள் கெடஅயில்
அனலென எழவிடும் அதிவீரா
பரிபுர கமலம தடியிணை யடியவ
ருளமதி லுறவருள் முருகேசா
பகவதி வரைமக ளுமைதர வருகுக
பரமன திருசெவி களிகூர
உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர உயர்வாய
உலகம னலகில உயிர்களும் இமையவ
ரவர்களு முறுவர முனிவோரும்
பரவிமுன் அநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையில் உறைவோனே
பகர்தரு குறமகள் தருவமை வனிதையும்
இருபுடை யுறவரு பெருமாளே.

## எ௬

*தனதன தான தனதன தான*
*தனதன தான தனதான.*

இருமலு ரோக முயலகன் வாத
எரிகுண நாசி விடமேநீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை இவையோடே
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்
பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்கள் அருள்வாயே
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

## எஎ

*தான தத்தன தான தத்தன தந்ததான.*

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேனவ த்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னாவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீசமுட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை எங்கள்கோவே
ஓத மெய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழல்
ஓசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே.

## எ௬

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன தனதான.

இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை அறுத்திடும் எனவோதும்
இசைத்தமிழ் நடத்தமி ழெனத்துறை விருப்புடன்
இலக்கண இலக்கிய கவிநாலும்
தரிப்பவ ருரைப்பவர் நினைப்பவர் மிகச்சக
தலத்தினில் நவிற்றுதல் அறியாதே
தனத்தினில் முகத்தினில் மனத்தினி லுருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் விழலாமோ
கருப்புவில் வளைத்தணி மலர்க்கணை தொடுத்தியல்
களிப்புடன் ஒளித்தெய்த மதவேளைக்
கருத்தினில் நினைத்தவன் நெருப்பெழ நுதற்படு
கனற்கணில் எரித்தவர் கயிலாயப்
பொருப்பினில் இருப்பவர் பருப்பத உமைக்கொரு
புறத்தினை அளித்தவர் தருசேயே
புயற்பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு பெருமானே.

## எகூ

தனன தனத்தன தனன தனத்தன தனதான.

குருவி எனப்பல கழுகு நரித்திரள்
அரிய வனத்திடை மிருக மெனப்புழு
குறவை எனக்கரி மரமு மெனத்திரி உறவாகா

குமரி கலித்துறை முழுகி மனத்துயர்
கொடுமை எனப்பிணி கலக மிடத்திரி
குலைய னெனப்புலை கலிய னெனப்பலர் நகையாமல்

மருவு புயத்திடை பணிக ளணப்பல
கரிபரி சுற்றிட கலைகள் தரித்தொரு
மதன சரக்கென கனக பலக்குடன் அதுதேடேன்

வரிய பதத்தினி னருவி இருப்பிடம்
அமையு மெனக்கிடம் உனது பதச்சரண்
மருவு திருப்புக ழருள எனக்கினி அருள்வாயே

விருது தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட்டுடு ரிரிரி எனக்குகு வெகுதாளம்

வெருவ முகிழ்த்திசை உரகன் முடித்தலை
நெறுநெ றெனத்திசை அதிர அடைத்திட
மிகுதி கெடப்பொரும் அசுரர் தெறித்திட விடும்வேலா

அரிய திரிப்புரம் எரிய விழித்தவன்
அயனை முடித்தலை அரியு மழுக்கையன்
அகில மனைத்தையும் உயிரும் அளித்தவன் அருள்சேயே

அமண ருடற்கெட வசியில் அழுத்திவிண்
அமரர் கொடுத்திடும் அரிவை குறத்தியொ
டழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமானே.

## அ௰

தனன தானதந் தனன தானதந்
தனன தானதந் தனதான.

பகலி ராவினுங் கருவி யாலனம்
பருகி யாவிகொண் டுடல்பேணிப்
பழைய வேதமும் புதிய நூல்களும்
பலபு ராணமுஞ் சிலவோதி
அகல நீளமென் றளவு கூறரும்
பொருளி லேயமைந் தடைவோரை
அசடர் மூகரென் றவல மேமொழிந்
தறிவி லேனழிந் திடலாமோ
சகல லோகமும் புகல நாடொறுஞ்
சறுகி லாதசெங் கழுநீரும்
தளவு நீபமும் புனையு மார்பதென்
தணிகை மேவுசெங் கதிர்வேலா
சிகர பூதரந் தகர நான்முகன்
சிறுகு வாசவன் சிறைமீளத்
திமிர சாகரங் கதற மாமரஞ்
சிதற வேல்விடும் பெருமானே.

## அக

தத்த தத்த தத்த தத்த தனதான.

பொற்ப தத்தி னைத்து தித்து
நற்ப தத்தி லுற்ற பத்தர்
பொற்பு ரைத்து நெக்கு ருக்க அறியாதே
புத்த கப்பி தற்றை விட்டு
வித்த கத்து னைத்து திக்க
புத்தி யில்க லக்க மற்று நினையாதே

முற்ப டத்த லத்து தித்து
பிற்ப டைத்த கிர்த்ய முற்றி
முற்க டைத்த வித்து நித்தம் உழல்வேனை

முட்ட விக்க டைப்பி றப்பி
னுட்கி டப்ப தைத்த விர்த்து
முத்தி சற்றெ னக்க ளிப்ப தொருநாளே

வெற்ப ளித்த தற்ப ரைக்கி
டப்பு றத்தை யுற்ற ளித்த
வித்த கத்தர் பெற்ற கொற்ற மயில்வீரா

வித்தை தத்வ முத்த மிழ்ச்சொ
லத்த சத்தம் வித்த ரிக்கு
மெய்த் திருத்த ணிப்பொ ருப்பில் உறைவோனே

கற்ப கப்பு னக்கு றத்தி
கச்ச டர்த்த சித்ர முற்ற
கற்பு ரத்தி ருத்த னத்தில் அணைவோனே

கைத்த ரக்கர் கொத்து கச்சி
னத்து வச்ர னுக்க மைத்த
கைத்தொ ழுத்த றித்து விட்ட பெருமானே.

## 2. திருவேங்கடம்

### அ௨

தனதாந்தன தானன தானன தனதான.

வரிசேர்ந்திடு சேல்கய லோவெனு
முழைவார்ந்திடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வாள்விழி மாதர்கள் வலையாலே

வளர்கோங்கிள மாமுகை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளமாந்தளிர் போல்நிற மாகிய வடிவாலே

இருள்போன்றிடு வார்குழல் நீழலில்
மயல்சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கினி வாயமு தூறல்கள் பருகாமே

எனதாந்தன தானவை போயற
மலமாங்கடு மோகவி காரமும்
இவைநீங்கிட வேயிரு தாளினை அருள்வாயே

கரிவாம்பரி தேர்திரள் சேனையும்
உடனாந்துரி யோதன னாதிகள்
களமாண்டிட வேயொரு பாரதம் அதிலேகிக்

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி ரகுராமன்

திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடிதோங்கும ராமர மேழொடு
தெசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாகச்

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய பெருமானே.

## அரு

தனத்ததன தனன தனந்த தனதான.

கறுத்ததலை வெளிறு மிகுந்து
மதர்த்தஇணை விழிகள் குழிந்து
கதுப்பிலுறு தசைகள் வறண்டு செவிதோலாய்க்

கழுத்தடியு மடைய வளைந்து
கனத்தநெடு முதுகு குனிந்து
கதுப்புறுபல் அடைய விழுந்து தடுநீர்சோர்

உறக்கம்வரு மளவில் எலும்பு
குலுக்கிவிடும் இருமல் தொடங்கி
உரத்தகன குரலும் நெரிந்து தடிகாலாய்

உரத்தநடை தளரும் உடம்பு
பழுத்திடுமுன் மிகவும் விரும்பி
உனக்கடிமை படுமவர்தொண்டு புரிவேனோ

சிறுத்தசெலு வதனு ளிருந்து
பெருத்ததிரை உததி கரந்து
செறித்தமறை கொணர நிவந்த செயமாலே

செறித்தவளை கடலில் வரம்பு
புதுக்கியிலை யவனொ டறிந்து
செயிர்த்தவனு மனையும் உகந்து படையோடி

மறப்புரிசை வளையும் இலங்கை
அரக்கனொரு பதுமு டிசிந்த
வளைத்தசிலை விசய முகுந்தன் மருகோனே

மலர்க்கமல வடிவு ளசெங்கை
அயிற்குமர குகைவ ழிவந்த
மலைச்சிகர வடமலைநின்ற பெருமானே.

## 3. கதிர்காமம்

### அச

தனன தான தத்த தனதான.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர் காம வெற்பில் உறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமானே.

## அரு

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதான.

திருமகளு லாவும் இருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்

மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்

அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்

இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

## அசுஎ

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனோ

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருடவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுவைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமானே.

## 4. இரத்நகிரி (வாட்போக்கி)

### அ௭

தத்தன தானனத் தனதான.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

## 5. வள்ளிமலை

### அஅ

தையதன தான தையதன தான
தையதன தானத் தனதான.

அல்லிவிழி யாலும் முல்லைநகை யாலும்
அல்லல்பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தாகி நள்ளிரவு போலும்
உள்ளவினை யாரத் தனமாரும்

இல்லுமிளை யோரும் மெல்லஅய லாக
வல்லெருமை மாயச் சமனாரும்

எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்

தொல்லைமறை தேடி இல்லையெனு நாதர்
சொல்லுமுப தேசக் குருநாதா

துள்ளிவிளையாடு புள்ளியுழை நாண
வெள்ளிவன மீதுற் றுறைவோனே

வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லவடி வேலைத் தொடுவோனே

வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமணவாளப் பெருமானே.

## 6. திருக்கழுக்குன்றம்

### ௮௩

தான தத்த தான தத்த தான தத்த தனதான.

வேத வெற்பி லேபு னத்தில் மேவி நிற்கும் அபிராம
வேடு வச்சி பாத பத்ம மீது செச்சை முடிதோய
ஆத ரித்து வேளை புக்க ஆறி ரட்டி புயநேய
ஆத ரத்தொ டாத ரிக்க ஆன புத்தி புகல்வாயே
காது முக்ர வீர பத்ர காளி வெட்க மகுடாமா
கார முட்ட வீசி விட்ட காலர் பத்தி இமையோரை
ஓது வித்த நாதர் கற்க வோது வித்த முனிநாண
ஒரெ ழுத்தில் ஆறெ ழுத்தை யோதுவித்த பெருமானே.

# 7. திரிசிராப்பள்ளி

## ௬௦

தத்த தாந தநதன தத்த தாந தநதன
தத்த தாந தநதன தனதான.

சத்தி பாணீ நமோநம முத்தி ஞானீ நமோநம
தத்வ வாதீ நமோநம விந்துநாத
சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
தற்ப்ர தாபா நமோநம என்றுபாடும்

பத்தி பூண மலையுல கத்தின் மாநுர் சவாதகில்
பச்சை பாடீ ரபூஷித கொங்கைமேல்வீழ்
பட்டி மாடா னநாளுனை விட்டி ராமே யுலோகித
பத்ம சீர்பா தநீயினி வந்துதாராய்

அத்ர தேவா யுதாசுர ருக்ர சேந பதீசுசி
யர்க்ய சோமா சியாகுரு சம்ப்ரதாயா
அர்ச்ச நாவா கநவய லிக்குள் வாழ்நா யகாபுய
அட்ச மாலா தராகுற மங்கைகோவே

சித்ர கோலா கலாவிர லச்மி சாதா ரதாபல
திக்கு பாலா சிவாகம தந்த்ரபோத
சிட்ட நாதா சிராமலை அப்பர் சாமீ மகாவ்ருத
தெர்ப்பை ஆசா ரவேதியர் தம்பிரானே.

## ௬௧

தந்தாதன தானன தாத்தன தனதான.

அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகித சூத்திரம்
மம்போருக ளாடிய பூட்டிது இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கிய
லங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்

வந்தோமிது வேகதி யாட்சியும்
இந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்

வந்தேவெகு வாநமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மறவாதே

திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னாதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்

செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
செண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே

இந்தோடிதழ் நாகம காக்கடல்
கங்காளமி னார்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திரன் அருள்பாலா

என்கூடரு ளால்நெளவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராப்பளி
என்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே.

௬௨

தானத்தத் தான தானன தந்ததான.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே

மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத

ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்

யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ

ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே

ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா

நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே.

## 8. விராலிமலை

### ௬௫

தானன தான தான தனதன தனதான.

சீரான கோல கால நவமணி
மாலாபி டேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்

சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளும் நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
சீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்

ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடும் இறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்

ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா

கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே

கோடாம லார வார யலையெறி
காவேரி யாறு பாயும் வயலினில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமானே.

௩௪

தனதனன தானன தனதனன தானன
தனதனன தானன தனதான.

கரிபுராரி காமாரி திரிபுராரி தீயாடி
கயிலையாளி காபாலி கழையோனி

கரவுதாச னாசாரி பரசுபாணி பாணாளி
கணமொடாடி காயோகி சிவயோகி

பரமயோகி மாயோகி பரியராச டாசூடி
பகரொணாத மாஞானி பசுவேறி

பரதமாடி கானாடி பரவயோதி காதீத
பரமஞான வூர்பூத அருளாயோ

சுருதியாடி தாதாவி வெருவியோட மூதேவி
துரககோப மீதேறி வடமேரு
சுழலவேலை தீமூள அழுதளாவி வாய்பாறி
சுரதினோடு சூர்மாவ உலகேழும்
திகிரிமாதி ராவார நிகிரிசாய வேதாள
திரளினோடு பாரேறு கழுகாடச்
செருவினூடு வாளீப கருணைமேரு வேபார
திருவிராலி யூர்மேவு பெருமாளே.

# சுஎரு

தானன தான தானன தான
தானன தான தனதான.

மாலாசை கோப மோயாதெ நாளு
மாயாவி கார வழியேசெல்
மாபாவி காளி தானேனும் நாத
மாதாபி தாவும் இனிநீயே
நாலான வேத நூலாக மாதி
நானோதி னேனும் இலைவீணே
நாள்போய்வி டாம லாறாறு மீதில்
ஞானோப தேசம் அருள்வாயே
பாலாக லார ஆமோத லேப
பாடீர வாக அணிமீதே
பாதான பூமி ஆதார மீன
பானீய மேலை வயலூரா
வேலாவி ராலி வாழ்வேச மூக
வேதாள பூத பதிசேயே
வீராக டோர சூராரி யேசெ
வேளேசு ரேசர் பெருமாளே.

**௬௯**

*தந்த தானன தான தனதன [illegible] தனதான.*

ஐந்து பூதமும் ஆறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப

அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்

சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக உறைவது சிவயோகம்

தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ

வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி

வன்கண் வீரிபி டாரி அரஅர
சங்க ராவென மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை உருவிய வயலூரா

வெந்த நீறணி வேணி இருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகல் முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்சு வீசுவி ராலி மலையுறை பெருமானே.

## சுஎ

தனதான தானதத்த தனதான தானதத்த
தனதான தானதத்த தனதான.

உருவேற வேசெபித்து ஒருகோடி யோமசித்தி
யுடனாக ஆகமத்து கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாதுவோ ரெழுத்தை
யொழியாது லூதை விட்டி ருந்துநாளும்
தரியாத போதகத்தர் குருவாவ ரோரொருத்தர்
தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மொளிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை கண்டிலேனே
குருநாடி ராசரிக்கர் துரியோத னாதிவர்க்க
குடிமாள மாயமிட்டு குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி யெழுபாரை யாளவிட்ட
குறளாக னூறில்நெட்டை கொண்டஆதி
மருகாபு ராரிசித்தன் மகனே விராலிசித்ர
மலைமே லுலாவுசித்த அங்கைவேலா
மதுராபு ரேசர்மெய்க்க அரசாளு மாறன்வெப்பு
வளைகூனை யேநிமிர்த்த தம்பிரானே.

## சுஅ

தனுதன தனுதன தனுதன தனுதன
தனுதன தனுதனத் தனதான.

நிராமய புராதன பராபர வராம்ருத
நிராகுல சிராதிகப் ப்ரபையாகி
நிராசசி வராசத வராசர்கள் பராவிய
நிராயுத புராரியச் சுதன்வேதா
சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூபமி வராதியைக் குறியாமே
துரால்புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் றடைவேனோ

இராகவ இராமன்முன் இராவண இராவண
இராவண இராசனுட் குடன்மாய்வென்
றிராகன்ம லராணிஜ புராணர்கு மராகலை
இராசசொ லவாரணர்க் கிளையோனே
விராகவ சுராதிப பொராதுத விராதடு
விராயண பராயணச் செருவூரா
விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிம லைராசதப் பெருமாளே

## 9. பிரான்மலை

௩௯௯

தனந்த தந்தந் தந்தந் தந்தந் தந்தான.

அனங்க னம்பொன் றஞ்சுந் தங்குங் கண்களாலே
அடர்ந்தெ ழும்பொன் குன்றங் கும்பங் கொங்கையாலே
முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே
முடங்கு மென்றன் தொண்டுங் கண்டின் றின்புறாதோ
தெனந்தெ னந்தெந் தெந்தெந் தெந்தெந் தெந்தெனானெ
செறிந்த டர்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலை
கொழுங்கொ டுந்திண் குன்றந் தங்குந் தம்பிரானே.

## 10. குன்றக்குடி

௪௦௦

தனதன தந்தத் தனதன தந்தத்
தனதன தந்தத் தனதான.

பிறர்புக ழின்சொற் பயிலுமி ளந்தைப்
பருவம தன்கைச் சிலையாலே
பிறவித ருஞ்சிக் கதுபெரு கும்பொய்ப்
பெருவழி சென்றக் குணமேவிச்

சிறுமைபொ ருந்திப் பெருமைமு டங்கிச்
செயலுமழிந்தற் பமதான
தெரிவையர் தங்கட் கயலேவி ரும்பிச்
சிலசில பங்கப் படலாமோ

கெறுவித வஞ்சக் கபடமொ டெண்டிக்
கிலுமெதிர் சண்டைக் கெழுசூரன்
கிளையுடன் மங்கத் தலைமுடி சிந்தக்
கிழிபட ஒன்றிப் பொருதோனே

குறுமுனி இன்பப் பொருள்பெற அன்றுற்
பனமனு வுஞ்சொற் குருநாதா
குலகிரி துங்கக் கிரிபுயர் குன்றக்
குடிவளர் கந்தப் பெருமானே.

## 11. விநாயகமலை

கoக

தனதன தானு தனுதன தனதன தானு தனுதன
தனதன தானு தனுதன தனதான.

சரவண சாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம
தருணக தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம சகதீச

பரமசொ ரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருட சீலா நமோநம அருள்தாராய்

இரவியு மாகா சபூமியும் விரவிய தானே றவானவ
ரெவர்களு மீடே றவேழ்கடல் முறையோவென்
றிடர்பட மாமே ருபூதர மிடிபட வேதா னிசாசர
ரிகல்கெட மாவே கநீடயில் விடுவோனே

மரகத ஆகா ரவாயனு மிரணிய ஆகா ரவேதனும்
வசுவெனு மாகா ரவிசனும் அடிபேண
மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீதர
வனசர ராதா ரமாகிய பெருமாளே.

## 12. திருச்செங்கோடு

கo௨

*தந்தான தந்த தந்தான தந்த தனதான.*

அன்பாக வந்து உன்றாள்ப ணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல்
அன்பால்மி குந்து நஞ்சாரு கண்க
ளம்போரு கங்கள் முலைதானும்
கொந்தேமி குந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்
கொண்டேநி னைந்து மன்பேது மண்டி
குன்றுமலைந்து அலைவேனோ
மன்றாடி தந்த மைந்தாமி குந்த
வம்பார்க டம்பை அணிவோனே
வந்தேப ணிந்து நின்றார்ப வங்கள்
வம்பேதொலைந்த வடிவேலா
சென்றேயி டங்கள் கந்தாஎ னும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்ச மொன்றாய்வ ளர்ந்த
செங்கோட மர்ந்த பெருமாளே.

கoரு.

*தனதன தனதன தனதன தனதன*
*தந்தான தந்த தனதான.*

கரையற உருகுதல் தருகயல் விழியினர்
கண்டான செஞ்சொல் மடமாதர்
கலவியில் முழுகிய நெறியினில் அறிவுக
லங்காம யங்கும் வினையேனும்

உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்
உன்பாத கஞ்ச மலர்மீதே
உரவொடு புனைதர நினைதரும் அடியரொ
டொன்ருக என்று பெறுவேனே
வரையிரு துணிபட வளைபடு சுரர்குடி
வந்தேற இந்த்ர புரிவாழ
மதவித கசரத துரகத பததியின்
வன்சேனை மங்க முதுமீன
திரைமலி சலநிதி முறையிட நிசிசரர்
திண்டாட வென்ற கதிர்வேலா
செகதல மிடிகெட விளைவன வயலணி
செங்கோட மர்ந்த பெருமாளே.

## கoச

தனன தனதன தனதன தனதன தனதான.

கொடிய மறலியும் அவனது கடகமும்
மடிய வொருதினம் இருபதம் வழிபடு
குதலை யடியவன் நினைதருள் கொடுபொரும் அமர்காண
குறவர் மகள்புணர் புயகிரி சமுகமும்
அறுமு கமும்வெகு நயனமும் ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட இருதிசை இருநாலும்
படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி திகிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறிப்
பழைய அடியவ ருடனிமை யவர்கணம்
இருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வருமதி லருணையி லொருவிசை வரவேணும்
சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவனி தரசிர தரபாரத்

தரணி தரதனு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தரபணி
சயில விதரண தருபுர சசிதரு மயில்வாழ்வே

நெடிய வுடலுரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ நெடுவானும்

நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமும் மடியவொர் படைதொடு
நிருப குருபர சுரபதி பரவிய பெருமாளே.

## 13. ஊதிமலை

### கஉ௫

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த தனதான.

ஆதிமக மாயி அம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த
ஆவுடைய மாது தந்த குமரேசா
ஆதரவ தாய்வ ருந்தி ஆகியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க அருள்வாயே

பூதமது வான ஐந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்கள் அறியாதே
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநி னைந்து
போகமுற வேவி ரும்பும் அடியேனை

நீதயவ தாயி ரங்கி நேசவரு ளேபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க உபதேச
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த வடிவேலா

ஓதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
ஊழியுணர் வார்கள் தங்கள் வினைதீர
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீது கந்த பெருமாளே.

# 14. தீர்த்தமலை

கஙகூ

தாத்த தனதன தாத்த தனதன தனதான.

பாட்டி லுருகிலை கேட்டும் உருகிலை
கூற்று வருவழி பார்த்தும் உருகிலை
பாட்டை யநுதினம் ஏற்றும் அறிகிலை தினமானம்

பார்ப்ப ணியனருள் வீட்டை விழைகிலை
நாக்கி னுனிகொடு ஏத்த அறிகிலை
பாழ்த்த பிறவியி லேற்ற மனதுநல் வழிபோக

மாட்ட மெனுகிறை கூட்டை விடுகிலை
யோட்டின் விதிவழி யோட்டம் அறிகிலை
பார்த்து மினியொரு வார்த்தை அறைகுவ னிதுகேளாய்

வாக்கு முனதுள நோக்கு மருளுவன்
ஏத்த புகழடி யார்க்கும் எளியனை
வாழ்த்த இருவினை நீக்கு முருகனை மருவாயோ

ஆட்டி வடவரை வாட்டி யரவொடு
பூட்டி திரிபுர மூட்டி மறலியி
ணுட்ட மறசர ணீட்டி மதனுடல் திருநீருய்

ஆக்கி மகமதை வீட்டி யொருவனை
ஆட்டின் முகமதை நாட்டி மறைமக
னார்க்கும் வடுவுற வாட்டு முமையவ னருள்பாலா

சீட்டை யெழுதிவை யாற்றி லெதிருற
ஓட்டி யழல்பசை காட்டி சமணரை
சீற்ற மொடுகழு வேற்ற அருளிய குருநாதா

தீர்த்த எனதக மேட்டை யுடனினை
ஏத்த அருளுட னேக்கி அருளுதி
தீர்த்த மலைநகர் காத்த சசிமகள் பெருமானே.

## 15. கொங்கணகிரி

கoஎ

தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
தந்ததன தத்ததன தனதான.

ஐங்கரனை ஒத்தமனம் ஐம்புலம கற்றிவளர்
அந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமனம் அருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி அருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ அருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை அருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொருள் அருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே.

## 16. வள்ளியூர்

கoஅ

தைய தானன தனதான.

அல்லில் நேருமின் அதுதானும்
அல்ல தாகிய உடல்மாயை
கல்வி னோரவு வழிதோறும்
கையும் நானுமு லையலாமோ
சொல்லி நேர்படு முதுசூரர்
தொய்ய வூர்கெட விடும்வேலா
வல்லி மாரிரு புறமாக
வள்ளி யூருறை பெருமாளே

## 17. கயிலைமலை

கூ௦சுல

தானந்த தத்ததன தானந்த தத்ததன
தானந்த தத்ததன தனதான.

தேனுந்து முக்கனிகள் பால்செங்க ருப்பிளநிர்
சீரும்ப ழித்தசிவ மருளூறத்
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்துவிழ
சீவன்சி வச்சொருபம் எனதேறி
நானென்ப தற்றுயிரொ டூனென்ப தற்றுவெளி
நாதம்ப ரம்பிரம ஒளிமீதே
ஞானஞ்சு ரப்பமகி ழாநந்த சித்தியொடெ
நாளுங்க ளிக்கபதம் அருள்வாயே
வானந்த ழைக்கஅடி யேனுஞ்செ ழிக்கஅயன்
மாலும்பி ழைக்கஅலை, விடமான
வாருங்க ரத்தனெமை யாளுந்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே
தானந்த னத்தன னுவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமல ரணிமார்பா
கானங்கு றித்துஎமை யாளுந்தி ருக்கயிலை
சாலுங்கு றத்திமகிழ் பெருமானே.

## 18. நாககிரி

கககூ

தானதனத் தனதான தானதனத் தனதான.

காலனிடத் தணுகாதே - காசினியிற் பிறவாதே
சீலஅகத் தியஞான - தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே - மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே - நாககிரிப் பெருமானே.

## ௯௱. பழமுதிர்சோலை

### ௧௧௧

*தான தத்த தான தனு தனு தன தனதான.*

சீர்சி றக்கு மேனி பசேல் பசே லெனா
நூபு ரத்தி னோசை கலீர் கலீ ரென
சேர விட்ட தாள்கள் சிவேல் சிவே லெனா வருமாதர்

சேக ரத்தின் வாலை சிலோர் சிலோர் களு
நூறு லட்ச கோடி மயால் மயால் கொடு
தேடி யொக்க வாடி ஐயோ ஐயோ வென மடமாதர்

மார்ப டைத்த கோடு பளீர் பளீ ரென
ஏம லித்தெ னுவி பகீர் பகீ ரென
மாம சக்கி லாசை யுளோ முளோ மென நினைவோடி

வாடை பற்று வேலை அடா அடா என
நீம யக்க மேது சொலாய் சொலா யென
வாரம் வைத்த பாதம் இதோ இதோ என அருள்வாயே

பார தத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொ டித்த நாளில் வரைஇ வரைஇ பவர்
பானி றக்க ணேசர் குவா குவா கனர் இளையோனே

பாடன் முக்ய மாது தமீழ் தமீ ழிறை
மாமு னிக்கு காதி லுணூர் வுணூர் விடு
பாச மற்ற வேத குரூ குரூ பர குமரேசா

போர்மி குத்த சூரன் விடோம் விடோ மென
நேரெ திர்க்க வேலை படீர் படீ ரென
போய றுத்த போது குபீர் குபீ ரென வெகுசோரி

பூமி யுக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானை தொள்
பூணி யிச்சை யாறு புயா புயா றுள பெருமாளே.

## கக௨

தானதன தான தந்த தனதான.

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

## கக௩

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான.

வாதினைய டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம ணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே.

## ககச

*தனதன தான தனதன தான தனதன தான தனதான.*

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி
அவர்மேலாய்

இகரமு மாகி யெவைகளு மாகி இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்

மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூசை மகிழ்கதிர் காமம்
உடையோனே

செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமானே.

## ககரு

*தனதன தத்தத் தத்தன தத்தத் தனதான.*

தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறித்

தடிகொடு தத்திக் கக்கல்பெ ருத்திட்
டசனமும் விக்கிச் சத்தியெ டுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்

திலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளியவ டித்துற் றுய்த்துடல் செத்திட் டுயிர்போமுன்

திகழ்தமிழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்தாராய்

கலகீணவி சித்துப் பக்கரை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுகந டத்தித் திட்டென எட்டிப் பொருசூரன்
கனபடை கெட்டுத் தட்டற விட்டுத்
திரைகட லுக்குட் புக்கிட எற்றிக்
களிமயி லைச்சித் ரத்தில்ந டத்திப் பொருகோவே
குலிசன்ம கட்குத் தப்பியு மற்றக்
குறவர்ம கட்குச் சித்தமும் வைத்துக்
குளிர்தினை மெத்தத் தத்துபு னத்திற் றிரிவோனே
கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரம்வி ளைத்துத் தற்பர முற்றுக்
குலகிரி யிற்புக் குற்றுறை யுக்ரப் பெருமாளே.

## 19. ஆறு திருப்பதி

கக௬௯

தானதனத் தனதனன தனதான.

ஈனமிகுத் துளபிறவி அணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞானஅருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமருள் இளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே.

ஆறுபடை வீடுகள்

முற்றும்.

# ஐம்பூதத் திருப்பதிகள்

## க. திருக்காளத்தி

### ககஎ

*தனத்தா தத்தத் தனதான.*

சிரத்தா னத்திற் பணியாதே
செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான
மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
திருக்கா ளத்திப் பெருமானே.

---

## உ. சிதம்பரம்

### ககஅ

*தனதனன தான தனதனன தான*
*தனதனன தானத் தனதான.*

கனகசபை மேவு மெனது குரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவினை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்

சனகிமணவாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியுர் வாழ்பொற் பெருமாளே.

### கககூ

தனதனன தனன தந்தத் தனதான.

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமானே.

### கஉ0

தனதன தனன தனதன தனன தனதான.

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே

விழுதிக ழுழுகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமானே.

## கஉக

தானன தத்தந் தானன தத்தந் தனதான.

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே

சீவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே

பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா

தூர்விகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா
சூரர் மிகக்கொண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமானே.

## ௧௨௨

தனன தனதன தானன தந்தத் தனதான.

குகனெ குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினி லின்பக்
குமுளி சிவவமு தூறுக வுந்திப் பசியாறிக்

கொடிய இருவினை மூலமும் வஞ்சக்
கலிகள் பிணியிவை வேரொடு சிந்திக்
குலைய நமசிவ யோமென கெஞ்சிக் கனிகூரப்

பகலு மிரவுமி லாவெளி யின்புக்
குறுகி யிணையிலி நாடக செம்பொற்
பரம கதியிது வாமென சிந்தித் தழகாகப்

பவள மனதிரு மேனியு டன்பொற்
சரண அடியவ ரார்மன வம்பொற்
றருண சரண்மயி லேறியு னம்பொற் கழல்தாராய்

தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தொந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட் டியல்தானம்

தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடிய முனவுக மாருத சண்டச் சமரேறிக்

கனக மறைபட ஆடிய செம்புட்
பசிகள் தணிவுற சூரர்கள் மங்கக்
கடல்க ளெறிபட நாகமு மஞ்சத் தொடும்வேலா

கயிலை மலைதனி லாடிய தந்தைக்
குருக மனமுன தாடியெ கொஞ்சிக்
கனக சபைதனில் மேவிய கந்தப் பெருமானே.

## கஉரு

தனதனன தனதான தனதனன தனதான
தனதனன தனதான தனதான.

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருபகிரி யிடமேவு முகமாறும்
சுரர்தெரிய லளிபாட மழலைகதி நறைபாய
துகிர்இதழின் மொழிவேத மணம்வீசும்
அடர்பவள வொளிபாய அரியபரி புரமாட
அயில்கரமொ டெழில்தோகை மயிலேறி
அடியனிரு வினைதீறு படஅமர ரிதுபூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்
விடைபரவி அயன்மாலொ டமரர்முனி கணமோட
மிடறடைய விடம்வாரி அருள்நாதன்
மினலனைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகமகிழ அநுபூதி அருள்வோனே
இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதின்
இணையிளநிர் முலைமார்பின் அணைமார்ப
இனியமுது புலிபாதனுட னரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்ஞான பெருமானே.

## கஉசு

தான தத்ததன தான தத்ததன தத்ததான.

வாத பித்தமொடு சூலை விப்புருதி
யேறு கற்படுவ னீளை பொக்கிருமல்
மாலை புற்றெழுத லூசல் பற்சனியொ டந்திமாலை
மாச டைக்குருடு காத டைப்புசெவி
டூமை கெட்டவலி மூல முற்றுதரு
மாலை யுற்றதொரு நூறு தத்துவர்கள் உண்டகாயம்

வேத வித்துபரி கோல முற்றுவினை
யாடு வித்தகட லோட மொய்த்தபல
வேட மிட்டுபொரு ளாசை பற்றியுழல் சிங்கியாலே
வீடு கட்டிமய லாசை பட்டுவிழ
வோசை கெட்டுமடி யாமல் முத்திபெற
வீட வித்துமயி லாடு சுத்தவெளி சிந்தியாதோ
ஓத அத்திமுகி லோடு சர்ப்பமுடி
நீறு பட்டலற சூர வெற்பவுண
ரோடு பட்டுவிழ வேலை விட்டபுகழ் அங்கிவேளா
ஓந மச்சிவய சாமி சுத்த அடி
யார்க ளுக்குமுப காரி பச்சையுமை
ஓர்பு றத்தருள்சி காம ணிக்கடவுள் தந்தசேயே
ஆதி கற்பகவி நாய கற்குபிற
கான பொற்சரவ ணுப ரப்பிரம
ஞதி யுற்றபொருள் ஓது வித்தமைய நிந்தகோவே
ஆசை பெற்றகுற மாதை நித்தவன
மேவி சுத்தமண மாடி நற்புலியு
ராட கப்படிக கோபு ரத்தின்மகிழ் தம்பிரானே.

## கஉ௫

தந்ததன தனதான தந்ததன தனதான.

செங்கலச முலையார்பால் - சிந்தைபல தடுமாறி
அங்கமிக மெலியாதே - அன்புருக அருள்வாயே
செங்கைபிடி கொடியோனே - செஞ்சொல்தெரி புலவோனே
மங்கையுமை தருசேயே - மன்றுள்வளர் பெருமானே.

---

## ௯. காஞ்சி

### ௬௨௪

தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன தனதான.

மக்கட்குக் கூறரி தானது
கற்றெட்டத் தான்முடி யாதது
மற்றொப்புக் கியாதுமொவ் வாதது மனதாலே

மட்டிட்டுத் தேடவொ ணாதது
தத்வத்திற் கோவைப டாதது
மத்தப் பொற் போதுப கீரதி மதிசூடும்

முக்கட்பொற் பாளரு சாவிய
அர்த்தக்குப் போதக மானது
முத்திக்குக் காரண மானது பெறலாகா

முட்டர்க்கெட் டாதது நான்மறை
யெட்டிற்றெட் டாதென வேவரு
முற்பட்டப் பாலையி லாவது புரிவாயே

செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப்பொற் பூதர மேமுதல் வெகுரூபம்

சிட்டித்துப் பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாடம கோததி
செற்றுக்ரச் சூரனை மார்பக முதுசோரி

க்கக்கைத் தாமரை வேல்விடு
செச்சைக்கர்ப் பூரபு யாசல
கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்

கற்புத்தப் பாதுல கோழையு
மொக்கப்பெற் றுள்வினை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமானே.

## கூ௨எ

தனதனத் தத்த தந்த தனதனத் தத்த தந்த
தனதனத் தத்த தந்த தனதான.

அறிவலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து
அவரைவாழ்த் தித்தி ரிந்து பொருள்தேடிச்

சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து
தெரிவைமார்க் குச்சொ ரிந்து அவமேயான்
திரியுமாக் கத்து நித்தை யதனைமாற் றிப்ப ரிந்து
தெளியமோ ட்சத்தை யென்று அருள்வாயே

இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம்வேற் றுப்பி ரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே

குறவர்கூட் டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே.

## கூ௨அ

தத்தத் தனதான தத்தத் தனதான.

அற்றைக் கிரைதேடி - அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத - பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா - வெற்பைத் தொளைசீலா
கற்றுற் றுணர்போதா - கச்சிப் பெருமானே.

## கஉஅ

தனதனந் தத்தத் தத்தன தத்தம் தனதான.

கனகதம் பத்தைச் செச்சையை மெச்சுங்
கட்கசங் கத்துப் பொற்புய வெற்பன்
கடலுள்வஞ் சித்துப் புக்கதொர் கொக்கும் பொடியாகக்

கறுவு செஞ்சத்திப் பத்மக ரத்தன்
குமரனென் றர்ச்சித் தப்படி செப்புங்
கவிமொழிந் தத்தைக் கற்றற வுற்றும் புவியோர்போய்

குனகியுங் கைக்குக் கற்பக மொப்பென்
றனகனென் றிச்சைப் பட்டத ளிக்குங்
குமுணனென் றெப்பிட் டித்தனை பட்டிங் கிரவான

குருடுகொண் டத்தச் சத்தம னைத்துந்
திருடியுஞ் சொற்குத் தக்கதொ டுத்துங்
குலவியுங் கத்தப் பட்டக லக்கந் தெளியாதோ

சனகனன் புற்றுப் பெற்றம டப்பெண்
தனிபெருங் கற்புச் சக்ர நடத்துந்
தகையிலங் கைச்சுற் றத்தைமு ழுத்துஞ் சுடவேவெஞ்

சமரசண் டக்கொற் றத்தவ ரக்கன்
கதிர்விடும் பத்துக் கொத்துமு டிக்குந்
தனியொராம் பைத்தொட் டுச்சுரர் விக்னங் களைவோனும்

தினகரன் சொர்க்கத் துக்கிறை சுக்ரன்
சசிதரன் திக்குக் கத்தர கத்யன்
திசைமுகன் செப்பப் பட்டவ சிட்டன் திரள்வேதஞ்

செகதலஞ் சுத்தப் பத்தியர் சித்தம்
செயலொழிந் தற்றுப் பெற்றவர் மற்றும்
சிவனும்வந் திக்கக் கச்சியில் நிற்கும் பெருமானே.

## கூடுO

*தத்தத் தத்தத் தத்தத்*

முட்டுப் பட்டுக் கதிதோறும்
முற்றச் சுற்றிப் பலநாளும்
தட்டுப் பட்டுச் சுழல்வேனைச்
சற்றுப் பற்றக் கருதாதோ
வட்டப் புட்பத் தலமீதே
வைக்கத் தக்கத் திருபாதா
கட்டத் தற்றத் தருள்வோனே
கச்சிச் சொக்கப் பெருமானே.

## கூடுக

*தனதன தானந்தன தனதன தானந்தன*
*தனதன தானந்தன தனதான.*

கமலரு சோகாம்பர முடிநடு வேய்பூங்கணை
கலகமர் வாய்தோய்ந்தம ளியின்மீதே
கனையற மீதூர்ந்தெழ மதனவி டாய்போம்படி
கனவிய வாரேந்தின இளநீர்தோய்ந்
தெமதுயிர் நீலாஞ்சன மதர்விழி யால்வாங்கிய
இவளுடன் மால்கூர்ந்திடும் அநுபோகம்
இனிவிட வேதாந்தப ரமசுக வீடாம்பொருள்
இதவிய பாதாம்புயம் அருள்வாயே
அமகர ஆசாம்பர அதுகர ஏகாம்பர
அதுலன நீலாம்பரம் அறியாத
அநகர நாளாங்கிதர் தமையுமை யாள்சேர்ந்தருள்
அறமுறு சீகாஞ்சியில் உறைவோனே
விமலகி ராதாங்கனை தனகிரி தோய்காங்கெய
வெடிபடு தேவேந்திரன் நகர்வாழ
விரிகடல் தீமூண்டிட நிசிசரர் வேர்மாண்டிட
வினையற வேல்வாங்கிய பெருமானே.

௯௩௨

தனன தானன தத்தன தனதன
தானு தத்தத் தனதான.

கரும மானபி றப்பற வொருகதி
காணு தெய்த்துத் தடுமாறும்
கலக காரண துர்க்குண சமயிகள்
நாணு வர்க்கக் கலைநூலின்
வரும நேகவி கற்பவி பரிதம
னோபா வத்துக் கரிதாய
மவுன பூரித சத்திய வடிவினை
மாலா மெற்குப் புகல்வாயே
தரும வீமவ ருச்சுன நகுலச
காதே வர்க்குப் புகலாகிச்
சமர பூமியில் விக்ரம வளைகொடு
நாளோர் பத்தெட் டினிலாளும்
குரும கீதல முட்பட வுளமது
கோடா மற்சத் தியமானக்
குலவு தேர்கட வச்சுதன் மருககு
மாரா கச்சிப் பெருமாளே.

௯௩௩

தான தத்தனத் தான தானனத் தனதான.

சீசி முப்புரக் காடு நீறெழச்
சாடி நித்திரைக் கோசம் வேறறச்
சீவன் முத்தியிற் கூட வேகளித் தநுபூதி
சேர அற்புதக் கோல மாமெனச்
சூரி யப்புவிக் கேறி யாடுகச்
சீலம் வைத்தருட் டேறி யேயிருக் கறியாமற்

பாசம் விட்டுவிட் டோடி போனதுப்
போது மிப்படிக் காகி லேனினிப்
பாழ் வழிக்கடைக் காம லேபிடித் தடியேனைப்

பார டைக்கலக் கோல மாமெனத்
தாப ரித்துநத் தார் மீதெனப்
பாத பத்மநற் போதை யேதரித் தருள்வாயே

தேசில் துட்டநிட் டூர கோதுடைச்
சூரை வெட்டிபெட் டாசை யேழ்புவித்
தேவர் முத்தர்கட் கேத மேதவிர்த் தருள்வோனே

சீர்ப டைத்தமுற் சூல மான்மழுப்
பாணி வித்துருப் பாத ஞேர்புறச்
சீர்தி கழ்ப்புகழ்ப் பாவை யீனபொற் குருநாதா

காசி முத்தமிழ்க் கூட லேழ்மலைக்
கோவ லத்தியிற் கான நான்மறைக்
காடு பொற்கிரிக் காழி யாரூர்பொற் புலியேவேணூர்

கான அத்தியப் பால்சி ராமலைத்
தேச முற்றுமுப் பூசை மேவிநற்
காம கச்சியிற் சால மேவுபொற் பெருமானே.

௧௫௪

தத்தத் தனன தனதான.

சத்தப் படுமைக் கடலாலே
தட்டுப் படுமப் பிறையாலே
சித்ரக் கொடியுற் றழியாதே
செச்சைத் தொடையைத் தரவேணும்
குத்திக் கிரியைப் பொரும்வேலா
கொச்சைக் குறவிக் கினியோனே
துக்கத் தையொழித் திடும்வீரா
சொக்கப் பதியிற் பெருமானே.

## ௯. திருவானைக்கா

### ௧௩௫

*தந்தன தானத் தானன தந்தன தானத் தானன*
*தந்தன தானத் தானன தனதான.*

அம்புலி நீரைச் சூடிய செஞ்சடை மீதிற் றாவிய
ஐந்தலை நாகப் பூடண ரருள்பாலா
அன்புட னாவிற் பாவது சந்தத மோதிப் பாதமு
மங்கையி னானிற் பூசையு மணியாமல்
வம்பணி பாரப் பூண்முலை வஞ்சியர் மாயச் சாயலில்
வண்டுழ லோதித் தாழலி லிருகாதில்
மண்டிய நீலப் பார்வையில் வெண்டுகி லாடைச் சேர்வையில்
மங்கியெ யேழைப் பாவியெ னழிவேனோ
கொம்பனை நீலக் கோமளை அம்புய மாலைப் பூடணி
குண்டலி யாலப் போசனி யபிராமி
கொஞ்சிய வானச் சானவி சங்கரி வேதப் பார்வதி
குன்றது வார்பொற் காரிகை யருள்பாலா
செம்பவ ளாயக் கூரிதழ் மின்குற மானைப் பூண்முலை
திண்புய மாரப் பூரண மருள்வோனே
செந்தமிழ் பாணப் பாவலர் சங்கித யாழைப் பாடிய
தென்திரு வானைக் காவுறை பெருமானே.

### ௧௩௬

*தான தனன தனதந்த தந்தன தனதான.*

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும்ப ரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும்பு ணர்ந்தவ ரெவராலும்
ஓத வரிய துரியங்க டந்தது
போத அருவ சுருபம்ப்ர பஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங்க லந்தது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமஞ்

சாரு மநுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாச களப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம்ப யந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம்ப ரந்தவ
ளாலி னுதர முளைபங்க ரும்புவெ
ணுவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே.

## கங-எ

தனத்த தான தானன தனத்த தான தானன தனதான.

அனித்த மான வூனுளு மிருப்ப தாக வேநாசி
யடைத்து வாயு வோடாத வகைசாதித்

தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடு மாயாச
அசட்டு யோகி யாகாமல் மலமாயை

செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான்வேறென் உடல்வேறு

செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம நோதீத
சிவச்சொ ரூப மாயோகி யெனஆள்வாய்

தொனித்த நாத வேயூது சகஸ்ர நாம கோபால
சுதற்கு நேச மாருத மருகோனே
சுவர்க்க லோக மீகாம சமஸ்த லோக பூபால
தொடுத்த நீப வேல்வீர வயனூரா

மனித்த ராதி சோருடு தழைக்க மேவு காவேரி
மகப்ர வாக பானீய மலைமோதும்
மணத்த சோலை சூழ்காவை அனைத்து லோக மான்வாரு
மதித்த சாமி யேதேவர் பெருமாளே.

## கரு௮

தனதன தானந்த தான தந்தன தனதான.

குருதிபு லாலென்பு தோன ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சீத மண்டிய
குடர்நிணம் ரோமங்கள் மூளை யென்பன பொதிகாயக்

குடிலிடை யோரைந்து வேட ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கொடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனாலே

சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியையி னுலண்டர் பூசை வந்தனை
துதியொடு நாடுந்தி யான மொன்றையு முயலாதே

சுமடம தாய்வம்பு மால்கொ ளுந்திய
திமிரரொ டேபந்த மாய்வ ருந்திய
துரிசற ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே

ஒருதனி வேல்கொண்டு நீள்க்ர வுஞ்சமும்
நிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா

உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி யின்புற உறைவோனே

கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராச ரன்புறு மருகோனே

கமனு மாகண்ட லாதி யண்டரு
மெமதுபி ரானென்று தாள்வ ணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமானே.

௬௩௰

தானத் தானத் தனதான.

நாடித் தேடித் தொழுவார்பால்
நானத் தாகத் திரிவேனோ
மாடக் கூடற் பதிஞான
வாழ்வைச் சேரத் தருவாயே
பாடற் காதற் புரிவோனே
பாலைத் தேனைத் தருள்வோனே
ஆடற் றோகைக் கினியோனே
ஆனைக் காவிற் பெருமானே

## ரு. திருவருணை

### கசுo

*தனனதனத் தனதான தனனதனத் தனதான.*

இரவுபகற் பலகாலும் - இயலிசைமுத் தமிழ்கூறித்
திரமதனைத் தெளிவாகத் - திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே - பரசிவதத் துவஞானா
அரனருள்சற் புதல்வோனே - அருணகிரிப் பெருமாளே.

### கசுக

*தனதன தந்த தனன தந்த*
*தனதன தந்த தனதான.*

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி
இனவரு ளன்பு மொழியக டம்பு
வினதக முங்கொ டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமும லர்ந்து
கடுகிந டங்கொ டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட விடையேறிச்
சிவம்வெளி யங்க ணருள்குடி கொண்டு
திகழந டஞ்செய் தெமையீன
அரசியி டங்கொள் மழுவுடை யெந்தை
அமலன்ம கிழ்ந்த குருநாதா
அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே.

## ௧௬௨

*தனதனன தான தத்த தனதனன தான தத்த தனதான*

முழுகிவட வாமு கத்தி னெழுகனலி லேபி றக்கு
முழுமதிநி லாவி னுக்கும் வசையாலும்
மொழியுமட மாத ருக்கு மினியதனி வேயி சைக்கு
முதியமத ராச னுக்கும் அழியாதே
புழுகுதிகழ் நீப மத்தி லழகியகு ராநி ரைத்த
புதுமையினி லாநி ரட்டி புயமீதே
புணரும்வகை தானி னைத்த துணரும்வகை நீல சித்ர
பொருமயிலி லேறி நித்தம் வரவேணும்
எழுமகர வாவி சுற்று பொழி லருணை மாந கர்க்கு
ளெழுதரிய கோபு ரத்தில் உறைவோனே
இடைதுவள வேடு வச்சி படமசைய வேக னத்த
இளமுலைவி டாத சித்ர மணிமார்பா
செழுமகுட நாக மொய்த்த ஒழுகுபுனல் வேணி வைத்த
சிவனைமுத லோது வித்த குருநாதா
திசைமுகன்மு ராரி மற்று மரியபல தேவ ருற்ற
சிறையடைய மீள விட்ட பெருமானே.

## ௧௬௩

*தனன தனனு தனன தனனு*
*தனன தனனு தனதான.*

இருவர் மயலோ அமளி விதமோ
என்ன செயலோ அணுகாத
இருடி அயன்மா லமர ரடியா
ரிசைய மொலிதான் இவைகேளா
தொருவ னடியே னலறு மொழிதா
னொருவர் பரிவாய் மொழிவாரோ
உனது பததூள் புவன கிரிதா
னுனது கிருபா கரமேதோ

பரம குருவா யணுவி லசைவாய்
பவன முதலா யெபூதம்
படையு முடையாய் சகல வடிவாய்
பழைய வடிவா யெவேலா
அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமானே.

௧௫௫

தானதன தத்த தத்த தானதன தத்த தத்த
தானதன தத்த தத்த தனதான.

கோடுசெறி மத்த கத்தை வீசுபலை தத்த வொத்தி
கூறுசெய்த ழித்து ரித்து நடைமாணுர்
கோளுலவு முப்பு ரத்தை வாளெரிகொ ளுத்தி விட்ட
கோபநுத லத்த ரத்தர் குருநாதா
நீடுகன கத்த லத்தை யூடுருவி மற்ற வெற்பு
நீறெழமி தித்த நித்த மனதாலே
நீபமலர் பத்தி மெத்த வோதுமவர் சித்தமெத்த
நீலமயில் தத்த விட்டு வரவேணும்
ஆடலணி பொற்சி லைக்கை வேடுவர்பு னக்கு றத்தி
ஆரமது மெத்து சித்ர முலைமீதே
ஆதரவு பற்றி மெத்த மாமணிநி றைத்த வெற்றி
ஆறிருதி ருப்பு யத்தில் அணைவீரா
தேடிமையொர் புத்தி மெத்தி நீடுறநி னைத்த பத்தி
சீருறவு ளத்தெ ரித்த சிவவேளே
தேறருணை யிற்ற ரித்த சேண்முகடி டத்த டர்த்த
தேவர்சிறை வெட்டி விட்ட பெருமானே.

## கசரு

*தனனாத்தன தனனாதன தாந்தன தாந்தனத தனதான.*

தமிழோதிய குயிலோமயி லாண்டலை யாம்புறவங்
கிளிகாடையி னணிநேரளி யாங்குரல் வாய்ந்ததிசெந்
தகுமாமிட ஞெலியாரித ழாஞ்சுனை தேன்கனியின்
சுவைசேருந்

தனபாரமு மலையாமென வோங்கிட மாம்பொறிசிந்
திடவேல்விழி நுதலோசிலை வான்பிறை மாந்தளிரின்
சரிரார்குழ லிருளார்நகை யோங்கிய வான்கதிரின்
சுடர்பாயக்

குமிழ்நாசியின் முகமோமதி யாங்குளிர் சேங்கமலஞ்
சரிதோடிணை செவியாடுச லாங்கள பூங்கமுகங்
கொடிநாலிடை யுடையாரன மாம்ப்ரியர் மாண்புரியின்
கொடிமாதர்

குணமோடம ளியினூடினு மோங்கிய பூங்கமலஞ்
சரணூபுர குரலோசையு மேந்திடு மாண்டலையின்
கொடியோடெழு தரிதாம்வடி வோங்கிய பாங்கையுமன்
தகையேனே

திமிதோதிமி திமிதோதிமி தாங்கண தீங்கெணதொந்
தகுதோதகு தகுதோதகு டாங்குட தீங்கடதொந்
திகுடோடிமி டிமிடோடிமி டாங்குட டந்தகமென்
றியல்பேரி

திசைமூடிய கடலேழ்பொடி யாம்படி யோங்கியவெங்
கரிதேர்பரி யசுரார்கள மாண்டிட நீண்டரவின்
சிரமீள்பட குவடோதுகள் வான்பெற வாங்கியவண்
கதிர்வேலா

கமழ்மாவிதழ் சடையாரடி யேன்துயர் தீர்ந்திடவெண்
தழல்மாபொடி யருள்வோரடல் மான்துடி தாங்கியவண்
கரர்மாடரு ளுமையாளெமை யீன்றவ ளீன்றருள்மென்
குரவோனே

கடையேனிரு வினைநேர்மல மாண்டிட நீண்டியவொண்
சுகமோகினி வளிநாயகி பாங்கனெ னும்பகர்மின்
கலைநாலுடை முருகாஅழ லோங்கிய வேரங்கலின்கண்
பெருமானே.

கஎ௪

தான தான தான தான
தான தான தனதான.

பாலாய் நூலாய் தேனாய் நீளாய்
பாகாய் வாய்சொற் கொடியார்தாம்

பாடா வாடா வேடா வாலே
பாடா யீடற் றிடைபீறும்

தோலா லேகா லாலே யூனா
லேசூழ் பாசக் குடில்மாசு

தோயா மாயா வோயா நோயால்
சோர்வாய் மாளக் கடவேனோ

ஞாலா மேலா வேதா போதா
நாதா சோதிக் கிரியோனே

ஞானா சாரா வானோர் கோவே
நானா வேதப் பொருளோனே

வேலா பாலா சீலா காரா
வேளே வேடக் கொடிக்கோவே

வீரா தாரா ஆரூ தாரா
வீரா வீரப் பெருமானே.

ஐம்பூதத் திருப்பதிகள்
முற்றும்.

# பல திருப்பதிகள்

## 1. திருவாரூர்

கஎ௪எ

தான தான தான தான தான தானந்
தான தானத் தனதான.

பாலோ தேனோ பாகோ வானோர்
பாரா வாரத் தமுதேயோ
பாரோர் சீரோ வேளேர் வாழ்வோ
பானோ வான்முத் தெனநீளக்
காலோ தாலே லோபா டாதே
தாய்மார் நேசத் தனுசாரம்
தாரா தேபே ரீயா தேபே
சாதே யேசத் தருமோதான்
ஆலோல் கேளா மேலோர் நாண்மா
லானோ தேனற் புனமேபோய்
ஆயாள் தாள்மேல் விழா வாழா
ஆளா வேளைப் புகுவோனே
சேலோ டேசே ராரால் சாலார்
சீரா ரூரிற் பெருவாழ்வே
சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் பெருமானே.

## 2. திருவீழி மிழலை

கச௮

தனன தனன தனன
தனன தனன தனன தனதான.

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல

ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிருதாள் புனைவோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் விடும்வேலா
திருமால் பிரமா வறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமானே.

## 3. காசி

கசகூ

தான தந்தன தானன தனதான.

வேழ முண்ட விளாகனி யதுபோல
மேனி கொண்டு வியாபக மயலூறி
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நாளு நைந்து விடாதருள் புரிவாயே
மாள அன்றம ணீசர்கள் கழுவேற
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா
கான கண்ட னுமாபதி தருபாலா
காசி கங்கையில் மேவிய பெருமானே.

## 4. இலஞ்சி

க௲O

தனந்தன தந்த தனந்தன தந்த
தனந்தன தந்த தனதான.

சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரந்தெறி கின்ற விழிவேலால்
சுழன்றுசு ழன்று துவண்டுது வண்டு
சுருண்டும யங்கி மடவார்தோள்

விரும்பிவ ரம்பு கடந்துந டந்து
மெலிந்துத ளர்ந்து மடியாதே
விளங்குக டம்பு விழைந்தணி தண்டை
விதங்கொள்ச தங்கை யடிதாராய்

பொருந்தல மைந்து சிதம்பெற நின்ற
பொலங்கிரி யொன்றை யெறிவோனே
புகழ்ந்தும கிழ்ந்து வணங்கு குணங்கொள்
புரந்தரன் வஞ்சி மணவாளா

இரும்புன மங்கை பெரும்புள கஞ்செய்
குரும்பைம ணந்த மணிமார்பா
இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று
இலஞ்சிய மர்ந்த பெருமானே.

## 5. இராமேசுரம்

### கூ௫கூ

தானதன தானதன தானதன தானதன தனதான.

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவினை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமொடு
பொருள்தேடி

வாசபுழு கேடுமல ரோடுமண மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழலச்
சிலநாள்போய்த்

தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி
உறுநாளிற்

சூலைசொறி ஈளைவலி வாதமொடு நீரழிவு
சோகைகளமாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுடல்
அழிவேனோ

நாலுமுக ளுதியரி யோமெனஅ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபடத் தாளமிடும்
இளையோனே

நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வாளைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ்
மயில்வீரா

ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில்
பொடியாக

ஓகைதழல் வாளிவிடு மூரிதனு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காவெனவெ
ஓதமறை ராமெசுர மேவுகும ராவமரர்
பெருமானே.

கருஉ

தானன தனத்தன தானன தனத்தன
தானன தனத்தன தனதான.

வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை அறியாதே

மானார் வலைக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே அணைத்துதவு மதனாலே

தேனே கருப்பிலெழு பாகோ விதற்கிணைக
ளேதோ வெனக்கலவி பலகோடி

தீரா மயக்கினொடு நாகா படத்திலெழு
சேரு டல்பெற்றதுயர் ஒழியேனோ

மேனு டுபெற்றுவளர் சூராதி பற்கெதிரி
னூடே கிதிற்குமிரு கழலோனே
மேகா ரவுக்ரபசி தானேறி வெற்றிபுனை
வீரா குறச்சிறுமி மணவாளா
ஞான பரற்கினிய வேதா கமப்பொருளை
நாணு துரைக்குமொரு பெரியோனே
தாரா யணற்குமரு காவீ றுபெற்றிலகு
ராமே சுரத்திலுறை பெருமானே.

## 6. உத்தரமேரூர்

கருந

தானதந்த தானதந்த தானதந்த தானதந்த
தானதந்த தானதந்த தனதான.

தோலெ லும்பு சீநரம்பு பீளை துன்ற கோழைபொங்கு
சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோருமிந்த நோயகன்று துயராற
ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்ச
னாரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டு மாறிரண்டு தோளுமங்கை
யாடல்வென்றி வேலுமென்றி நினைவேனோ
வாலசந்த்ர சூடிசந்த வேதமந்த்ர ரூபியம்பை
வாணிபஞ்ச பாணிதந்த முருகோனே
மாயையைந்து வேகமைந்து பூதமைந்து நாதமைந்து
வாழ்பெருஞ்ச ராசரங்க ளுறைவோனே
வேலையன்பு கூரவந்த ஏகதந்த யானைகண்டு
வேடர்மங்கை யோடியஞ்ச அணைவோனே
வீரமங்கை வாரிமங்கை பாரின்மங்கை மேவுகின்ற
மேருமங்கை ஆளவந்த பெருமானே.

## கரு௪

தனன தனன தனதான தனன தனன தனதான.

சுருதி மறைக ளிருநாலு திசையி லதிபர் முனிவோர்கள்
துகளி லிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்
சொலவில் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தொலைவி லுடுவி னுலகோர்கள் மறையோர்கள்
அரிய சமயம் ஒருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியு மயனும் ஒருகோடி இவர்கூடி
அறிய அறிய அறியாத அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியும் அறிவூற அருள்வாயே
வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியும் அழிவாக
மகர சலதி அளறுக முதுசூரும்
மடிய அலகை நடமாட விசய வனிதை மகிழ்வாக
மவுலி சிதறி இரைதேடி வருநாய்கள்
நரிகள் கொடிகள் பசியாற உதிரி நதிகள் அலைமோத
நமனும் வெருவி யடிபேண மயிலேறி
நளின வுபய கரவேலை முடுகு முருக வடமேரு
நகரி யுறையும் இமையோர்கள் பெருமானே.

## 7. திருமயிலை

## கருரு

தனன தானன தானன தந்தத் தனதான.

அறமி லாவதி பாதக வஞ்சத் தொழிலாலே
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் றிளையாதே
திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூடத்
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே
விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் பொரும்வேலா
விமல மாதபி ராமித ருஞ்செய்ப் புதல்வோனே
மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமானே.

## 8. திருவிடைமருதூர்

கூ(ரு)சா

தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனு தான தானனு தனதான.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
' வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிகள் பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர்போலே

வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிடா
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாம்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேன மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருதாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில . .
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழெனு உமிழுமது கொழுகொழெனு ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய்
மனையவள் மனம்வேறும்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதரான் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனில் இடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமானே.

## 9. கோடி (குழகர்கோயில்)

### க௩௭

தானதன தானதன தானதன தானதன தனதான.

நீலமுகி லானகுழ லானமட வார்கள்தன
நேயமதி லேதினமும் உழலாமல்
நீடுபுவி யாசைபொரு ளாசைமரு ளாகியலை
நீரிலுழல் மீனதென முயலாமற்
காலனது நாவரவ வாயிலிடு தேரையென
காயமரு வாவிவிழ அணுகாமுன்
காதலுட னோதுமடி யார்களுட னாடியொரு
கால்முருக வேளெனவும் அருள்தாராய்
சோலைபரண் மீதுநிழ லாகதினை காவல்புரி
தோகைகுற மாதினுடன் உறவாடிச்
சோரனென நாடிவரு வார்கள்வன வேடர்விழ
சோதிகதிர் வேலுருவு மயில்வீரா
கோலவழல் நீறுபுனை யாதிசரு வேசரொடு
கூடிவிளை யாடும்உமை தருசேயே
கோடுமுக வானைபிற கானதுணை வாகுழகர்
கோடிநகர் மேவிவளர் பெருமானே.

## 10. திருக்குற்றாலம்

### க௩௮

தானத்தத் தானன தானன தனதான.

ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடைநி லாவிய
ஏதப்பொற் றோள்மிசை மூடிய கரமாதர்
ஏதத்தைப் பேசுப ணாளிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
ஏதிட்டிட் டேவிியை வீழ்விடு முழுமாயர்

மாடொக்கக் கூடிய காமுகர்
மூழ்குற்றுக் காயமொ டேவரு
வாயுப்புற் சூலைவி யாதிகள் இவைமேலாய்

மாசுற்றுப் பாசம்வி டாசம
னூர்புக்குப் பாழ்நர கேவிழு
மாயத்தைச் சீவியு னாதர வருள்வாயே

தாடுட்டுட் டுடுடு டிடிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத னாவென வெகுபேரி

தாளொத்தப் பூதப சாசுகள்
வாய்விட்டுச் சூரர்கள் சேனைகள்
சாகப்பொற் றோகையி லேறிய சதிரோனே

கூடற்கச் சாலைசி ராமலை
காவைப்பொற் காழிவெ ணூர்திகழ்
கோடைக்கச் சூர்கரு வூரிலும் உயர்வான

கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமானே.

## கருஅ

தானத்தத் தானன தானன தனதான.

வேதத்திற் கேள்வியி லாதது
போதத்திற் காணவொ ணாதது
வீசத்திற் றூர மிலாதது கதியானர்

வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காயவொ ணாதது
வேகத்துத் தீயில்வெ காதது சுடர்கானம்

வாதத்துக் கேயவி யர்தது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறு
மாயத்திற் காயம தாசல
தீதர்க்குத் தூரம தர்கிய
வாழ்வைச்சற் காரம தாஇனி அருள்வாயே

காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதற்பட் டோடியு மேவிடு கதிகாணர்
கர்ணப்பட் டேடொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
வாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே

கோதைப்பித் தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலத்தித் தாதியர் சூழ்திரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமானே.

## 11. திருவாலங்காடு

கசுO

தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த தனதான.

வடிவது நீலங் காட்டி முடிவுள காலன் கூட்டி
வரவிடு தூதன் கோட்டி விடுபாசம்
மகனொடு மாமன் பாட்டி முதலுற வோருங் கேட்டு
மதிகெட மாயந் தீட்டி உயிர்போமுன்
படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்துன் அடியேனைப்
பரிவொடு நாளுங் காத்து விரிதமி ழாலங் கூர்த்த
பரபுகழ் பாடென் றுட்கொ டருள்வாயே

முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங் காட்டில்
முதிர்நட மாடுங்கூத்தர் புதல்வோனே
முருகவிழ் தாருஞ் சூட்டி யொருதனி வேழங் கூட்டி
முதல்மற மானின் சேர்க்கை மயல்கூர்வாய்
இடியென வேகங் காட்டி நெடிதரு சூலந் தீட்டி
எதிர்பொரு சூரன் தாக்க வரஏகி
இலகிய வேல்கொண் டார்த்து உடலிரு கூறன் றாக்கி
இமையவ ரேதந் தீர்த்த பெருமானே.

## 12. மதுரை

### கஅ௲க

தனதான தானத் தனதான.

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
திருவாணி கூடற் பெருமானே.

### கஅ௲உ

தனன தனந்தன தனன தனந்தன
தனன தனந்தன தனதான.

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
பவனி வரும்படி யதனாலே
பகர வளங்களு நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே

வரையினில் எங்கணும் உலவி நிறைந்தது
　　வரிசை தரும்பத　　மதுபாடி
　வளமொடு செந்தமி ழுரைசெய அன்பரும்
　　மகிழ வரங்களும்　　அருள்வாயே
அரகர சுந்தர அறுமுக என்றுனி
　　அடியர் பணிந்திட　　மகிழ்வோனே
　அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
　　குறமக ளிங்கித　　மணவாளா
கருதரு திண்புய சரவண குங்கும
　　களபம ணிந்திடு　　மணிமார்பா
　கனக மிகும்பதி மதுரை வளம்பதி
　　யதனில் வளர்ந்தருள்　　பெருமானே.

கசாரு

தான தானதன தத்ததன தத்ததன　தனதான.

சீத வாசனைம லர்க்குழல்பி லுக்கிமுக,
　　மாய வேல்விழிபு ரட்டிநகை முத்தமெழ
　　தேமல் மார்பினிள பொற்கிரிப ளப்பளென தொங்கலாரஞ்
　சேரு மோவியமெ னச்சடமி னுக்கிவெகு
　　வாசை நேசமும்வி லைத்துஇடை யுற்றவரி
　　சேலை காலில்விழ விட்டுநடை யிட்டுமயி　லின்கலாபச்;
சாதி யாமெனவெ ருட்டிநட மிட்டுவலை
　　யான பேர்தமையி ரக்கவகை யிட்டுகொடி
　　சாக நோய்பிணிகொ டுத்திடர்ப்ப டுத்துவர்கள் பங்கினூடே
　தாவி மூழ்கிமதி கெட்டவல முற்றவனை
　　பாவ மானபிற விக்கடலு ழப்பவனை
　　தாரு லாவுபத பத்தியிலி ருத்துவதும்　எந்தநாளோ;
வாத வூரனைம தித்தொருகு ருக்களென
　　ஞான பாதம்வெளி யிட்டுநரி யிற்குழுவை
　　வாசி யாமெனந டத்துவகை யுற்றரசன்　அன்புகாண
　மாடை யாடைதர பற்றிமுன கைத்துவைகை
　　யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
　　மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தனருள் கந்தவேளே;

வேத லோகர்பொனி லத்தர்தவ சித்தரதி
பார சீலமுனி வர்க்கமுறை யிட்டலற
வேலை ஏவியவு ணக்குலமி றக்கநகை கொண்டசீலா
வேத மீணகம லக்கணர்மெய் பச்சைரகு
ராம ரீணமயி லொக்கமது ரைப்பதியின்
மேவி வாழுமரர் முத்தர்சிவ பத்தர்பணி தம்பிரானே.

௧௪௪

தானத் தனதான தானத் தனதான.

நீதத் துவமாகி - நேமத் துணையாகிப்
பூதத் தயவான - போதைத் தருவாயே
நாதத் தொனியோனே - ஞானக் கடலோனே
கோதற் றமுதானே - கூடற் பெருமானே.

௧௪௫

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தனதான.

முத்துநவ ரத்னமணி பத்திநிரை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு வெனவோதும்
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுரர் அடிபேணி
பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி
பற்குனனை வெற்றிபெற ரதமூரும்
பச்சைநிற முற்றபுயல் அச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே
தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்த்ததென தெனஞான
திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை யெனஆடும்
அத்தனுட னொத்தநட நித்ரிபுவ னத்திறவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா
அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவன
ரற்கனக பத்மபுரி பெருமானே.

# 13. திருப்போரூர்

கசாசா

தான தானன தானன தான தானன தானன
தான தானன தானன தனதான.

சீரு லாவிய வோதிம மான மாநடை மாமயில்
சேய சாயல்க லாமதி முகமாரூர்
தேனு லாவிய மாமொழி மேரு நேரின மாமுலை
சேலு லாவிய கூர்விழி குமிழ்நாசி
தாரு லாவிய நீள்குழல் வேய ளாவிய தோளியர்
சார்பி லேதிரி வேனை நின் அருளாலே
சாம வேதியர் வானவ ரோதி நாண்மலர் தூவிய
தாளில் வீழ விநுமிக அருள்வாயே
காரு லாவிய நீள்புன வேடர் மால்வரை மீதுறை
காவல் மாதினொ டாவல்செய் தணைவோனே
காண ஆகம வேதபு ராண நூல்பல வோதிய
கார ணாகரு ணாகர முருகோனே
போரு லாவிய சூரனை வாரி சேறெழ வேல்விடு
பூப சேவக மாமயில் மிசையோனே
போதன் மாதவன் மாதுமை பாதி யாதியு மேதொழு
போரி மாநகர் மேவிய பெருமானே.

# 14. கோடைநகர்

கசாள

தானன தந்தன தந்த தந்தன தனதான.

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்த குண்டர்கள் பெரியோரைத்
தூடண நிந்தைப கர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்

வாழநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே

ஏழு மரங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையும் அடைவேமுன்
ஈடழி யும்படி சந்த்ர னுஞ்சிவ
சூரிய னுஞ்சுர ரும்ப ரும்ப தம்பெற
ராம சரந்தொடு புங்க வன்திரு மருகோனே

கோழி சிலம்பந லம்ப யின்றக
லாப நடஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மெங்கும்வி ளங்கு மங்கல வயலூரா
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேல னெனும்பெய ரன்பு டன்புகழ்
கோடை யெனும்பதி வந்த இந்திரர் பெருமானே.

## கஙஅ

தானத்த தான தந்த தானத்த தான தந்த
தானத்த தான தந்த தனதான.

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி

யோசித்த யாரு டம்பை நேசித்து ரூத லைந்து
ரோமத்து வார மெங்கும் உயிர்போக
யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ

வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னும்ம யங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே
கூசிப்பு காவொ துங்க மாமற்றி காத ரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமானே.

## 15. சீகாழி

கஙஅ

தந்தத்தன தானன தந்தத் தனதான.

சிந்துற்றெழு மாமதி அங்கித் திரளாலே
தென்றற்றரு வாசமி குந்துற் றெழலாலே
அந்திப்பொழு தாகிய கங்குற் றிரளாலே
அன்புற்றெழு பேதைம யங்கித் தனியானள்
தந்துற்றிடு வாரியை மங்கத் திகழாயே
தஞ்சொத்தொளிர் வேலினை யுந்திப் பொருவேளே
சந்தக்கவி நூலினர் தஞ்சொற் கினியோனே
சண்பைப்பதி மேவிய கந்தப் பெருமானே.

## 16. வயலூர்

கஎ௦

தத்த தனதன தனன தனன தனதான.

தெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பத்ம நறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ பிணையோ இனிதூறும்
தெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
திற்கு மிளமுலை குடமோ மலையோ அறவேதெய்த்

தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்

இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ந பரிபுர இருகால் ஒருகால் மறவேனே

புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகவு டுயவே உமையாள்தன்

புத்ர னெனஇசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்ப கவுணியர் பெருமான் உருவாய் வருவோனே

சத்த முடையசண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி இளையா உளையா ஒளிகூரும்

சக்ர தரஅரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்ப முளதட வயலூ ரியலூர் பெருமானே.

## கஎக

தன்ன தனத்தன தன்ன தனத்தன
தன்ன தனத்தன தந்ததான.

என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும்
என்னால் துதிக்கவுங் கண்களாலே

என்னால் அழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னால் இருக்கவும் பெண்டிர்வீடு

என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை

என்னால் எரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானர்

கன்ஞர் உரித்தஎன் மன்ஞ எனக்குநல்
    கர்ஞ மிர்தப்பதம் தந்தகோவே
  கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
    கண்ஞ டியிற்றடங் கண்டவேளா

மன்ஞ னதக்கனை முன்ஞள் முடித்தலை
    வன்வா ளியிற்கொளும் தங்கரூபன்
  மன்ஞ குறத்தியின் மன்ஞ வயற்பதி
    மன்ஞ முவர்க்கொரு தம்பிரானே.

## 17. தேவஞர்

கஎஉ

தான தான தந்த தந்த தான தான தந்த தந்த
தான தான தந்த தந்த தனதான.

தார காசு ரன்ச ரிந்து விழ வேரு டன்ப றித்து
    சாதி பூத ரங்கு லுங்க முதுமீனச்
  சாக ரோதை யங்கு ழம்பி நீடு தீகொ ளுந்த அன்று
    தாரை வேல்தொ டுங்க டம்ப மததாரை

ஆர வார வும்பர் கும்ப வார ஞச லம்பொ ருந்து
    மானை யாளு நின்ற குன்ற மறமாஞம்
  ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்
    ஆவல் தீர என்று நின்று புகழ்வேஞே

பார மார்த ழும்பர் செம்பொன் மேனி யாளர் கங்கை வெண்க
    பால மாலை கொன்றை தும்பை சிறுதாளி
  பார மாசு ணங்கள் சிந்து வார வார மென்ப டம்பு
    பானல் கூவி ளங்க ரந்தை அறுகோடே

சேர வேம ணந்த நம்ப ரீச ஞரி டஞ்சி றந்த
    சீத ஞர விந்த வஞ்சி பெருவாழ்வே
  தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
    தேவ ஞர்வி ளங்க வந்த பெருமானே.

## கஎ௩

தான தானன தனன தனதன தனதான.

காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையொ டருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்

காய பாசம தனிலே யுறைவது
மாய மாயுடல் அறியா வகையது
காய மானவர் எதிரே அவரென வந்துபேசிப்

பேணொ ணாதது வெளியே யொளியது
மாய னாயன் அறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விந்துநாதப்

பேரு மாய்கலை யறிவாய் துரியவ
தீத மானது வினையேன் முடிதவப்
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே

வீணொ ணாதென அமையா தசுரரை
நூறி யேயுயிர் நமன்தீ கொளுவென
வேல்க டாவிய கரனே உமைமுலை உண்டகோவே

வேத நான்முக மறையோ னொடும்விளை
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா குறவர்கு றிஞ்சியூடே

சேணொ ணாயிடும் இதண்மேல் அரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா அருள்தரு கந்தவேளே

சேரொ ணாவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிக ளுளமே உறைதரு
தேவ னூர்வரு குமரா அமரர்கள் தம்பிரானே.

## 18. நிம்பபுரம்

கஎ௪

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான தனதான.

அஞ்சுவித பூத முங்கரண நாலும்
அந்திபகல் யாதும் அறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு பெறுமாறு

மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோதம் அருள்வாயே

குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமப டீர அதிரேகக்
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்றுதடு மாற இகல்கோப

வெஞ்சமர சூரன் நெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே
விம்பமதில் சூழு நிம்பபுர வாண
விண்டல மகீபர் பெருமாளே.

## 19. திருக்கூடலையாற்றூர்

கஎ௫

தாத்ததனத் தாத்ததன தானதன தானதன தனதான.

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையழ வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப் பாய்ந்துகட வோட்டமொ டாடிவிடு
விஞ்சையாலே

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ்
அன்புகூரத்

தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னுடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் போந்துவினை மூடியடி யேனுமுன
தன்பிலாமல்

தேட்டமுறத் தேர்ந்துமமிர் தாமெனவெ யேகிநமன்
ஓட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுநலி காலனணு காதினருள்
அன்புதாராய்

வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கதிலை யாகவைகும்
விஞ்சையோனே

வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் றுங்குமழு வாளியென தாதைபுர
மேட்டையெரித் தாண்டசிவ லோகன்விடை யேறியிட
முங்கொனாயி

கோட்டுமுலைத் தாங்குமிழை யானஇடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ கானசிவ காமிவிறல்
கூற்றுவனைக் காய்ந்தஅபி ராமிமன தாரஅருள்
கந்தவேனே

கூட்டுநதித் தேங்கியவெ ளாறுதர ளாறுதிகழ்
நாட்டிலுறை சேந்தமயி லாவனிதெய் வானையொடெ
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில் வாழ்குமர
தம்பிரானே.

## 20. திருமுட்டம்

௧எ௬

தனனத்த தான தனனத்த தான தனதான.

கழைமுத்து மாலை புயல்முத்து மாலை
கரிமுத்து மாலை மலைமேவுங்
கடிமுத்து மாலை வனமுத்து மாலை
கடல்முத்து மாலை அரவீனும்
அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பின்
அடைவொத்து லாவ அடியேன்முன்
அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு
அடிமைக்கு மாமொ டருள்வாயே
மழையொத்த சோதி குயில்தத்தை போலு
மழலைச்சொ லாயி எமையீனும்
மதமத்த நீலி களநித்த நாதர்
மகிழ்சத்தி யீனும் முருகோனே
செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை
திருமுத்த மாதின் மணவாளா
சிறையிட்ட சூரர் தலைவெட்டி ஞான
திருமுட்ட மேவு பெருமாளே.

## 21. புள்ளிருக்கு வேளூர்

௧எஎ

தத்தன தான தான தத்தன தான தான
தத்தன தான தான தனதான.

எத்தனை கோடி கோடி விட்டுடல் ஓடி யாடி
எத்தனை கோடி போன தளவேதோ
இப்படி மோக போகம் இப்படி யாகி யாகி
இப்படி யாவ தேது இனிமேலோ

சித்திடில் சீசி சீசி குத்திர மாய மாயை
சிக்கினி லாயு மாயும் அடியேனைச்
சித்தினி லாட லோடு முத்தமிழ் வாண ரோது
சித்திர ஞான பாதம் அருள்வாயே

நித்தமும் ஓது வார்கள் சித்தமெ வீட தாக
நிர்த்தம தாடும் ஆறு முகவோனே
நிட்கள ரூபர் பாதி பச்சுரு வான மூணு
நெட்டிலை சூல பாணி அருள்பாலா

பைத்தலை நீடு மாயி ரத்தலை மீது பீறு
பத்திர பாத நீல மயில்வீரா
பச்சினை பூக பாளை செய்க்கயல் தாவு வேளூர்
பற்றிய மூவர் தேவர் பெருமாளே.

## ௧௭அ

தானா தானன தாத்த தந்தன தனதான.

மூலா தாரமொ டேற்றி அங்கியை
ஆறா தாரமொ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்று நன்சுழி முனையூடே

மூதா தாரம ரூப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்

மாலா டூனொடு சேர்த்தி தம்பெற
நாலு வேதம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னபுரி யேற்றி மந்திர தவிசூடே

மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூலொளி காட்டி சந்திர
வாகார் தேனமு தூட்டி யென்றனை யுடனாள்வாய்

சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி
மாதா ராபகல் காத்த மைந்தனை
சூடோ டீர்வினை வாட்டி மைந்தரெ னெமையாளுந்

தூயாள் மூவரை நாட்டும் எந்தையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவள் அருள்பாலா

வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே

வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மாஸ்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே.

## 22. திருக்கடலூர்

கஎசு

*தானதன தான தத்த தானதன தான தத்த*
*தானதன தான தத்த தனதான.*

சூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாத டக்கி
தூயவொளி காண முத்தி விதமாகச்

சூழுமிருள் பாவ கத்தை வீழஅழ லூடெ ரித்து
சோதிமணி பீட மிட்ட மடமேவி

மேலைவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவியரு ளூச லத்தின் உடன்மூழ்கி

வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க அருள்தாராய்

ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பும்
ஊடுருவ வேல்தொ டுத்த மயில்வீரா

ஓதுகுற மான்வ னத்தின் மேவியவள் கால்பி டித்துன்
ஓமெனுப தேச வித்தொ டணோவோனே

காலனெடு மேனி மட்க ஊழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி அருள்பாலா

கால்முதல் வாழ்பு விக்க தாரநகர் கோபு ரத்துள்
கானமயில் மேல்த ரித்த பெருமாளே.

# 23. திருவிடைக்கழி

## கூ௨௦

தனன தத்தனத் தனன தத்தனத்
தனன தத்தனத் தனதான.

பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனும் எப்படிப் பலவாழ்வும்
பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும்
புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
பொலியும் அற்புதப் பெருவாழ்வும்
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்ப லத்தினைத் தரவேணும்
தகரி லற்றகைத் தலம்வி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே
தனிவ னத்தினிற் புனம றத்தியைத்
தழுவு பொற்புயத் திருமார்பா
சிகர வெற்பினைப் பகிரும் வித்தகத்
திறலை யிற்சுடர்க் குமரேசா
செழும லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி டைக்கழிப் பெருமானே.

# 24. பெரிய மடம்

## கூ௨க

தனதனன தானதன தத்தன தாத்த தனதான.

கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்பொய்
களவுமத னூல்பலப டித்தவா வேட்கை
கனதனமு மார்புமுறல் இச்சையா லார்த்து கழுநீரார்
கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வார்த்து
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்ச்செய்
கருமமறி யாதுசிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே

தலமடைசு சாளரமு கப்பிலே காத்து
திறைபவிசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தெனவுருகி யோடியொரு சற்றுளே வார்த்தை தடுமாறித்

தழுவிய நு ராகமும் விளைத்துமா யாக்கை
தனையுமரு நாளையும வத்திலே போக்கு
தலையறிவி லேனைநெறி நிற்கநீ தீட்சை தரவேணும்

அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி
அருணை நகர் கோபுரவி ருப்பனே போற்றி
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி அவதான

அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி
அகிலதல மோடிவரு நிர்த்தனே போற்றி
அருணகிரி நாதனெனும் அப்பனே போற்றி அசுரேசர்

பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி பெருவாழ்வாம்

பிரமனறி யாவிரத தட்சிணா மூர்த்தி
பரசமய கோளரித வத்திஞல் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே யோக்யர் பெருமாளே

## 25. சோமநாதன் மடம்

### க௲௨

தனதனன தான தான தனதனன தான தான
தனதனன தான தான தனதாண.

ஒருவழிப டாது மாயை இருவினைவி டாது நாளும்
உழலுமநு ராக மோக அநுபோகம்

உடலுமுயிர் தானு மாயு ணர்விலொரு காலி ராத
உளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக்

கிரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீரம்
எனமொழியும் வீசு பாச கனகோப

எமபடரை மோது மோன உரையிலுப தேச வாளை
எனதுபகை தீர நீயும் அருள்வாயே

அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ றுது பேணும் அறிவாளன்
அமணர்குல கால னாகும் அரியதவ ராச ராசன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்

முருகபொரு சூரர் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவோனே
மொழியுமடி யார்கள் கோடி குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவர் பெருமானே.

## 26. நெடுங்களம்

### கஅரு

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததான.

பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனஎ ரிந்துபொடி அங்கமாகிப்
பண்டறவு டன்பழைய தொண்டர்களு டன்பழகி
பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக்

குஞ்சரமு கன்குணமொ டந்தவனம் வந்துலவு
கொஞ்சியசி லம்புகழல் விந்துநாதங்
கொஞ்சமயி லின்புறமெல் வந்தருளி யென்கவலை
கொன்றருள்நி றைந்தகழல் இன்றுதாராய்

எஞ்சியடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொங்கைகர முங்கொளாமல்
எந்தவுடை சிந்தபெல மிஞ்சியமு தம்புரள
இந்துநுத லும்புரள கங்குல்மேகம்

அஞ்சுமள கம்புரள மென்குழைக ளும்புரள
அம்பொனுரு மங்கைமணம் உண்டபாலா
அன்பர்குல வுந்திருநெ டுங்களவ ளம்பதியில்
அண்டரய னும்பரவு தம்பிரானே.

## 27. குறட்டி

### கஅச

தானன தனத்த தான தானன தனத்த தான
தானன தனத்த தான தனதான.

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு முளநோய்கள்
நேருறு புழுக்கள் கூடு நான்முகன் எடுத்த வீடு
நீடிய விரத்த மூளை தசைதோல்சீ

பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை நரிநாய்பேய்
பாருடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணில் உழல்வேனோ

நாரணி யறத்தி ஞளி ஆறுசம யத்தி பூத
நாயக ரிடத்து காமி மகமாயி
நாடக நடத்தி கோல நீலவரு ணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி திரிசூலி

வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுதல் அளித்த வீர மயிலோனே
மாடமதில் முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு பெருமாளே.

## 28. அத்திப்பட்டு

### கஅரு

தனதனன தனதனன தத்தத் தத்ததன தனதான.

கருகியறி வகலவுயிர் விட்டுக் கிக்கிளைஞர்
கதறியழ விரவுபறை முட்டக் கொட்டியிட
கனகமணி சிவிகையில மர்த்திக் கட்டையினில்
இடைபோடாக்

கரமலர்கொ டரிசியினை யிட்டுச் சித்ரமிகு
கலையையுரி செய்துமறைகள் பற்றப் பற்றுகனல்
கணகணென எரியவுடல் சுட்டுக் கட்சியவர்
வழியேபோய்

மருவுபுனல் முழுகிமனை புக்குத் துக்கமறு
மனிதர்தமை யுறவுநிலை சுட்டுச் சுட்டியுற
மகிழ்வுசெய்து அழுதுபட வைத்தத் துட்டன்மதன்
மலராலே

மயல்விளைய அரிவையர்கள் கைப்பட் டெய்த்துமிக
மனமழியும் அடிமையைநி னைத்துச் சொர்க்கபதி
வழியையிது வழியெனவு ரைத்துப் பொற்கழல்கள்
தருவாயே

பொருவின்மலை யரையனருள் பச்சைச் சித்ரமயில்
புரமெரிய இரணியத னுக்கைப் பற்றியியல்
புதியமுடு கரியதவ முற்றுக் கச்சியினி
லுறமேவும்

புகழ்வனிதை தருபுதல்வ பத்துக் கொத்துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக் கைக்கடவுள்
பொறியரவின் மிசைதுயிலு சுத்தப் பச்சைமுகில்
மருகோனே

அரியமர கதமயிலி லுற்றுக் கத்துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக் கட்டையற
அமரர்பதி யினியகுடி வைத்தற் குற்றமிகும்
இளையோனே

அருணமணி வெயில்பரவு பத்துத் திக்குமிகும்
அழகுபொதி மதர்மகுட தத்தித் தத்திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப் பட்டினுறை
பெருமானே.

# 29. கருவூர் (வஞ்சி)

## கூஅுகோ

தத்தன தனன தனதாத்தன தனதான.

சஞ்சல சரித பரநாட்டர்கள்
மந்திரி குமரர் படையாட்சிகள்
சங்கட மகிபர் தொழ ஆக்கினை முடிசூடித்

தண்டிகை களிறு பரிமேற்றனி
வெண்குடை நிழலி லுலவாக்கன
சம்ப்ரம விபவ சவுபாக்கியம் உடையோராய்க்

குஞ்சரமும் விசிற இறுமாப்பொடு
பஞ்சணை மிசையி லிசையாத்திரள்
கொம்புகள் குழல்கள் வெகுவாத்தியம் இயல்கீதங்

கொங்கணி மகளிர் பெருநாட்டிய
நன்றென மனது மகிழ்பார்த்திபர்
கொண்டய னெழுதும் யமகோட்டியை உணராரே

பஞ்சவர் கொடிய வினைநூற்றுவர்
வென்றிட சகுனி கவருற்பொருள்
பங்குடை யவனி பதிதோற்றிட அயலேபோய்ப்

பண்டையில் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருட முறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு வருணாலே

வஞ்சனை நழுவி நிரைமீட்சியில்
முந்துத முடைய மனைவாழ்க்கையின்
வந்தபின் உரிமை யதுகேட்டிட இசையாநாள்

மண்கொள விசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருக வயலூர்க்குக
வஞ்சியி லமரர் சிறைமீட்டருள் பெருமானே.

# 30. சேலம்

## கூ அஎ

தனதன தானத் தனதன தானத்
தனதன தானத் தனதான.

பரிவுறு நாரற் றழல்மதி வீசச்
சிலைபொரு காலுற் றதனுலே
பனிபடு சோலைக் குயிலது கூவக்
குழல்தனி யோசைத் தரலாலே
மருவியல் மாதுக் கிருகயல் சோரத்
தனிமிக வாடித் தளராதே
மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள்முரு காவுற் றணைவாயே
கிரிதனில் வேல்விட் டிருதொளை யாகத்
தொடுகும ராமுத் தமிழோனே
கினரொளி நாதர்க் கொருமக னுகித்
திருவளர் சேலத் தமர்வோனே
பொருகிரி சூரக் கிளையது மாளத்
தனிமயி லேறித் திரிவோனே
புகர்முக வேழக் கணபதி யாருக்
கிளையவி நோதப் பெருமானே.

# 31. திருப்புக்கொளியூர் அவிநாசி

## கூ அஅ

தனத்த தந்தன தானன தானன தனதான.

மனத்தி ரைந்தெழும் ஈளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி
வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கினை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னுல்மிக வேதின நகையாட

எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ றிந்தழல் வாய்விட வேபயம் உறவேதான்

இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்

கனத்த செந்தமி ழால்நினை யேதினம்
நினைக்க வுந்தரு வாயுன தாருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்

கடற்ச லந்தனி லேயொளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா

அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா

அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு வாரம ராய்புரி
அருட்செ றிந்தவி நாசியுள் மேவிய . பெருமானே.

## 32. தஞ்சை

### கஅசுல

தத்தன தானன தனதான

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ
விஞ்சுறு மாவுன தடிசேர
விம்பம தாயருள் அருளாதோ
நஞ்சமு தாவுணும் அரனார்தம்
நன்குமரா வுமை அருள்பாலா
தஞ்சென வாமடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமானே.

## 33. எழுகரை நாடு

### ௧௪௦

தனதன தாத்தன தனதன தாத்தன
தனதன தாத்தன தனதான.

விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமார

முருகச டாட்சர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி
மொழிகுழ றுத்தொழு தழுதழு தாட்பட
முழுதும லாப்பொருள் தந்திடாயோ

பரகதி காட்டிய விரகசி லோச்சய
பரமப ராக்ரம சம்பராரி
படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
எழுகிரி யாப்பெழ வென்றவேலா
இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே.

## 34. பேரூர்

### ௧௪௧

தானத் தனதான தானத் தனதான.

தீராப் பிணிதீர - சீவாத் துமஞான
ஊராட் சியதான - ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே - பாலாக் கிரிராசே
பேராற் பெரியோனே - பேரூர்ப் பெருமானே.

# பொது

## கூலை

*தான தத்தன தானன தானன    தனதான.*

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாயெரி காளையர்    மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயும் ஏழையர்
ஆர்த னக்குமு தாசின மானவர்
ஓடி யுத்தம ரூதியம் நாடினர்    இரவோருக்

கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினில் ஓரம தானவர்
*ஏதி னிற்சிவ ஞானியை மோனியை    இகழ்வோரும்
ஏக சித்தநி யானமி லாதவர்
மோக முற்றிடு போகிதம் ஊறினர்
ஈன ரித்தனை பேர்களும் ஏழ்நர    குழல்வாரே

தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச    சசசாச
டாட டட்டட டாடட டாடட
டுடு டுட்டுடு டுடுடு டுடுடு
டாடி டிட்டிடி டிடிடி டிடிடி    டிடிடிடி

தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு    செகுசேகு
சேயெ னப்பல ராடிட மாகலை
ஆயு முத்தமர் கூறிடும் வாசக
சேகு சித்திர மாகநின் றாடிய    பெருமாளே.

---

* பாடம்: 'ஈசர் விட்டுணுவை சேவை செய்வோர்தமை'.

## ௧௨௯௫

*தனந்த தானந் தந்தன தனதன தனதான.*

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமானே.

## ௧௨௯௬

*தனன தான தானன தனன தான தானன*
*தனன தான தானன தனதான.*

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீமன் எதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விசய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயும் உலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராசன்
உளமு மாட வாழ்தேவர் பெருமானே.

## கசரு

தான தான தானன தானத் தனதான.

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோரும்
காசு தேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்
மாது பாகர் வாழ்வே யெனநெக் குருகாரும்
மாறி லாத மாகால னூர்புக் கலைவாரே
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே
நாக லோக மீரேழு பாருக் குரியோனே
தீதி லாத வேல்வீர சேவற் கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

## கசசு

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான தனதான.

மதிதனை யிலாத பாவி குருநெறி யிலாத கோபி
மனநிலை நிலாத பேயன் அவமாயை
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வரும்வகை யிதேது காயம் எனநாடும்
விதியிலி பொலாத லோபி சபைதனில் வராத கோழை
வினையிகல் விடாத கூளன் எனைநீயும்
மிகுபர மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமன துருப தானம் அருள்வாயே
எதிர்வரு முதார சூரன் இருபிள வதாக வேலை
இயலொடு கடாவு தீர குமரேசா
இனியசொல் மருத சீலர் கருவழி வராமல் நாளும்
இளமைய துதானு மாக நினைவோனே
நதியுட னராவு பூணு பரமர்கு ருநாத னென
நடைபெறு கடூர மான மயில்வீரா
நகைமுக விநோத ஞான குறமினு டனேகு லாவு
நவமணி யுலாவு மார்ப பெருமாளே.

## கசஙள

*தந்த தானன தானன தந்தன தனதான.*

கும்ப கோணமொ டாரூர்சி தம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி
கொந்து லாவிய ராமேசு ரந்தனி
வந்து பூசைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர்ப ரங்கிரி தனில்வாழ்வே
செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்
செஞ்சொ லேரக மாவாவி னன்குடி
குன்று தோறுடன் மூதூர்வி ரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா
கந்த மேவிய போரூர்ந டம்புரி
தென்சி வாயமு மேயாய கம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா
எம்பி ரானொடு வாதாடு மங்கையர்
உம்பர் வாணிபொன் நீள்மால்ச வுந்தரி
எந்த நாள்தொறும் ஏர்பாக நின்றுறு துதியோதும்
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையும் மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு பெருமாளே.

## கசஙஅ

*தனதனன தானதத்த தனதனன தானதத்த*
*தனதனன தானதத்த தனதான.*

எழுபிறவி நீர்நிலத்தில் இருவினைகள் வேர்பிடித்து
இடர்முளைக ளேமுளைத்து வளர்மாயை
எனுமுலவை யேபணைத்து விரககுழை யேகுழைத்து
இருளிலைக ளேதழைத்து மிகநீளும்

இழவுநனே யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தின் அருநீழல்
இசையில்விழ ஆதபத்தி அழியுமுன மேஎனக்கு
இனியதொரு போதகத்தை அருள்வாயே

வழுவுநெறி பேசுதக்கன் இசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவர்வச்ர படையாளி
மலர்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையஎதிர் வீரஉக்ரர் புதல்வோனே

அழகியக லாபகற்றை விகடமயி லேறிஎட்டு
அசலமிசை வாகைஇட்டு வரும்வேலா
அடலசுரர் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரர்சிறை மீளவிட்ட பெருமானே.

௯௫௪

தனத்தத் தான தனதன தனத்தத் தான தனதன
தனத்தந் தான தனதன தனதான.

புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு மதுதனை அறியாதே
புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவ மதுகொளல் பிழையாதே

கவிக்கொண் டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
கனைக்கும் பாவ சுழல்படும் அடிநாயேன்
கலக்குண் டாகு புவிதனி லெனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுளம் அறியாதோ

சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி எமதுளே
சிறக்குஞ் சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ் சாமி பிறவியை ஒழிக்குஞ் சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முனிவர்கள் இடமேவும்

தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி அசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி எமைபணி விதிக்குஞ் சாமி சரவண
பன்சாமிதப்கஎனவரு பெருமானே.

## ௨௦௦

தனதனன தாத்தனத் தனதான.

பிறவி அலை ஆற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமானே.

## ௨௦௧

தானன தான தனதன தானன தான தனதன
தானன தான தனதன தனதான.

ஆசார வீனன் அறிவிலி கோபாப ராதி யவகுணன்
ஆகாத நீசன் அநுசிதன் விபரீதன்
ஆசாவி சார வெகுவித மோகாச ரீத பரவசன்
ஆகாச நீர்மண் அனல்வளி உருமாறி

மாசான நாலெண் வகைதனை நீநீனை ளுத அறிவுளம்
வாயாத பாவி இவனென நினையாமல்
மாதாபி தாவின் அருணல மாரும காரி லெனையினி
மாஞான போதன் அருள்செய நினைவாயே

விசால வேலை சுவறிட மாசூரர் மார்பு தொளைபட
வேதாள ராசி பசிகெட அறைகூறி
மேகார வார மெனஅதிர் போர்யாது தான ரெமபுர
மீதேற வேல்கொ டமர்செயும் இளையோனே

கூசாது வேடன் உமிழ்தரு நீராடி யூனுண் எனுமுரை
கூறுமன் ஈய அவனுகர் தருசேடங்
கோதாமெ னுமல் அமுதுசெய் வேதாக மாதி முதல்தரு
கோலோக நாத குறமகள் பெருமானே.

## ௨௦௨

தனத்தத் தானத் தனதான.

கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமானே.

## ௨௦௩

தாந தனந்த தாந தனந்த
தாந தனந்த தனதான.

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசான மண்டு
மூடோ டுழன்ற கடைநாயேன்
நானா ரொடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து உனையோத
தானா யிரங்க நானா குணங்க
நானார் நடந்து விழநாணர்
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளூறித்
தாய்போல் பரிந்த தேனோ டுகந்து
தானே தழைந்து சிவமாகித்
தானே வளர்ந்து தானே இருந்த
தார்வேணி யெந்தை அருள்பாலா
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் பெருமானே.

## உ0சு

தனதத்த தத்த தனதான.

மனைமக்கள் சுற்றம் எனுமாயா
வலையைக்க டக்க அறியாதே
வினையிற்செ ருக்கி அடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா
தினநற்ச ரித்ரம் உளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமாளே.

## உ0ரு

தானந் தனதன தானந் தனதன
தானந் தனதன தனதான.

ஊனுந் தசையுடல் தானொன் பதுவழி
ஊருங் கருவழி ஒருகோடி
ஓதும் பலகலை கீதஞ் சகலமு
மோரும் படியுன தருள்பாடி
நானுன் திருவடி பேணும் படியிரு
போதுங் கருணையில் மறவாதுன்
நாமம் புகழ்பவர் பாதந் தொழஇனி
நாடும் படியருள் புரிவாயே
கானுந் திகழ்கதி ரோனுஞ் சசியொடு
காலங் கழுநடை யுடையோனும்
காருங் கடல்வரை நீருந் தருகயி
லாயன் கழல்தொழும் இமையோரும்
வானிந் திரனொடு மாலும் பிரமனும்
வாழும் படிவிடும் வடிவேலா
மாயம் பலபுரி சூரன் பொடிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே.

## உ0கூ

தனதனன தனதனன தானன தானதன தந்ததான.

உறவின்முறை கதறியழ ஊராரும் ஆசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதி லேசொரியும் அந்தநாளில்

உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழியும்
உபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும் அந்தமார்பும்

மறையறைய அமரர்தரு பூமாரி யேசொரிய
மதுவொழுகு தரவில்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு ளூரடியர்
வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலை யொரு குதலையடி நாயேனை யாள இஙன்
வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழும் ஓலமிட
பிடிகளிறின் அடல்திரைகள் பாழாக வேதிசையில்
நின்றநாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடும் ஆடல்செய
வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியின் இளமரம தேயாகி நீடியுயர்
குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
ஒருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பரஅமரர் வாழுடர் பேணஅருள்
தம்பிரானே.

## உ0௫

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதான.

திரிபுர மதனை யொருநொடி யதனில்
எரிசெய்த ருளிய சிவன்வாழ்வே
சினமுடை யசுரர் மனமது வெருவ
மயிலது முடுகி விடுவோனே
பருவரை யதனை யுருவிட எறியும்
அறுமுக முடைய வடிவேலா
பசலையொ டணையும் இளமுலை மகளை
மதன்விடு பகழி தொடலாமோ
கரிதிரு முகமும் இடமுடை வயிறும்
உடையவர் பிறகு வருவோனே
கனதன முடைய குறவர்த மகளை
கருணையொ டணையு மணிமார்பா
அரவணை துயிலும் அரிதிரு மருக
அவனியு முழுதும் உடையோனே
அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அறஅரு ளுதவு பெருமானே.

## உ0௬

தானந்த தானத்தந் தனதான.

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமானே.

## உ0௯

*தனந்த தனனந் தனந்த தனந்த தனனந் தனந்த*
*தனந்த தனனந் தனந்த தனதான.*

நிமிர்ந்த முதுகுங் குனிந்து சிறந்த முகமுந் திரங்கி
நிறைந்த வயிறுஞ் சரிந்து தடியூணி
நெகிழ்ந்து சடலந் தளர்ந்து விளங்கு விழியங் கிருண்டு
நினைந்த மதியுங் கலங்கி மனையாள்கண்
டுமிழ்ந்து பலருங் கடிந்து சிறந்த இயலும் பெயர்ந்து
உறைந்த உயிருங் கழன்று விடுநாள்முன்
உகந்து மனமுங் குளிர்ந்து பயன்கொள் தருமம் புரிந்து
ஒடுங்கி நினையும் பணிந்து மகிழ்வேனோ
திமிந்தி யெனவெங் கணங்கள் குணங்கர் பலவுங் குழும்பி
திரண்ட சதியும் புரிந்து முதுசூரன்
சிரங்கை முழுதுங் குடைந்து நிணங்கொள் குடலுந் தொளைந்து
சினங்க ழுகொடும் பெருங்கு ருதிமூழ்கி
அமிழ்ந்தி மிகவும் பிணங்கள் அயின்று மகிழ்கொண் டுமண்ட
அடர்ந்த அயில்முன் துரந்து பொருவேளே
அலங்க லெனவெண் கடம்பு புனைந்து புணருங் குறிஞ்சி
அணங்கை மணமுன் புணர்ந்த பெருமானே.

## உ௧0

*தனந்த தானந் தனதன தானன தனதான.*

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

## உகக

தனன தனதன தனதன தனதன தனதான.

பகிர நினைவொரு தினையள விலுமிலி
கருணை யிலியுன தருணையொ டுதணியல்
ப்ழதி மலைகுரு மலைபணி மலைபல மலைபாடிப்

பரவு மிடறிலி படிறுகொ டிடறுசொல்
பழகி யழகிலி குலமிலி நலமிலி
பதிமை யிலிபவு டதுமிலி மகிமையி லிகுலாலன்

திகிரி வருமொரு செலவினில் எழுபது
செலவு வருமன பவுரிகொ டலமரு
திருக னுருகுத லழுகுதல் தொழுகுதல் நினையாத

திமிரன் இயல்பிலி அருளிலி பொருளிலி
திருடன் மதியிலி கதியிலி விதியிலி
செயலில் உணர்விலி சிவபத மடைவதும் ஒருநாளே

மகர சலநிதி முறையிட நிசிசரன்
மகுடம் ஒருபது மிருபது திரள்புய
வரையு மறவொரு கணைதெரி புயல்குரு நருபதிதன்

மடுவில் மதகரி முதலென உதவிய
வரதன் இருதிறல் மருதொடு பொருதவன்
மதலை குதலையின் மறைமொழி இகழிர ணியனுகம்

உகிரி னுதிகொடு வகிருமொ ரடலரி
திகிரி தரமர கதகிரி எரியுமிழ்
உரக சுடிகையில் நடனவில் அரிதிரு மருகோனே

உருகும் அடியவர் இருவினை இருள்பொரும்
உதய தினகர இமகரன் வலம்வரும்
உலகை முழுதொரு தொடியினில் வலம்வரு பெருமானே.

## உகஉ

தத்தன தனதன தானு தனதன தனதான.

எட்டுட னொருதொகை வாயா யதுபசு
மட்கலம் இருவினை தோயா மிகுபிணி
இட்டிடை செயவொரு போதா கிலுமுயிர் நிலையாக

எப்படி உயர்கதி நாமே றுவதென
எட்பகி ரினுமிது ஓரார் தமதம
திச்சையின் இடருறு பேரா சைகொள்கட லதிலேவீழ்

முட்டர்கள் நெறியினில் வீழா தடலொடு
முப்பதி னறுபதின் மேலா மறுவரு
முற்றுத லறிவரு ஞானோ தயவொளி வெளியாக

முக்குண மதுகெட நானு வெனவரு
முத்திரை யழிதர ஆரா வமுதன
முத்தமிழ் தெரிகனி வாயால் அருளுவ தொருநாளே

இட்டென எதிர்வரு மாகா ளியினொடு
திக்கிட திரிகிட தீதோ மெனவொரு
சித்திர வெகுவித வாதா டியபத மலராளன்

செப்புக வெனமுனம் ஓதா துணர்வது
சிற்சுக பரவெளி யீதே யெனஅவர்
தெக்கண செவிதனி லேபோ தனைஅருள் குருநாதா

மட்டற அமர்பொரு சூரா தியனுடல்
பொட்டெழ முடுகிவை வேலாஸ் எறிதரு
மற்புய மரகத மாதோ கையில்நடம் இடுவோனே

வச்சிர கரதல வானோர் அதிபதி
பொற்புறு கரிபரி தேரோ டழகுற
வைத்திடு மருமக னேவாழ் அமரர்கள் பெருமானே.

## உகரு

தனன தனத்த தனன தனத்த
தனன தனத்த தனதான.

ஒழுகூ னிரத்த மொடுதோ லுடுத்தி
உயர்கால் கரத்தின் உருவாகி
ஒருதாய் வயிற்றி னிடையே உதித்து
உழல்மா யமிக்கு வருகாயம்
பழசா யிரைப்பொ டிளையா விருத்த
பரிதாப முற்று மடியாமுன்
பரிவா லுளத்தில் முருகா எனச்சொல்
பகர்வாழ் எனக்கும் அருள்வாயே
எழுவா னகத்தில் இருநா லுதிக்கில்
இமையோர் தமக்கும் அரசாகி
எதிரே றுமத்த மதவா ரணத்தில்
இனிதே றுகொற்ற முடன்வாழுஞ்
செழுமா மணிப்பொன் நகர்பாழ் படுத்து
செழுதீ விளைத்து மதில்கோலித்
திடமோ டரக்கர் கொடுபோ யடைந்த
சிறைமீள விட்ட பெருமானே.

## உகச

தத்தன தானன தத்தன தானன
தத்தன தானன தனதான.

சுட்டது போலாசை விட்டுல காசார
துக்கமி லாஞான சுகமேவிச்
சொற்கர ணாதீத நிற்குண மூடாடு
சுத்தநி ராதார வெளிகாண
மொட்டலர் வாரீச சக்ரச டாதார
முட்டவு மீதேறி மதிமீதாய்
முப்பது மாறாறு முப்பதும் வேறான
முத்திரை யாமோனம் அடைவேனோ

எட்டவொ ணுவேத னத்தொடு கோகோவெ
னப்பிர மாவோட — வரைசாய
எற்றிய ஏழாழி வற்றிட மாருய
எத்தனை யோகோடி — அசுரேசர்
பட்டொரு சூர்மாள விக்ரம வேலேவு
பத்திரு தோள்வீர — திணைகாவல்
பத்தினி தோள்தோயும் உத்தம மாருது
பத்திசெய் வாருடர் — பெருமானே.

## உகரு

தத்தா தத்தா தத்தா தத்தா
தத்தா தத்தத் தனதான.

செட்டா கத்தே ணைப்போ லச்சீ
ரைத்தே டித்திட் — பமதாகத்
திக்கா மற்பா டுற்று ரிற்சீ
ருற்று ருக்குச் — சிலபாடல்
பெட்டா கக்கூ றிப்போர் தத்தா
ரைப்போல் வப்புற் — றுழலாதே
பெற்று ரிற்சார் வுற்றுய் நற்றுள்
சற்றே தப்பெற் — றிடுவேனே
எட்டா நெட்டா கத்தோ கைக்கே
புக்கோ லத்திட் — டிமையோர்வா
னிற்பா ரிற்சூ ழச்சூ ரைத்தா
னெட்டா வெட்டிப் — பொரும்வேளா
முட்டா மற்று ளச்சே விப்பார்
முற்பா வத்தைக் — களைவோனே
முத்தா முத்தீ யத்தா சுத்தா
முத்தா முத்திப் — பெருமானே.

## ௨௧௬

தத்தன தான தானன தத்தன தான தானன
தத்தன தான தானன தனதான.

அப்படி ஏழு மேழும் வகுத்துவ ழாது போதினின்
அக்ரம்வி யோம கோளகை மிசைவாழும்
அக்கர தேவி கோவின்வி திப்படி மாறி மாறிய
ளைத்துரு வாய காயம தடைவேகொண்
டிப்படி யோனி வாய்தொறு முற்பவி யாவி ழாவுல
கிற்றடு மாறி யேதிரி தருகாலம்
எத்தனை யூழி காலமெ னத்தெரி யாது வாழியி
னிப்பிற வாது நீயருள் புரிவாயே
கற்பக வேழ மேய்வன பச்சிள ஏனல் மீதுறை
கற்புடை மாது தோய்தரும் அபிராம
கற்புர தூளி லேபன மற்புய பாக சாந்தன
கற்பக லோக தாரண கிரிசால
விப்ரச மூக வேதன பச்சிம பூமி காவல
வெட்சியு நீப மாலையும் அணிவோனே
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூரன் ஈறெழ
விக்ரம வேலை ஏவிய பெருமானே.

## ௨௧௭

தனதனன தந்தனம் தனதனன தந்தனம்
தனதனன தந்தனம் தனதான.

இனமறைவி தங்கள்கொஞ் சியசிறுச தங்கைகிண்
கிணியிலகு தண்டையம் புண்டரீகம்
எனதுமன பங்கயங் குவளைகுர வம்புனைந்
திரவுபகல் சந்ததஞ் சிந்தியாதோ
உனதருளை யன்றியிங் கொருதுணையு மின்றிநின்
றுளையுமொரு வஞ்சகன் பஞ்சபூத
உடலதுசு மந்தலைந் துலகுதொறும் வந்துவந்
துழலுமது துன்புகண் டன்புறாதோ

கனதிவத் தந்தசங் க்ரமகவள துங்கவெங்
கடவிகட குஞ்சரந் தங்கும்யானைக்
கடகசயி லம்பெறும் படியவுணர் துஞ்சமுன்
கனககிரி சம்பெழுந் தம்புராசி
அனலெழ முனிந்தசங் க்ரமமதலை கந்தனென்
றரனுமுமை யும்புகழ்ந் தன்புகூர
அகிலபுவ னங்களுஞ் சுரரொடுதி ரண்டுநின்
றரிபிரமர் கும்பிடுந் தம்பிரானே.

## உகஅ

தனதனன தனதனன தனதனன தனதனன
தத்தத்த தத்தான தனதான.

எதிரொருவ ரிலையுலகி லெனஅலகு சிலுகுவிரு
திட்டுக்ரி யைக்கேயெ ழுந்துபாசின்
இடையுழல்வ சுழலுவன சமயவித சகலகலை
யெட்டெட்டு மெட்டாத மந்த்ரவாளால்
விதிவழியி லுயிர்கவர வருகொடிய யமபடரை
வெட்டித்து ணித்தாண்மை கொண்டுநீபம்
விரைவினிள இலைதளவு குவளைகமழ் பவனநிற
வெட்சித்தி ருத்தாள்வ ணங்குவேனோ
திதிபுதல்வ ரொடுபொருது குருதிநதி முழுகியொளிர்
செக்கச்செ வத்தேறு செங்கைவேலா
சிகரகிரி தகரவிடு முருவமர கதகலப
சித்ரக்க கத்தேறும் எம்பிரானே
முதியபதி னொருவிடையர் முடுகுவன பரிகசன
முட்டச்செ லுத்தாறி ரண்டுதேரர்
மொழியுமிரு அசுவினிகள் இருசதுவி தவசுவெனு
முப்பத்து முத்தேவர் தம்பிரானே.

## உ௧௯

தானன தனன தானன தனன
தானன தனன தனதான.

தோரண கனக வாசலில் முழவு
தோல்முர சதிர முதிராத
கோதையர் கவரி *வீசிட விறலி
தோள்வலி புகழ மதகோப

வாரண ரதப தாஇனி துரக
மாதிர நிறைய அரசாகி
வாழினும் வறுமை கூரினும் நினது
வார்கழல்† இணைகள் மறவேனே

பூரண புவன காரண சவரி
பூதர புளக தனபார
பூடண நிருதர் தூடண விபுதர்
பூபதி நகரி குடியேற

ஆரண வனச ஈரிரு குடுமி
ஆரியன் வெருவ மயிலேறும்
ஆரிய பரம ஞானமும் அழகும்
ஆண்மையு முடைய பெருமானே.

## உ௨0

தானத் தானன தந்ததான.

தீதுற் றேயெழு திங்களாலே
தீயைத் தூவிய தென்றலாலே
போதுற் றூடும ணங்களாலே
போதப் பேதைந லங்கலாமோ
வேதத் தோனைமு னிந்தகோவே
வேடப் பாவைவிரும்புமார்பா
ஓதச் சூதமெ றிந்தவேலா
ஊமைத் தேவர்கள் தம்பிரானே.

---

(பாடம்) * வீசவ யிரியர். † ஒழிய மொழியேனே.

## ௨௨௧

தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தனதான.

இருநோய்ம லத்தைசிவ ஒளியால்மி ரட்டியெனை
இனிதாவ ழைத்தெனது முடிமேலே
இணைதாள ளித்துனது மயில்மேலி ருத்தியொளி
ரியல்வேல ளித்துமகி ழிருவோரும்
ஒருவாகெ னக்கயிலை இறையோன ளித்தருளும்
ஒளிர்வேத கற்பகந லிளையோனே
ஒளிர்மாம றைத்தொகுதி சுரர்பார்து தித்தருள
உபதேசி கப்பதமும் அருள்வாயே
கருநோய றுத்தெனது மிடிதூள்ப டுத்திவிடு
கரிமாமு கக்கடவுள் அடியார்கள்
கருதாவ கைக்குவர மருள்ஞான தொப்பைமகிழ்
கருணைக டப்பமலர் அணிவோனே
திருமால ளித்தருளும் ஒருஞான பத்தினியை
திகழ்மார்பு றத்தழுவு மயில்வேலா
சிலைதூளெ ழுப்பிகவ டவுணோரை வெட்டிசுரர்
சிறைமீள விட்டபுகழ் பெருமானே.

## ௨௨௨

தனதன தாத்தனத் தனதான.

சருவிய சாத்திரத் திரளான
சடுதிக ழாஸ்பதத் தமையாத
அருமறை யாற்பெறற் கரிதாய
அனிதய வார்த்தையைப் பெறுவேனோ
நிருதரை மூக்கறுத் தெழுபார
நெடுதிரை யார்ப்பெழப் பொருதோனே
பொருளடி யாற்பெறக் கவிபாடும்
புலவரு சாத்துணைப் பெருமானே.

## உஉரு

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதான.

தவநெறி தவறிய குருடர்கள் தலைபதி
கதறிய பரபாதத்
தருமிகள் கருமிகள் வெகுவித சமயிகள்
அவரொடு சருவாதின்
றவனிவன் உவனுடன் அவளிவள் உவளது
இதுஉது எனுமாறற்
றருவுரு வொழிதரு வுருவுடை யதுபதி
தமியனும் உணர்வேனோ
குவலய முழுவதும் மதிர்பட வடகுவ
டிடிபட உரகேசன்
கொடுமுடி பலநெறி தரநெடு முதுகுரை
கடல்புனல் வறிதாகத்
துவல்கொடு முறையிடு சுரர்பதி துயரது
கெடநிசி சரர்சேனை
துகளெழ நடநவில் மரகத துரகதம்
வரவல பெருமானே.

## உஉசு

தான தனத்த தனதான.

தானு மிருந்த கசிவாகி
ஞான திருத்த மதைநாடும்
ஏழை தனக்கும் அநுபூதி
ராசி தழைக்க அருள்வாயே
பூவை எருக்கு மதிநாக
பூணர் அளித்த சிறியோனே
வேலை தனக்கு சிதமாக
வேழம் அழைத்த பெருமானே.

## உஉரு

தான தான தான தந்த தான தான தான தந்த
தான தான தான தந்த தனதான.

ஆர வார மாயி ருந்து ஏம தூத ரோடி வந்து
ஆழி வேலை போன்மு ழங்கி அடர்வார்கள்
ஆக மீதி லேசி வந்து ஊசி தானு மேநுழைந்து
ஆலை மீதி லேக ரும்பு எனவேதான்
வீர மான சூரி கொண்டு நேரை நேரை யேபி னந்து
வீசு வார்கள் கூகு வென்று அழுபோது
வீடு வாச லான பெண்டிர் ஆசை யான மாதர் வந்து
மேலை வீழ்வ ரீது கண்டு வருவாயே
நாரி வீரி சூரி யம்மை வேத வேத மேபு கழ்ந்த
நாதர் பாலி லேயி ருந்த மகமாயி
நாடி யோடி வாற அன்பர் காண வேண தேபு கழ்ந்து
நாளு நாளு மேபு கன்ற வரைமாது
நீரின் மீதி லேயி ருந்த நீலி சூலி வாழ்வு மைந்த
தீப மாலை யேபு னைந்த குமரேசா
நீல னுக வோடி வந்த சூரை வேறு வேறு கண்ட
நீத னுன தோர்கு ழந்தை பெருமாளே.

வேலுமயிலுந் துணை.

# குறிப்புரை

## சிறப்புப் பாயிரம்

### நூற்சிறப்பு

க. எல்லாரும் - மக்கள் யாவரும். கருபுகழ் - கரு (பிறப்பு) திருப்புகழ் - சிறந்த புகழ்: ஈண்டு திருப்புகழ் நூலைக் குறித்தது.

உ. ஆணிப் பொன் - நல்லபொன்.

ங. புகழ் - புகழ்ப்பாடல்.

ச. அகிலம் - உலகம். புன்கவி - பொருட்செறிவில்லா வெற்றுச்சொல் அடுக்குப் பாட்டு.

ரு. சாத்திட - சூட.

சு. ஆதிகுரு - முதல்வராகிய சிவபெருமானுக்குக் குரு. கொற்றவன் - வெற்றியையுடையவன்.

### நூற்பயன்

க. மோன வீடு - மௌனப் பெருநிலை.

உ. ஏறுமயில் - ஏறுகின்ற மயில். எழில் - எழுச்சி; அழகு.

ங. பொருப்பு - மலை: ஈண்டுக் குருகுபெயர்க் குன்றமாகிய கிரௌஞ்சம். விழுக்குலம் - உயர்ந்த குலம்.

ச. வலு - திடம். பெருமாள் - பெருமையையுடையான்: ஆள்விகுதி ஈண்டுப் பெண்பால் குறியாது ஆண்கின்றோன் என்னும் பொருளில் வந்தது.

ரு. மாமுகன் - சிறந்த முகத்தையுடையோன். உச்சிதம் - மேன்மை. குகன் - அடியவர் நெஞ்சத்திருப்பவன்.

சு. தெள்ளுதமிழ் - குற்றமற்ற தமிழ்மொழி. புனைந்து - போற்றி. வைப்பு - எய்ப்புப் பொருள்; புதையல். கரை - வீடு பேறாகிய கரை; அணை.

எ. ஏணி - ஏறுகின்ற ஏணிப்படி போல்வது. ஏற்றம் - ஏற்றமரம்; நீர் இறைக்கின்ற இறைவை மரம். ஆணி - ஆணி போன்ற உறுதிப்பாடு. அரம் - அராவுகின்ற கருவி போல்வது.

அ. கெர்ச்சித்தல் - கர்ச்சித்தல்; பெருமுழக்கஞ் செய்தல். கெடி - கெடீஎன இறுதி இகரம் நீண்டது. கெடி - திண்ணம்; உறுதி.

௯. மடங்கல் - திரும்புதல் என்னும் பொருளது. ஈண்டு மடங்கிச் செல்வதாகிய வடவைத் தீயைக் குறித்தது. மாதிரத்தோர் - எட்டுத் திசைகளிலுமுள்ளவர்; யாவரும் என்றபடி. உரகன் - பாம்பு.

௧௦. தரு-கற்பக மரம். சுரர் மகள்-தெய்வயானை அம்மை. மரு - மருவு என்பதன் கடைக்குறை; பொருந்திய என்னும் பொருளது. பாதத்தூளி - காலினது தூசி. சென்னி - தலை.

## முருகக்கடவுள் வணக்கம்

ஏறுமயில் - ஆண் மயில். ஏறுகின்ற மயில் என்றலுமாம். மயில் பெண்ணியல்பே மிக்குடையது; எனவே, அதை இலக்கண நூலார் ஆணென அமைக்கார். இதனைச்

'சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே'

என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவான் அறிக.

கூறும் அடியார் - தன் திருப்பெயர் சொல்லி வழிபடும் தொண்டர்கள். மாறுபடு - பகைகொண்ட. ஆறுமுகம் ஆன - ஆறு திருமுகங்களைக்கொண்ட. பொருள் - பொருளே: அண்மை விளி ஏற்றது. ஆகலான், ஈறு இயல்பாயிற்று. அமராவதி - தேவருலகு.

## பிள்ளையார் வணக்கம்

௧. கைத்தலம் - கையின் இடம். கப்பிய - வாரிஉண்ட. கற்றிடும்-கற்கின்ற; ஓதுகின்ற. மத்தம்-ஊமத்தம் பூ. மதியம்-மூன்றாம் பிறை. மல் - மற்போர். மத்தள வயிறு - மத்தளத்தையொத்த திரண்ட வயிறு. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ். அடைவு - முழுதும். முன்படுகிரி - முன்பே உண்டான மலை: ஈண்டு இமயமலை. புனம் - தினைப் புனம். இபம் - யானை. கணம் - வேளை; பொழுது. மணம் அருள் - திருமணம் செய்வித்த.

௨. உம்பர்தரு - வானுலகத்திலுள்ள கற்பகம் முதலிய மரங்கள். தேனு - பசு; காமதேனு. மணி - சிந்தாமணி என்னும் ஒருவகைக் கல். இவைகள் தம்மைச் சார்ந்தவர்கட்குக் கேட்டனவெல்லாம் தரவல்லனவாம். இன்பரசம்-இன்பச்சாறு. ஆதரவு-பற்றுக்கோடு. தம்பி - தம்பின் பிறந்தோன்: ஈண்டு முருகப்பெருமான். வலத்தால்-வலப்பக்கம் வந்தால். கை கனி-கையில் தரப்பட்ட மாம்பழம். நிலைப்பொருள் - அழியாத பொருள். ஐந்து கரம் - ஐந்து கைகள்.

௩. பக்கரை - அங்கவடி. கலணை - கல்லணை: குதிரைச் சேணம். செய்ப்பதி - வயலூர். இக்கு - கரும்பு. வண்டின் எச்சில் - தேன். வண்டுகள் வாயிற்றேன்களை மலர்களிலிருந் தெடுத்து வருதலால் எச்சில் எனப்பட்டது- குடிலச் சடிலம் - வளைந்த சடை.

## நூல்

[இதில், முருகப்பெருமான் அடியவர்களை இடுக்கண் நீக்கிக் காத் தருள்புரிதல் கூறப்படுகின்றது. இதனை இப்பாட்டில் வரும், 'பட்சத்தொடு ரட்சித்தருள்வதும் ஒருநாளே' என் னும் தொடர் வலியுறுத்துகின்றது.]

௨. முத்தைத்தரு - முத்தினைப் போன்ற. அத்திக்கு இறை- தெய்வயானையம்மை. ஒற்றைக் கிரி - ஒரு மலை. ஈண்டு மந்தர மென்னும் மலை. அட்டப் பயிரவர் - எட்டுத் திக்குப் பாலகர்கள். அவர்: அசிதரங்கன், காபாலி, சண்டன், உருகு, குரோதன், சங்காரன், பீடணன், உன்மத்தன் என்போராவர். சீகாழிப் புராணம் கடவுள் வாழ்த்து கஎ-இல் கண்டவை. கொத்து-திரள்; கூட்டம். கொட்பு - வட்டம்.

---

# ஆறு படைவீடுகள்

## க. திருப்பரங்குன்றம்

[முருகப்பெருமான் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடங்கள் படைவீடு என்று வழங்கப்பெறும். படைவீடு என்பது, இறைவன் தம் அன்பர்களோடு என்றும் விளங்கு கின்ற நகரமாகும். அவற்றுள் இது, முதற்படை வீடு; இத் திருத்தலம் பாண்டி நாட்டிலுள்ள மதுரைக்குத் தென் மேற்குத் திசைக்கண் நான்குகல் தொலையில் உள்ளது; முருகப்பெருமான் தெய்வயானை அம்மையாரை மணந்த பெருமை பெற்றது; மலைவலஞ் செய்தற்கேற்ற அமைப் புடையது; நக்கீரர் பூதத்தால் குகைக்குள் அடைபட்டிருந்த காலை, அவர் திருமுருகாற்றுப்படை என்னும் நூலைப்பாடி முருகப்பெருமான் திருக்கை வேற்படையின் உதவி கொண்டு குகையினின்றும் மீட்பித்த திருநகர். இத்தகைய திருநகருக்கு நிரம்பவழகியார் பாடிய தலபுராணம் ஒன்றும் உள்ளது.]

ரு. கருஅடைந்து - கருவிற் சேர்ந்து. கடை - கடைசி; முடிவு. அரைவடம் - அரைஞாண். குதம்பை - காதணி; தோடு; கடுக்கன். இரவி-சூரியன். உந்தி-கொப்பூழ். வர்க்கம்-இனம்; சாதி. பரங்கிரி - திருப்பரங்குன்றம்.

சு. தடக்கை - பெரிய கை. கொண்டல்-மேகம். தஞ்சம்-புகலிடம். கடம் - குடம்; மண்பாண்டம். பங்கயன் - பிரமன். குடக்கு - மேற்குத்திசை. பரம்பொருப்பு - திருப்பரங்குன்றம்.

எ. சந்ததம்-எப்போதும். தந்தியின் கொம்பு-தெய்வயானை அம்மை. சிவை - உமையம்மை. கண்டி - கண்டியென்னும் ஈழநாட்டுத்தலம்.

அ. உறையும் இடம் - இருக்கின்ற இடம். பகடு - எருமைக் கடா. மறலி - இயமன். வினைத்தலம் - போர்க்களம். அலகை - பேய். குஞ்சி - ஆண்மயிர். கொடிச்சி - குறத்தி: ஈண்டு வள்ளி நாயகியார். விரைத்த - மணத்தையுடைய. ம்ருகமதம்-கத்தூரி. அலர் - மலர். பொதிய - நிறைய.

## உ. திருச்செந்தூர்

[இது, இரண்டாவது படை வீடு. திருநெல்வேலியிலிருந்து முப்பத்தைந்து கல் தொலையில் உள்ளது. இங்கே புகை வண்டி நிலையம் உள்ளது. இங்குள்ள கடல் தீர்த்தத்தில் மூழ்கலால் தன் ஐந்து தலைகளில் ஒன்றை இழந்த பிரமன் மீண்டும் பெறச்செய்த பெருமையுடையது; பாண்டிமன்னன் புதல்வியான அங்கசுந்தரி என்பவளுக்குச் சாபத்தால் வந்த குதிரை முகம் மாறி அழகிய தன் நல்முகம் பெறுவித்த சிறப்புடையது. அதனால் அத் தீர்த்தத்துக்கு வதனாரம்பம் என்னும் பெயர் வந்தது. இத்தகைய சிறந்த தலத்தைக் குறித்துத் திருநாவுக்கரசர் 'நம் செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்' எனப்பாடும் பேறுபெற்றது. இங்கே குமரகுருபர அடிகளார் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி இன்புற்றனர். இந்நகருக்குத் தலபுராணம் உண்டு. இதற்குத் திருச்சீரலைவாய் என்னும் மற்றொரு பெயரும் வழங்குகின்றது.]

க. வெண்டையம் கிண்கிணி, என்பன வீரர்கள் அணியும் காலணி. புண்டரிகர் அண்டம் - பிரமன் உலகம். செந்தில் - திருச்செந்தூர்.

க0. கொம்புக்கரி - கொம்பையுடைய யானை. ஒன்றை - ஒப்பற்ற பொருளாகிய பிரணவம். சிந்த - அழிய.

கக. பாசம் - பாசக்கயிறு. தோகை - மயில். ஆலகாலம் - ஆலகாலமென்னும் நஞ்சு. சாலி - செந்நெல். பங்கயம் - தாமரை. தாரை - கூர்மை.

கஉ. துங்கம் - உயர்வு. வியாளம்--பாம்பு. கொண்டல் - திருமால். திங்கள் - மூன்றாம் பிறை.

கங. தேன் - வண்டு. கடு - நஞ்சு. அநுராகம் - இன்பம். சிட்டர் - நல்லவர்.

கச. மூந்து - முதன்மை. மூஞ்சர் - இறந்துபோவோர். சிந்துரமின் - தெய்வயானை அம்மை. விந்தை - பொழுதுபோக்கு.

கரு. விறல்மாரன் - வெற்றியுடைய மன்மதன். தழல் - நெருப்பு. வேலை - கடல். அலைவாய் - திருச்செந்தூர்.

கசு. மயல் - மயக்கம். அனல் - சூடு. உறவு - சுற்றத்தார். இருவினை - நல்வினை, தீவினை. அலரி - சூரியன். நடுவன் - இயமன். நிருதன் - சூரன். மதலை - மரக்கலம். உததி - கடல்.

கஎ. இயல் - இயற்றமிழ். உசிதம் - நலம்; தகுதி. தகர் - ஆடுகின்ற. அனைய - ஒத்த.

கஅ. வரிஆர் - இரேகை நிறைந்த. மகவு - குழந்தை. பரிபாலனம் - பாதுகாத்தல்.

ககூ. கண்டு - கற்கண்டு. வஞ்சி - வஞ்சிக்கொடி. குழல் - கூந்தல். தொங்கல் - மாலை. அண்டர் - தேவர்கள். குன்று - திருப்பரங்குன்றம்.

உ0. பாடீரம் - சந்தனம். நீராவி - நீர்த்தடாகம். உம்பர்கள் - தேவர்கள். சுரா - கள். மனோகரன் - மனத்துக்கு இன்பந் தருவோன்.

உக. தந்தபசி - உண்டான பசி. கடும்பு - சுற்றத்தார். தலைநவிர் - தலைமயிர். மகிடம் - எருமைக்கடா. பயம் - பால்.

உஉ. அங்கம் - உடம்பு. பதகஞ்சம் - திருவடித்தாமரைமலர். பம்பு - நெருங்கியுள்ள.

உங. தொந்தி - வயிறு. வெளிற - நரைத்துப்போக. துஞ்சு - கெடுகின்ற. யமபடர் - யமதூதர்கள். நதி - கங்கை. கரைபொருத - கரையில் மோதுகின்ற.

உச. படர்புவி - படர்ந்த உலகம். பானு - சூரியன். பனுவல் - நூல். பரணி - பரணி நூல். அடல் - வலிமை. கோசம் - தொகுதி.

உரு. களபம் - கலவைச்சாந்து. அந்திக்கும் - இறக்கும்படி செய்யும்; சேர்படும் என்றலுமாம். வரியளி - பொறி வண்டு. வெம்ப - கொதிக்க.

உசு. பூரணம்-நிறைவு. படீரம் - சந்தனக்கலவை. போது-பொழுது; காலம். பூரியன் - கீழ்மகன்; கயவன். பாவகம் - தியானம்.

உள. ஞேயங்கள் - ஞானத்தினால் அறியப்படும் பொருள்; பரயோகம் - மேலான யோகநெறி. நாமம் - நிறைவு. மதி-சந்திர மண்டலம். காளம் - கருநிறம். ஆடல் - வெற்றி; ஆடுதல். விடை - எருது.

உஅ. வந்தி - வணங்குதல். அந்தி - நெருங்கிய; சேர்ந்த. பஞ்சி - பஞ்சு. செஞ்சொல் - கூரிய சொல். வடகுன்று - கிரௌஞ்சமலை. பொர - போர்செய்ய.

உகூ. விந்து - வித்து; சுக்கிலம். காயம் - உடம்பு. விநாசம் - நாசம்; கெடுதி. தழல்வேணி - செஞ்சடை. சகாயர் - உதவுவோர். சுந்தரம் - அழகு. செந்தில் - திருச்செந்தூர்.

௩0. கமலமாது-கலைமகள். இந்திரை - திருமகள். போது-பூ; மலர். அமலம் - குற்றமற்ற. அருணம் - சிவப்பு; செந்நிறம். ஆடகம் - பொன். மம - என்னுடைய. கஞ்சுகி - சட்டையையுடையது; அஃதாவது பாம்பு. கசானன் - யானைமுகத்தையுடைய விநாயகர்.

௩க. சங்கை - ஐயம். சந்து - சந்தனம். ஆடம்பரம் - களிப்பு. அந்தன் - அழகன். கம்பியாது - நடுக்கங்கொள்ளாது. ஆகண்டலேசன் - இந்திரன். பொன்ற - அழிய. பிரதாபா - புகழுடையவனே.

௩உ. அருணமணி - செம்மணி; மாணிக்கம். ம்ருகமதம் - மான்மதம்; கத்தூரி. அபிநவம் - புதுமை அளி - அன்பு; ஆசை. ஓதி - கூந்தல். மேகசாயலர் - மேகநிறத்தினர். தமரம் - ஒளி. சரவணை - நாணற்புல் நிறைந்த பொய்கையில் பிறந்தவனே. சரவணம் - நாணற் புல்.

௩௩. கலை - ஆடை. பரதவிக்கும் - துன்பப்படும். தகைக்கும் - தடுக்கும். தமிழ்த்தென்றல் - இனிய தென்றற் காற்று. தவபாரக்கிரி - தவத்தையுடைய பொதியமலை. கிளைக்கும் - பெருகுகின்ற திறல் - வலிமை.

## ௩. பழனி (திருவாவினன்குடி)

[இது, மூன்றாவது படை வீடு. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தது. வையாவிக் கோப்பெரும் பேகன் என்போன் பண்டைக்காலத்தில் அரசுபுரிந்த நகரம். இது, அக்காலத்துப் பொதினி என வழங்கலாயிற்று. அதுவே, பிற்காலத்தில் எழுத்துக்கள் திரிந்து பழனி என வழங்கலாயிற்று. அதனால், இது ஆவிநன்குடி எனவும் வழங்கப்பெறும். இதற்குப் புகைவண்டி நிலையம் உண்டு. திண்டுக்கல்லிலிருந்து முப்பத்தைந்து கல் தொலையில் உள்ளது. வையாபுரி, சண்முக நதி முதலிய தீர்த்தங்கள் உள்ளன. பழனியாண்டவர் திருக்கோவில் மலைமேல் இருக்கின்றது. பழனி நகரிலும் முருகப்பெருமான் திருக்கோவில் உளது. இப்பழனி நகரத்துக்குச் சிவகிரி, சிவமலை என வேறு பெயர்களும் உள்ளன. மலையைச்சுற்றி வலம்வர வாய்ப்புளது; இதற்குத் தலபுராணம் உண்டு.]

௩௪. நாதவிந்து - நாதவிந்துக்களாகிய கலைத் தத்துவம். நாகம் - நல்ல பாம்பு. பந்தம் - கட்டுதல். மயூரம் - மயில். சேதம் - அழித்தல். மங்களம் - நன்மை. கோலாலம் - விசேடம்; சிறப்பு. ஆடல்வெம்பரி - ஆட்டங்கொள்வதில் விருப்பமுள்ள குதிரை.

௩௫. மோகம் - காம மயக்கம். தாகம் - வேட்கை; விருப்பம். மோனம் - மோனநிலை. பீலி - மயிலிறகு.

௩௬. அவம் - கேடு. விருதா - வீண். நவநீதம் - வெண்ணெய். நவலோகம் - ஒன்பது அண்டம். அலங்கிருதம் - அலங்காரம்; அழகு. சவுந்தரிக - அழகுள்ளவனே : விளியேற்றது.

௩௭. அபகாரம் - தீமை. இபம் - யானை. இமவான்-இமைய மலை அரசன். உத்தமி - சிறந்தவள் : பார்வதியம்மை.

௩௮. அசனம் - சோறு. தலைவாசல் - முன்வாசல். உரகம் - பாம்பு. அரங்கர் - திருவரங்கத்தில் இருப்பவர். உபயகுலம் - தாய்தந்தை இருவர்களின் குலம். விருது - வெற்றி. புகலி - சீகாழி.

௩௯. கலகம் - கலக்கம். மதுரம் - இனிமை. துவர் - பவளம். களம் - கழுத்து. இழை - நூல். இருகண்-இரண்டு கண்கள். விசாகா - விசாகநாளிற் பிறந்தவனே. வனசம் - தாமரை. மதுர ஞானம் - இனிய ஞானம்.

௪௦. தமர் - சுற்றத்தார். தனம் - செல்வம். தறுகண் - அஞ்சாமை; கொடுமை. விமலம் - அழுக்கற்றது; மலமில்லாதது. சமரம் - போர். பகடு - யானை. அயில் - வேல்.

௪௧. அருத்தி - ஆசை. தனகியம் - உள்ளக்களிப்பு. பாவி- வழிபட்டு; வணங்கி. எருத்து - எருது; காளை. இதண்-பரண். பரித்த - தாங்கிய. சேகர - தலையையுடையவனே. மகபதி - வேள்விகட்குத் தலைவன்; இந்திரன்.

௪௨. பூதி - திருநீறு. ஆகம் - உடல். பதம் - கால். மாழை- பொன். மடங்கல் - வடவைத்தீ. அண்ட கூடம் - வான முகடு. வரதா - வரமருள்வோனே.

௪௩. திடமிலி - உறுதியற்றவன். செபம் - செபித்தல்; மந்திரமொழியால் வழிபடுதல். கிரணகுறை - கதிர்க்குறைவு. அக்கு - எலும்பு. தாளம் - முத்து.

௪௪. பொறி - இந்திரியங்கள். நமசிவாய வரை - நமசிவாய என்று ஓதக்கூடிய ஐந்தெழுத்தின் உச்சி. நாதங்கள் - தச நாதங்கள். ஊனங்கள் - ஊன்கள்; செய்யுள் விகாரமாக அகரம் தோன்றிற்று. ஓர் அந்தம் - ஒன்றுபடும் முடிவிடம். தாகி-தாதகி: இடைக்குறை; ஆத்திமாலை. சலிலம் - கங்கை.

௪௫. சரணம் - திருவடிகள். ஆசைப்பாடு - ஆசை; பெரு விருப்பம். துரிதம் - கலக்கம். சூறை - சூறையாடுதல். சின்னா பின்னமாக்குதல். விருதுகவி - வெற்றிக்கவி. விதரண விநோதம்- அறிவுடைய அற்புதம்.

௪௬. பசுபாச தொந்தம் - உயிர் பற்றுதல் தொடர்பு. உயிரின் பாசபதம். உறவு - உறவினர். சுவாசம் - மூச்சு. பூளை - கண்ணுப்பூளை என்னும் செடிப்பூ. முகுந்தன் - திருமால்.

௪௭. வசனம் - உருவேற்றல். சடாட்சரம் - ஆறெழுத்து: அவை 'சரவணபவ' என்பன. பசுபதி - உயிர்கட்குத் தலைவன்; சிவபெருமான். அமரர் - தேவர்கள். சிறை-சிறைச்சாலை.

௪௮. திமிரம் - இருள். உததி - கடல். மிடி - வறுமை. பதலை - மலை. அரவணை - பாம்புப் படுக்கை. விழிகள் நளினன் - கண்கள் தாமரை மலர் போன்றவன்; திருமால். மிடறு-கழுத்து.

௪௯. பகர்தல் - சொல்லல். பசலை - தேமல்; நிறவேறுபாடு, சகரக்கடல் - சகரர்களால் தோண்டப்பட்ட கடல். பாலன் - குழந்தை. நுதி - நுனி. கரா - முதலை. பரிவு - அன்பு.

௫0. சிறல் சடன் - சினத்தையுடைய கீழோன். இலி - இல்லாதவன். கனம் - பெருமை. சீர்மை - சிறப்பு. கூளன் - குப்பைபோன்று பயனற்றவன். வீரை - வீரையென்னுமூர்.

௩க. மதலை - குழந்தை. குதலை - மதலைச்சொல். சிவகலை - சைவநூல்கள். தெரிவையர் - பெண்கள். பவனி - திருவுலா. படிஅதிர - உலகம் நடுங்க. பரமபதம் - மேலான வீடுபேறு.

௩உ. மருந்திடு - வசிய மருந்தால் வரும் நோய். விழிவலி-கண்நோய். மாயா விகாரம் - மாயையால் வரும் வேறுபாடு. தலம் - பூமி. உலைவுஅற - கெடுதலின்றி. மேகாரம் - மயில். பதுமம் - தாமரை. பூகம் - கமுகு.

௩௩. சுக்கை - மாலை. பொற்பு - அழகு. சுட்டி - நெற்றிப் பட்டம். நச்சுக்கண் - நஞ்சையொத்த கண். கச்சு-இரவிக்கை. நெட்டு - நெடுந்தூரம். முற்றம் - திருமுன்பு. (சந்நிதானம்)

௩௪. மதவிசாரர் - சமய ஆய்வாளர். சதம் - உண்மை; நிலை பெற்றது. மறைவர் - அழிந்துபோவர். வேழசிலை - கரும்பு வில். சுரர்பதி - இந்திரன்.

௩௫. மருபகழி - மணமுள்ள மலரம்பு. விரகு - உபாயம். அனுக்கிரகி - காத்தருள் செய்கவென்று. பருப்பதம் - மலை. இலைக்குடில் - ஓலைக்குடிசை; பர்ணசாலை. முகில் - மேகம்.

௩௬. மோகனம் - மோகம். தோகை - மயில். பரக்க - விரிவாக. திருத்த - திருந்திய. மாதவர் - பெருந்தவத்தேவர்.

௩௭. அதலவிதலம் - கீழுலகங்கள். தலங்கள் - உலகங்கள். பதலை-விரிந்த இடமுடைய பறை. நிசிசரர் - இரவில் திரிவோர். பவுரி - மண்டலக்கூத்து. கவரி - சாமரம். இகல் - பகை.

௩அ. குடஉதரன் - குடம்போன்ற வயிற்றினன். கடம் - மதநீர் பாய்சுவடு. கரிணி - யானை. வடவரை - இமையமலை. சுதை - மகள்: சுதன் என்னும் ஆண்பாற்கேற்ற பெண்பாற் சொல். படலம் - கூட்டம்.

௩௯. வரதா - வரங்கொடுப்பவனே. இரதம் - இரசவாதம். சரதா - உண்மையானவனே. பரதேவதை - உயர்ந்த கடவுள் தன்மையுடைய உமையம்மை.

## ச. சுவாமிமலை (திருவேரகம்)

[இது, நான்காவது படைவீடு. தஞ்சைமாவட்டம் கும்பகோணத்திற்கு மேற்கே நான்கு கல் தொலையிலுள்ளது. இதற்குப் புகைவண்டி நிலையம் முக்கால் கல் தொலையில் உள்ளது. காவேரி யாற்றின் வடகரைக்கண் அமைந்தது. முருகப் பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவ மந்திரப்பொருள் உரைத்த திருத்தலம். இதனால் முருகப்பெருமானுக்கு,

சுவாமிநாதன், தகப்பன்சாமி, புத்திர குருக்கள் என்னும் திருப்பெயர்கள் உண்டு. இத்திருநகர்க்குத் திரு ஏரகம், குருமலை என்னும் மற்றப் பெயர்களும் உண்டு. இவ்வூரில் அருணகிரிநாதர் முருகப்பெருமான் திருவடி காணப்பெற்ருர். இந்நகர்க்குத் தலபுராணம் உண்டு.]

சுo. சடகசட மூடமட்டி - பொய்யும் குற்றமும் கொண்ட அறிவற்றகீழோன். கடகம் - தோளணி. செச்சை - வெட்சி மாலை. அருணம் - சிவப்பு.

சுக. பாதிமதி - பிறைச்சந்திரன். போது - மண். காது - கெட்ட; கெடுக்கப்பட்ட. சூதம் - மாமரம். வாரி - கடல்.

சுஉ. சூலை - வயிற்றுவலி. சூலைநோவு - மார்பு எரிச்சல் நோய். பூடணம் - அணி; நகை. ஏதம் - குற்றம்.

சுங. நாஎறு - நாவில் தோன்றிய. பற்று - பொருந்திய. சட ஆதாரம் - ஆறு அடிப்படை. சே - எருது. தேரார்-பகைவர். கார் - மேகம்.

சுச. நிறைமதி - நிறைந்த நிலவு. மடவர் - பெண்கள். மருவலர் - பகைவர்.

சுரு. காமியம் - ஆசைப்படும் பொருள்கள். ஓம் எழுத்து - பிரணவம். தூமம் - மணப்புகை. ஏமவெற்பு-பொன்மலை.

சுசு. குழகன் - இளையவன். குரவன் - ஞான ஆசிரியன். திமிர்தம் - பேரொலி. அழல் - நெருப்பு. நளினம் - தாமரை.

சுஎ. கடி - மணம். வேரி - தேன். அடிமோனை - அடிகளும் மோனையும். செடி - பாவம். குடம்பை - கூடு. பத்மம் - தாமரை மலர்.

சுஅ. இருவினை - பெரிய செயல். ஞானவழி - அறிவுக்கண். பரிவு - அன்பு. அழல் - நெருப்பு. வளை - சங்கு. அலங்கு - அசைகின்ற; ஊர்கின்ற.

சுகூ. இனு - இன்னு, துன்பம். அரா - பாம்பு. தேரை - தவளை. திரோதமலம் - மறைத்தலாகிய குற்றம். உவா-யானை. துவாதசம் - பன்னிரண்டு. சடாஆனனம் - ஆறுமுகம்.

## ரு. குன்றுதோருடல்

['குன்றுதோருடல்' என்பது முருகப்பெருமான் மலைகள் தோறும் எழுந்தருளிக் கோயில்கொண்டிருத்தலைக் குறிக்கும். இது, ஐந்தாவது படைவீடு. எங்கெங்கு மலைக

ளுண்டோ அங்கெல்லாம் முருகக்கடவுள் குறிஞ்சிநிலத்துத் தலைவராகக் கொண்டாடப்பெறுவர். இதனால் 'மலைகிழவோன்.' 'கிரிராசன்,' 'குறிஞ்சி வேந்தன்' எனப் பல திருப்பெயர்களை இட்டு முருகப்பெருமானுக்கு வழங்குவர்.]

எ0. அதிரும் - முழங்குகின்ற. எதிர் - ஒத்தவர். பதி - ஊர்.

எக. லோபம் - ஈயாததன்மை. வந்தியர் - புகழ்ந்து கூறுவோர். பஞ்சவன் - பாண்டியன். குஞ்சரம் - யானை.

எஉ. சலம் - கோபம். கவின் - அழகு. படி - உலகம். பவரோகம் - பிறவிநோய்.

எங. சினத்தவர் - கோபங்கொண்டோர். நிசி - இருள். பொருப்பு - மலை. சிரித்து - நகைத்து.

எச. வெப்பு - காய்ச்சல் நோய். முயலகன் - இழுப்பு நோய். திசைமுகன் - பிரமன்.

எரு. பரிபுரம் - சிலம்பு. பரவி - வணங்கி. இருபுடை - இருபக்கம்.

எசு. உரோகம் - நோய். நாசி - மூக்குநோய். ஈளை - கோழை; இழுப்புநோய். முகிலூர்தி - இந்திரன்.

எஎ. நத்திடுவேன் - விரும்புவேன். எட்டிகை - எட்டுத்திசை. நீச மூட்டர் - இழிந்த மூடர்கள். மாரன் - மன்மதன்.

எஅ. இடுக்கு - துன்பம். கனற்கண் - நெருப்புக் கண். பருப்பதம் - மலை. பொழில் - சோலை. நயம் - இனிமை.

எகூ. குறவை: ஒருவகை மீன். குமரி-இளம்பெண். உரகன்-ஆதிசேடன். திரிப்புரம் - முப்புரம்.

அ0. மூகர் - ஊமைகள். அவலம் - வீண்பேச்சு. தளவு - முல்லை. நீபம் - கடம்பு. பூதரம் - மலை.

அக. பொற்பதம் - அழகிய திருவடி. பிதற்று - வேறுபட்ட சொல். கச்சு - வார்; இரவிக்கை. கொத்து - கூட்டம்.

அஉ. சேல் - கெண்டை மீன். உழை - மான். கரி - யானை. தெசம் - பத்து. நாரணன் - திருமால்.

அங. வெளிறு - வெள்ளை நிறம். கதுப்பு - கன்னம். உரத்த - வலிமையான. பழுத்திடுமுன் - முதிர்ச்சியடையுமுன்னே. செலு - மீன் இறகு. மறம் - வெற்றி.

அச. எதிர் - இணை; ஒப்பு. வாரி - கடல். வெற்பு - மலை. வழுதி - பாண்டியன்.

அ௫. உலாவும் - விளையாடும். முராரி - திருமால். தாளம் - முத்து. வாரி - கங்கை.

அ௬. மெய்ப்பொருள் - உண்மைப்பொருள். துகள் - குற்றம். புரிசை - மதில். தொட்ட - விட்ட; செலுத்திய.

அ௭. பத்தி - அன்பு. முத்தன் - முத்தியடைதற்குரியோன். தானம் - ஈகைக்குணம். சத்திநிபாதன் - திருவருட் சத்தியாகப் பதிகின்றவன்.

அ௮. அல்லி - தாமரை. அல்லல் - துன்பம். நள்இரவு - நடு இரவு; சாமம். இல் - மனைவி. தொல்லை - பழைமை. வல்லை - விரைவு. வள்ளி - வள்ளியென்னும் ஒருவகைக் கொடி.

அ௯. வேதவெற்பு - திருக்கழுக்குன்றம். வேடுவச்சி - குறத்தி. ஓரெழுத்து - பிரணவம்.

௯0. சத்திபாணி - சத்தியவேலைத் தாங்கிய கையா! பட்டி மாடு - அடங்காது திரியும் மாடு. உலோகிதம் - செந்நிறம். சிட்டம் - மேன்மை. வேதியர் - அந்தணர்.

௯௧. அந்தோ - ஐயோ. அம்போருகன் - பிரமன். பஞ்சாடிய - சிதறடித்த. சீட்டு - கடிதம். மதம் - மகிழ்ச்சி.

௯௨. பூசித்து - பூசைசெய்து. மாசர் - குற்றமுடையோர். மாகம் - வானம். ஆலித்து - ஒலித்து. நாகம் - சுரபுன்னை.

௯௩. கோலாகலம் - சிறப்பு. வரிஅளி - பொறி வண்டு. ஆராத - நிரம்பாத. சீமூதம் - மேகம். அபிராமம் - அழகு.

௯௪. கரிபுர அரி - யானையின் உடலை அழித்த இறைவர். கரஉதாசன் - கையில் நெருப்பேந்தியவர். திகிரி - வட்டம்.

௯௫. கல்லாரம் - செங்குவளை. பானீயம் - தண்ணீர். கடோரம் - கொடுமை. சுரேசர் - தேவர்கட்குத் தலைவர்.

௯௬. லிபி - எழுத்துக்கள். அசபை - உயிரும் இறைவனும் ஒன்றெனக்கொள்ளும் மந்திரமொழி. ஏகவடிவம் - ஓருரு. தானவர் - அசுரர். வேணி - சடை. விண்டு - மூங்கில்.

௯௭. தழலாடி வீதி-நெற்றி. குருநாடு: ஒரு தேசம். எழுபார் - ஏழுலகம். குறள் - குறுகிய உரு. மாறன் - பாண்டியன். வெப்பு - காய்ச்சல் நோய்.

௯௮. நிராமயம் - நோயற்ற. பராபரம் - மேலானது. நிராயுத - ஆயுதமில்லாத. குரா - குரவமரம்.

௯௯. அனங்கன்-உடலற்றவன்; மன்மதன். மன்றம்-பொது அவை. தண்டும் - வாங்கும். குனிந்து - வளைந்து. கொந்து - பூங் கொத்து.

௧௦௦. இளந்தைப் பருவம் - இளம்பருவம் (பாலியம்). பங் கம் - அவமதிப்பு. கெறுவிதம் - செருக்கு. மங்க - கெட. துங்கம் - உயர்வு.

௧௦௧. சரவணசாதா - நாணற்காட்டுப் பொய்கையில் பிறந் தவனே! நமோநம - உன்னை வணங்குகின்றேன். ஆதீதன் - மேம்பட்டவன். இரவி - சூரியன். மாமேரு - இமைய மலை.

௧௦௨. ஒன்ற - ஒருவழிப்பட. அம்போருகம் - தாமரை யரும்பு. தொலைந்த: தொலைத்த - கெடுத்த: பிறவினைப் பொரு ளில் வந்தது. வம்பு - மணம். செஞ்சாலி - செந்நெல்.

௧௦௩. கரைஅற - எல்லை கடந்து. கண்டு - கற்கண்டு: கரும்புக்கட்டி. உரை - சொல். கஞ்சமலர் - தாமரைப்பூ. உரவு - உறுதி. சுரர் - தேவர். திரை - அலை. சலநிதி - கடல்.

௧௦௪. கடகம் - சேனை. அமர் - போர். புணரி - கடல். பவுரி - வலம்வருதல். மரகத துரகம் - பச்சைநிறக் குதிரை: நண்டு, மயில். நிருப - மன்னவ.

௧௦௫. ஆஉடைய மாது - எருதுக்குரிய அம்மை. பேதம் - வேறுபாடு. பூரணம் - நிறைவு; முழுமை.

௧௦௬. பாழ்த்த - வீணான. கூடு - உடம்பு. வடவரை - வடக்கிலுள்ள மலை; இமையமலை. மகம் - வேள்வி. தீர்த்தன் - தூயவன். சசி - இந்திராணி.

௧௦௭. ஐம்புலம் - ஐவகை அறிவு: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். தண்டிகை - பல்லக்கு; சிவிகை. பவுசு - சிறப்பு. மண்ட லிகர் - அரசர்கள். கொங்கு - கொங்கு நாடு.

௧௦௮. அல் - இரவு. உலையல் - நிலைகுலைதல். தொய்ய - சோர்வுபட. வல்லி - கொடி.

௧௦௯. தேன்உந்து - தேன் பெருகுகின்ற. வானம்-மேலுல கம். தானம் - நிலைமை.

௧௧௦. காசினி - உலகம். சீலம் - நல்லொழுக்கம். நாககிரி - சர்ப்ப மலை: திருச்செங்கோடு.

௧௧௧. சீர் - அழகு. மேனி - உடம்பு. பசேல் பசேல்என - பசிய குளிர் நிறத்துடன் விளங்க. வாலை - இளமைப் பருவம். வாடை - காற்று. வாரம் - அன்பு.

௧௧௨. புவி - பூமி. வேதன் - பிரமன். தந்தி மணவாளா - தெய்வயானை கணவனே! கதிர் - ஒளி.

௧௧௩. வாது - போர். ஆதி - முதல். அந்தம் - முடிவு. மந்த்ர ரூபம் - பிரணவ வடிவம். நாகம் - நாகப் பாம்பு.

## ௬. பழமுதிர்சோலை

[இது, ஆறாவது படை வீடு. மதுரைக்கு வடபக்கம் பன்னிரண்டு கல் தொலையிலுள்ள கள்ளழகர் கோயில். இதனைப் பரிபாடலில் இருங்குன்றம் என்பர். இதில் அழகர் வீற்றிருக்கின்றார். எனவே, இப்போது திருமால் தலமாக விளங்குகின்றது. இங்கே முன்னர்ச் சிவபெருமான் திருக்கோயில் இருந்ததாகத் தெரிகின்றது. இதற்குச் சான்றாக 'பிரம சுவாமி' என்று கல்வெட்டுக்களில் காணப்படுவது, பிள்ளையார் கோவில், திருநீறுப் பிரசாதம் வழங்கல் முதலியனவென்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள தலபுராணம் விளக்கும்.]

௧௧௪. அதிபன் - முதல்வன். இகம் - இவ்வுலகம். வலாரி - இந்திரன். திருமலிவு - அழகு நிறைந்திருத்தல்.

௧௧௫. கொக்குக்கு ஒக்க - கொக்கைப்போல் வெண்ணிறமாக. தத்து - தள்ளாடல். கக்கல் - கக்குதல்: வாந்திபண்ணல். திலதயிலம் - எண்ணெய். திரிபலை - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல் ஆகிய மூன்று பொருள்கள்.

௧௧௬. ஈனம் - இழிவு. சாரதி - சரசுவதி; கலைமகள். திருப்பதிகம் - தேவாரம். ஆறு திருப்பதி - ஆறு படைவீடுகள்.

---

# ஐம்பூதத் திருப்பதிகள்

## ௧. திருக்காளத்தி

௧௧௭. சிரத்தானம் - தலையினிடம். எத்தன் - வஞ்சகன். நிருத்தா - கூத்தாடுவோனே. முத்தர்க்கு - துறவுடையோர்க்கு.

## ௨. சிதம்பரம்

௧௧௮. கனகசபை - பொன்னம்பலம். அபயம்இட - அடைக்கலம் புக. விரகு - உள்ளக்கிளர்ச்சி; உற்சாகம். இபதோகை - தெய்வானையம்மை.

கககூ. பரமகுரு - சிறந்த குரு. பரவு - போற்றுகின்ற. கழலோன் - வீரக்கழலை அணிந்தவன். கருணைநெறி - அருள்வழி.

கஉ0. அவதாரம் - பிறப்புத்தோற்றம். எரி - நெருப்பு. கமலன் - பிரமன். விழு - சிறந்த. விசை - விரைவு.

கஉக. காவி - காவித்துணி. காயம் - உடம்பு. சீவன்-உயிர். தாருக வர்க்கம் - தாரகாசுரன் கூட்டம். பாணி - கைகள்.

கஉஉ. வஞ்சம் - கொடுமை. கலிகள் - கேடுகள். சரணம் - திருவடி. ககனம் - வானம். நாகம் - ஆதிசேடன்.

கஉங. சுடர் - காலை ஞாயிறு. அளி - வண்டு. பரிபுரம் - சிலம்பு. விடை - எருது: நந்திதேவர்.

கஉச. வாதம் - வாயுநோய். பல்சனி - பல்லிலுண்டாகும் நோய். பரிக்கின்ற - பாதுகாக்கின்ற. சிங்கி - அழிசெயல். அத்தி- எலும்பு; கடல். படிகம் - பளிங்கு.

கஉரு. கலசம் - குடம். அங்கம் - உடம்பு. கொடியோன் - சேவற்கொடியினையுடையோன். மன்று - பொன்னம்பலம்.

## ங. காஞ்சி

கஉசு. எட்ட - இட்டுதற்கு; அணுக. மட்டு - அளவு. தத்துவம் - அறிவு ஆராய்ச்சி. கோவை - வரிசை. உசாவிய - கேட்ட. செக்கண் - சிவந்த கண். கச்சி - காஞ்சிபுரம்.

கஉஎ. அசடர் - மூடர். அவலர் - பயனற்றவர். இடபம் - எருது. தவமான் - தவம் நிறைந்த வள்ளி. வடிவு - திருவுரு.

கஉஅ. அற்றைக்கு-அன்றன்று. வெற்பு - மலை. போதா - ஞானவடிவனே.

கஉகூ. தம்பம் - தூண். செச்சை - வெட்சிமாலை. கறுவு - சினங்கொண்ட. குனகி - கொஞ்சிப்பேசி. அனகம் - பாவமில்லாதவன். சமரம் - போர். தினகரன் - ஞாயிறு.

கங0. முட்டுப்பட்டு - துன்பமடைந்து. கதி - நாற்கதி: பிறப்பு. தட்டு - தடை. கட்டம் - துன்பம். சொக்கம் - அழகு.

கஙக. கமலம் - தாமரை. கலகம் - சச்சரவு; போர். அஞ்சனம் - மை. ஏகாம்பரம் - ஒற்றை மாமரம். அறம் - தருமம்.

கஙஉ. கருமம் - வினை. கலகம் - கலக்கம்; துன்பம். விபரிதம் - மாறுபாடு. மனோபாவம் - மனத்தின் உணர்ச்சி. சமரபூமி - போர்க்களம். அச்சுதன் - திருமால்.

கநுநு. கோசம் - மறைப்பு; மூடிகள். சிவன் முத்தி - இறவாத வீடுபேறு. கோவல் - திருக்கோவலூர். புலியூர் - சிதம்பரம்.

கநுசு. சத்தம் - ஓசை. கொடி - கொடிபோன்ற பெண்கள். கிரி - மலை. துக்கம் - வருத்தம்.

## ச. திருவானைக்கா

கநுரு. அம்புலி - நிலவு. பா - பாட்டு. வம்பு - கச்சு; இரவிக்கை. மண்டிய - நெருங்கிய. நீலம் - கருமை. கோமளை - அழகுள்ளவள். பாணப்பாவலர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

கநுசு. ஓலமறை - முழங்குகின்ற வேதம். துரியம் - உயர் நிலை. வியோமம் - ஞானவெளி. இந்திரிய தாபம் - ஐம்புலன்களால் உண்டாகும் ஆசை. வெண்நாவல் - வெண்ணிற நாவல் மரம்.

கநுஎ. அனித்தமான - அழியக்கூடியதாகிய. ஊன்-உடல். அவம் - வீண். மூலி - மூலிகை: சாவாமை தரும் மருந்து. சகஸ்ர நாமம் - ஆயிரம் திருப்பெயர். காவை - திருவானைக்கா.

கநுஅ. குருதி - இரத்தம். மால் - காற்று. குடில் - குடிசை. சுமடம் - அறிவின்மை. கரிவனம் - திருவானைக்கா.

கநுகூ. நாடி - ஆராய்ந்து. நத்துஆக - விருப்பமாய். கூடற்பதி - மதுரை. தோகை - மயில்.

## ரு. திருவருணை

கசo. இயல் இசை - இயற்றமிழ் இசைத்தமிழ். திரம் - நிலைத்தது. தத்துவம் - உண்மைப் பொருள்.

கசக. இருவினை - பெரிய வினைகள். திரிபுரம் - முப்புரம். அமலன் - மலமற்றவன். விலங்கல் - மலை.

கசஉ. கனல் - நெருப்பு. நிலா - சந்திரன். புழுகு - புனுகு. மகரம் - மகரமீன். மகுடம் - முடி. முராரி - திருமால்.

கசந. அமளி - பேராரவாரம். இருடி - முனிவர். அயில் - வேல்.

கசச. கோடு - கொம்பு. மத்தகம் - தலை. கனகத்தலம் - மேகமண்டலம். தேறு - தெளி. அருணை - திருவண்ணாமலை.

கசரு. தமிழ் - தமிழ்மொழி இனிமை. பொறி - தேமல். தழல்மா பொடி - திருநீறு. கலைநூல் - அறிவு நூல்.

கசசு. பாடு - துன்பம். சீலாகாரா - தூயவனே. வேள் - விரும்பத்தக்கவனே. கோ - தலைவன்.

## பல திருப்பதிகள்

கசஎ. பாராவாரம்-கடல். பானோ-சூரியனோ. ஆலோல்-பறவைகளை ஓட்டும் ஒலி. பூ - பொலிவுள்ளவன்.

கசஅ. ஒருகால்-ஒருகாலம்; ஒருமுறை. முதுசூர்-பழைமையான சூரன். சிறுவன் - புதல்வன். மாமதில் - அழகிய மதில்.

கசகூ. வேழம் - யானை என்னும் நோய். மிண்டர் - மூடர். அமண் நீசர்கள் - சமணக்குருக்கள்மார். காளகண்டன்-நஞ்சுக் கறைக் கழுத்துடைய இறைவன்.

கருO. சுரும்பு - வண்டு. வரம்பு-ஒழுங்கு, அளவு. உசிதம்-நன்மை. கிரி - மலை. குரும்பை - தென்னங் குரும்பைபோன்ற கொங்கை. இலஞ்சி - குளம்

கருக. வாலவயது-இளம்பருவக்காலம். வாணிபம்-வணிகம். மடகூடம் - மாடகூடம் (மாளிகை). ஓகை - களிப்பு. மூரி - வலிமை.

கருஉ. வானோர்-தேவர். பாதாரபத்மம்-திருவடித்தாமரை. தூளி - பூந்தாது. ஞானபரன் - சிவபெருமான். வீறுபெற்று - சிறப்புற்று.

கருங. தூலம் - பருத்த. வம்பு - வீணாக. ஆனனம்-முகம். வாலசந்திரசூடி - இளம்பிறையையணிந்த இறைவர். வேலை - நேரம்; தருணம்.

கருச. துகள் - குற்றம். வரை - மலை. நளினம் - தாமரை மலர். உபயகரம் - இருகைகள்.

கருரு. பாதகம் - பாவம். திறல் - வெற்றி. விறல் - வீரம். நிசாசரர் - அசுரர். மறவர்-வேடர். வேடை-வேட்கை; விருப்பம். மயிலை - மயிலாப்பூர்.

கருசு. அறுகு - அறுகம்புல். ஆயி - தாய். தாதையார் - தந்தை. மிடியன் - வறுமையாளன். ஞாளி - நாய். வீணர் - கீழோர். ஆளி-யாளி. இறுதி-முடிவு. அறுதி-அற்றது. இறவி. இறப்பு. பிறவி - பிறப்பு. இமையவர் - தேவர்கள்.

கருஎ. நீலம் - கருநிறம். தேரை - தவளை. தினை - தினைப் புனம். கோலம்-அழகு. சருவேசர்-எல்லாவற்றுக்கும் முதல்வர்.

கருஅ. ஏடு-இதழ். ஏதம்-குற்றம். சமன்-யமன். பொன் தோகை - அழகிய மயில். கச்சாலை - கச்சிக் கச்சாலைக் கோயில்.

கருக. கேள்வி-ஆராய்ச்சி. வீதித்து-பகுத்து. ஆதித்தன்-ஞாயிறு. வாதம்-காற்று. மதாசலம்-ஆணவமாகிய மதநீர் பத்தார்-அன்பர்; அடியவர்.

கசுo. முடி-தலை. சோமன்-சந்திரன். முருகு-தேன்; மணம். இருகூறு-இரண்டு பாகம். இமையவர்-தேவர்

கசுக. ஞானப்பிரகாசம்-அறிவொளி. வாது-வாதம் பேசுதல், சிலை-வில். திரு-திருமகள். வாணி-கலைமகள். கூடல்-மதுரை.

கசுஉ. பரவு-போற்றப்படுகின்ற. கதிர்-சூரியன். வரை-மலை. அசலம்-மலை. களபம்-கலவைச் சந்தனம். கனகம்-பொன்.

கசுங. சீதம்-குளிர்ச்சி. தொங்கல்-மாலை. சடம்-உடல். வாதவூரன்-மாணிக்கவாசகர். மாடை-பொன். வேதலோகர்-மறையோதுவோர். முத்தர்-சீவன்முத்தர்.

கசுச. நீதத்துவம்-நீதித்தன்மை. நேமம்-நியமம். பூதம்-உயிர்வகை. கோது-குற்றம்.

கசுரு. சத்தி-உமையம்மை. சுரர்-தேவர். தத்தும் வகை-சிதறும்படி. பற்குனன்-அருச்சுனன். சிவம்-மங்கலம். தற்பம்-மாளிகை வீடு. கனகபத்மம்-பொன்தாமரை.

கசுசு. சீர்-அழகு. ஓதிமம்-அன்னம். சேல்-கெண்டை மீன். காரணன்-ஆதிமுதல்வன். போர்-சமர். போதன்-பிரமன்.

கசுஎ. சலம்-வஞ்சனை. குண்டர்-கீழோர். சொங்கன்-பொருள். அம்பரம்-வானுலகம்; கடல். சதுரங்கம்-நால் வகைப்படை. கோமளம்-அழகு.

கசுஅ. வாசித்த நூல்-கற்ற நூல்கள். விந்து-சிவதத்துவம். மாசி-மேகம். கபாலம்-தலை. பயோததி-கடல். கூளப்புரம்-திரிபுரம். கோழிப்பதாகை-கோழிக்கொடி.

கசுகூ. சிந்து-கடல். அங்கி-நெருப்பு. நந்து-சங்கு. சண்பை-சீகாழி.

கஎo. நெய்த்த-நெய்ப்புக்கொண்ட. அறல்-கருமணல். சிலை-வில். தெய்த்த-தேய்ந்த. தெற்கு நரபதி-தென்னாட்டு வேந்தனை பாண்டியன். உக்ரம்-சினம்.

கஎக. கல்நார்-கல்லில் நார். கர்ண அமிர்தம்-காதுக்கு இனிமை. தங்கரூபன்-பொன்வடிவன்; சிவபெருமான்.

௧எ௨. சரிந்து-பெயர்ந்து. பூதரம்-மலை. சாகரம்-கடல். தாரை-கூர்மை. மாசுணம்-பாம்பு. அடம்பு-அடப்பங்கொடி.

௧எ௩. அரு-உருவில்லாதது. காயம்-உடல். காயமானவர்-காயசித்தி பெற்றவர். பேணொணாதது-காக்க முடியாதது. சேண்-உயரம். ஞானயோகிகள்-மெய்ஞ்ஞானிகள்.

௧எ௪. கரணம்-உட்கருவி: அஃதாவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை. மஞ்சு-மேகம். சயிலம்-மலை. கலாபம்-பதினாறுகோவை இடையணி. விம்பம்-ஒளி.

௧எ௫. மழு-இரும்பு. விகாசம்-மலர்ச்சி. புழுகு-புனுகுச்சட்டம். பவிசு-மனக்கிளர்ச்சி. கோடு-மலை. கூற்று-இயமன்.

௧எ௬. கழை-மூங்கில். புயல்-மேகம். வளை-சங்கு. பச்சைமா-பச்சை நிறமுள்ள மயில். மழை-மேகம். தத்தை-கிளி. முத்தி-வீடுபேறு. தளை-கட்டு; பிணிப்பு.

௧எஎ. குத்திரம்-இழிவு. சிக்கு-பிடிப்பு; பந்தபாசம். நிர்த்தம்-நடனம். நிட்களம்-உருவற்ற தன்மை.

௧எஅ. மூல ஆதாரம்-மூலாதாரத் தாமரை: அடிப்பகுதி. மூது ஆதாரம்-முதல் ஆதரவு: லலாட இடம். மால்-ஆசை. சூலான்-சூலத்தையுடையவன். மைதூர்ந்த-குற்றத்தை நீக்கிய.

௧எ௯. சர்ப்ப வாயுவு-பாம்புபோன்ற உயிர். இருள்-ஆணவம். அருணசலம்-சிவஞான ஒளி. ஓலம்-கூக்குரல். மேதி-எருமைக்கடா. தாரகர்-திருக்கடவூர்.

௧அ0. புகர்-குற்றம். அற்புதம்-வியப்பு. சிகரம்-முடி. பொழில்-சோலை. குரவம்-குராமரம்.

௧அ௧. அநுராகம்-காமக் கூட்டுறவு. அவம்-வீண். அலகு-அளவு. ப்ரியத்தன்-விருப்பமுள்ளோன். போற்றி-காக்க. தட்சிணமூர்த்தி-உபதேச குரு.

௧அ௨. நிரம்-ஊக்கம். எமபடர்-எமதூதர். அமணர்-சமணர். முகரம்-பேரொளி. சலராசி-கடல்.

௧அ௩. பஞ்சவர்-ஐவர்: இங்கே, பிரமன், திருமால், உருத்திரர், மகேசுரர், சதாசிவர் ஆகியவர். கழல்-திருவடி. அமுதம்-இன்பம். அண்டர்-தேவர். அயன்-பிரமன்.

௧அ௪. வெதுப்பு-காய்ச்சல் நோய். சீ-சீழ்; சலம். நவத்துவாரம்-ஒன்பது தொளை. பாறு-பருந்து. நீல வருணத்தி-நீல நிறமுடையவள். ஞானபூரணி-அறிவு நிறைந்தவள்.

கஅரு. கருகி - தீர்ந்து; வற்றி. உக்கி - உள்ளம்நைந்து. பொறி அரவு-கீறல்களையுடைய பாம்பு. சுவற-வற்ற. அருணம்-சிவப்பு நிறம். உகளும் - குதிகொள்கின்ற.

கஅசு. சஞ்சலம்-துன்பம். பரநாட்டர் - வேறு தேசத்தவர். தண்டிகை - பல்லக்கு. விபவம்-செல்வவாழ்வு. சௌபாக்கியம்-மிக்க செல்வம். கவறு - சூதாடு கருவி. வஞ்சி - கருவூர்.

கஅஎ. பரிவு - இரக்கம். நார் - அன்பு. கிரி - கிரௌஞ்ச மலை. புகர்முகம் - புள்ளிபெற்ற முகம். விநோதம் - அற்புதம்.

கஅஅ. குஞ்சி - தலைமயிர். பாசம் - பாசக்கயிறு. தாள் மலர்-திருவடி மலர். பகுந்து - பிளந்து. அன்னத்தன்-பிரமன். அமர் ஆய்புரி - எழுந்தருளியிருத்தலை விரும்புகின்ற.

கஅகூ. அஞ்சனம் - மை- விம்பம் - மேம்பாடு. தஞ்சு - அடைக்கலம். தஞ்சை - தஞ்சாவூர்.

ககூ0. விரகு - வஞ்சனை. தேக்கிட - வழிந்தோட. பராக்கு - வேறு நினைவு. சடாட்சர - ஆறெழுத்துக்கு உரியவனே. சிலோச்சய - மலைகட்கரசே.

ககூக. சீவ ஆத்துமம் - வாழ்கின்ற உயிர். ஆட்சி - ஆளுதல். பாரோர் - உலகோர். பெரியோன் - சிறந்தவன்.

---

## பொது

ககூஉ. ஊசல் - மனத்தடுமாற்றம். ஊதியம் - வருவாய். ஓரம் - ஒருதலைப்பட்சம். சேகு - செந்நிறம். சித்திரம் - அழகு.

ககூ௩. உறுகேள் - பொருந்திய சுற்றத்தார். குன்றம் - மலை. திருந்த - திருத்தமான.

1095 ககூச. அதலம் - கீழுலகம். அகிலம் - உலகம். மதுரம் - இனிமை. வனசம் - தாமரை. கதை - தண்டாயுதம். உததி - கடல். உவணம் - கருடன்.

ககூரு. காதி - வெட்டி. நாதரூப - ஒளிவடிவினனே. நாக லோகம் - தேவருலகம். தீது - குற்றம்.

ககூசு. குருநெறி - ஆசிரியர் கூறிய வழி. பேடி - ஆண்மையற்றவன். கோழை - மன ஊக்கமற்றவன். உதாரம் - மேம்பாடு. நதி - கங்கை. நகைமுகம் - சிரித்த முகம்.

௧௯௭. உம்பர் - தேவர். மாயூரம்-மயிலாடுதுறை. கொந்து-திரள். செம்புகேசுரம் - திருவானைக்கா. திருவேரகம் - சுவாமி மலை. வஞ்சி - கருவூர். கம்பை - கம்பையாறு. சிவாயம் - திருவாட்போக்கி.

௧௯௮. உலவை - கிளை; கொம்பு. விரகம் - காமம். இழவு - கேடு. நனை - அரும்பு. ஆதபத்தி - குடை. விகடம் - அழகு. அடல் - வலிமை.

௧௯௯. புலம் - அறிவு. புரட்டு - வேறுபாடு. படிறர் - பொய்யர். சதைக்கும் - நெரிக்கும். தகப்பன்சாமி - தந்தைக்கும் குரு.

௨௦௦. பிரகிருதி - உலக ஆசை. பதகாட்சி - திருவடியைக் காண்டல். குறுமுனிவன் - அகத்தியன்.

௨௦௧. அநுசிதன் - தீயசெயல் செய்வோன். பரவசன் - தன்னிலை இழந்தவன். மாசு - குற்றம். வீசாலம்-விசாலம்; பரப்பு; வேதாள ராசி - பூதக்கூட்டம். ஆரவாரம் - பேரொலி.

௨௦௨. பற்று - ஆசை. கனக்க - மிக. பரப்பு - ஆசைப் பெருக்கு. செகம் - உலகம்.

௨௦௩. ஊன் - புலால். மண்டும் - நெருங்கும். சாலோகம் - சாலோக பதவி.

௨௦௪. மனை - மனைவி. சுனை - நீர்நிலை. சொரூபம் - அழகு. சிறை - சிறைச்சாலை இருக்கை.

௨௦௫. ஊரும் - வரும். ஒரும்படி - அறியுமாறு. கான் - காடு. சசி - சந்திரன். காலம் - இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூன்று காலங்கள்.

௨௦௬. திமிலை - ஒருவகைப் பறை. எழில் - அழகு. உபயம் - இரண்டு. மறலி - யமன். மூரண் - பகைமை. கணி - வேங்கை மரம். முயலகன் - முயலகன் என்னும் பூதம்.

௨௦௭. திரிபுரம் - முப்புரம். வெருவ - அச்சங்கொள்ள. பசலை - நிறவேறுபாடு. பகழி - அம்பு. அரவணை - பாம்புப் படுக்கை. அவனி - மண்ணுலகம்.

௨௦௮. நீலம் - கருநிறம். மால் - காதல் மயக்கம். தார் - மாலை. வேலை - கடல். நால் - நான்கு. அந்தம் - முடிபு.

௨௦௯. திரங்கி - சுருக்கங்கண்டு. சடலம் - உடம்பு. கழன்று - பிரிந்து. குணங்கர் - பேய்கள். குழும்பி - ஒன்றுகூடி. அலங்கல் - மாலை

உ௧0. ஏறு - எருது. கரிஉரி - யானைத்தோல். அதள் - தோல். உசந்த - உயர்ந்த; மேன்மையான.

உ௧௧. பகிர - பகிர்ந்து கொடுக்க. தணியல்-திருத்தணிகை. பரவும் - போற்றுகின்ற. திமிரன் - ஆணவ இருள் கொண்டவன். மகரம் - மகரமீன். நிசிசரன் - அரக்கன்; இங்கே இராவணன்.

உ௧உ. மூட்டர்கள் - மூடர்கள். திட்டென - திடீரென்று. சிற்சுகம் - ஞான இன்பம். தெட்சண செவி - வலது காது.

உ௧௩. ஒழுகு-பரந்துள்ள. காயம்-உடல். பழசு-பழைமை; மூப்பு. மத்தம் - செருக்கு. வாரணம் - ஐராவதயானை.

உ௧௪. சுட்டது - சூடுபட்டது. ஆசாரம் - ஒழுக்கம்; நடைமுறை. அதீதம் - கடந்தது. வாரீசம் - தாமரை. விக்ரமம் - வலிமை. பத்தி - அன்பு.

உ௧௫. சீர் - சிறப்பு. திட்பம் - உறுதி. பெட்டு - மயக்கம். எட்டா - எட்டி; பாய்ந்து. முட்டாமல் - இடையீடில்லாமல். முத்தா - முத்தையொத்தவனே. அத்தா - தலைவனே.

உ௧௬. அப்படி - அவ்வுலகங்கள். வியோமகோளகை - அண்டகோளம். அட்சரதேவி-கலைமகள். விப்ரசமூக-அந்தணர் கூட்டத்தில் இருப்பவனே. வேதன - வேதத்தில் உள்ளோனே. ஆழி - கடல். வெற்பு - மலை.

உ௧எ. இனமறை - வேதஒலிக்கூட்டங்கள். பங்கயம் - தாமரை மலர். உளையும் - வருந்தும். நிவத - உயர்ச்சியுடைய. சங்க்ரமம் - உணவு. கடகம் - கங்கணம்.

உ௧அ. அலகு - கூர்மை. திதிபுதல்வர் - அசுரர். குருதி நதி - இரத்தப் பெருக்கு. பதினொரு விடையார் - பதினொரு உருத்திரர். வசு - வசுக்கள் எண்மர்.

உ௧௯. தோரணம் - தோரணங்கள். தோகையர் - இளம் பெண்கள். வயிரியர் - புகழ்ப்பாடகர். வாரணம் - யானை. பதாதினி - காலாட்படை. சவரி - குறத்தியான வள்ளி.

உஉ0. திங்கள்-நிலவு. போது-மலராகிய அம்பு. போதம்-அறிவு. வேடப்பாவை - குறமகளாகிய வள்ளி. சூதம்-மாமரம்.

உஉ௧. இருநோய் - பிறப்பு இறப்பாகிய இரண்டு நோய்கள். இணைதாள் - இரு திருவடிகள். கருநோய் - பிறவி நோய். கவடு - கிளை : சுற்றம்.

உஉஉ. சருவிய-பழகியுள்ள. சடு-ஆறு. ஆஸ்பதம்-ஆதாரம். நிருதர் - அசுரர். பொருள் - சிறந்த பொருள்.

உஉங. தருமிகள் - அறநெறி உரைப்போர்கள். குவலயம்-உலகம். வடகுவடு - மேருமலை. சுரர்பதி - இந்திரன்.

உஉச. கசிவு - மன நெகிழ்ச்சி. ஞான நிருத்தம் - ஞான நடம். அனுபூதிராசி-அனுபவ ஞானப்பெருக்கம். பூளை-பூளைப்பூ. உசிதம் - தகுதி.

உஉரு. ஆரவாரம் - ஆடம்பரம். ஆகம் - உடம்பு. சூரி - சூரிக்கத்தி. அம்பை - அம்பிகை. வாற - வருகின்ற. வருகின்ற எனற்பாலது சந்த இசைநோக்கி 'வாற' எனமருவிற்று. சூலி - சூலத்தையுடையவள். நீபம் - கடம்பு. நீதன் - நெறிமுறையுடையோன்.

திருப்புகழ் குறிப்புரை முற்றும்.

# செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை


| | |
|---|---|
| அகரமுமாகி | ௮௩ |
| அஞ்சன வேல்விழி | ௧௩௮ |
| அஞ்சுவித பூத | ௧௨௬ |
| அதலசேட னாராட | ௧௪௧ |
| அதல விதலமுத | ௪௪ |
| அதிருங்கழல்ப | ௫௨ |
| அந்தோமன மேகம | ௫௬ |
| அபகார நிந்தைபட் | ௩௧ |
| அப்படி ஏழு மேழும் | ௧௫௫ |
| அம்புலி நீரைச் | ௯௭ |
| அம்பொத் தவிழித் | ௧௧ |
| அரகர சிவனரி | ௫௫ |
| அருணகிரி நாதன் | ௧ |
| அருணகிரி நாதர்பதி | ௩ |
| அருணமணி மேவு | ௨௭ |
| அருத்தி வாழ்வொடு | ௩௪ |
| அல்லில் நேருமின் | ௭௯ |
| அல்லிவிழி யாலும் | ௬௪ |
| அவனிதனி லேபி | ௩௯ |
| அவாமருவி னாவுசுதை | ௫௧ |
| அறமி லாவதி | ௧௧௧ |
| அறிவழிய மயல்வருக | ௧௬ |
| அறிவிலாப் பித்த | ௯௨ |
| அறுகுநுனி பனியனைய | ௧௧௨ |
| அற்றைக் கிரைதேடி | ௯௨ |
| அனங்க னம்பொன் | ௭௩ |
| அனித்த மான | ௯௮ |
| அன்பாக வந்து | ௭௫ |
| ஆசார வீனன் | ௧௪௫ |
| ஆதிமக மாயி | ௭௭ |
| ஆரவார மாயிருந்து | ௧௬௦ |
| ஆறுமுகந் தோன்றும் | ௨ |
| ஆறுமுகம் ஆறுமுகம் | ௩௪ |
| ஆனைமுக வற்கிளைய | ௨ |
| இசைந்த ஏறும் | ௧௫௦ |
| இயலிசையி லுசித | ௧௬ |
| இரவுபகற் பலகாலும் | ௧௦௧ |
| இருநோய்மலத்தைசிவ | ௧௫௮ |
| இருந்த வீடுங் | ௧௪௧ |
| இருப்பவல் திருப்புகழ் | ௫௭ |
| இருமலு ரோக | ௫௬ |
| இருவர் மயலோ | ௧௦௨ |
| இருவினை புனைந்து | ௫௧ |
| இருவினை யஞ்ச | ௧௦௧ |
| இருவினையின் மதிம | ௮௬ |
| இளமைறைவி தங்கள் | ௧௫௫ |
| ஈனமிகுத் துளபிறவி | ௮௪ |
| உம்பர்தருந் தேனுமணிக் | ௬ |
| உருவேற வேசெபித்து | ௭௨ |
| உலகபசு பாச | ௩௬ |
| உறவின்முறை கதறியழ | ௧௪௮ |
| உனைத்தி னந்தொழு | ௧௦ |
| ஊனுந் தசையுடல் | ௧௪௭ |
| ஊனே றெலும்பு | ௧௪௬ |
| எட்டுடனொருதொளை | ௧௫௨ |
| எதிரி லாத | ௬௨ |
| எதிரொருவ ரிலையுலகி | ௧௫௬ |
| எத்தனை கோடி | ௧௨௮ |
| எருவாய் கருவாய் | ௧௦௬ |
| எல்லாரும் ஞானத் | ௧ |
| எழுகடல் மணலை | ௮௬ |
| எழுபிறவி நீர்நிலத்தில் | ௧௪௩ |
| எனைய டைந்த | ௫௪ |
| என்னால் பிறக்கவும் | ௧௨௩ |
| ஏடுகொத் தாரலர் | ௧௧௪ |
| ஏது புத்திஐ | ௫௬ |
| ஏறுமயி லேறிவிளை | ௪ |
| ஐங்கரனை ஒத்தமனம் | ௭௯ |
| ஐந்து பூதமும் | ௭௧ |
| ஒருபொழுதும் இருசரண | ௩௬ |
| ஒருவரை ஒருவர் | ௪௨ |
| ஒருவழிப டாது | ௧௩௨ |
| ஒழுகூ னிரத்த | ௧௫௩ |
| ஓது வித்தவர் | ௧௪௦ |
| ஓராறு மாமுகனும் | ௨ |
| ஓல மறைக | ௯௭ |
| கடலை பொரியவரை | ௪௫ |
| கடிமாம லர்க்கு | ௫௦ |
| கண்டுமொழி கொம்பு | ௧௭ |
| கமல மாதுடன் | ௨௫ |

கமலரு சோகாம்பர ௯௪
கரிபுராரி காமாரி ௬௯
கருகியறி வகல வுயிர் ௧௨௪
கருத்திலுல் விரகுசெய் ௪௩
கருப்பற் றாறிப் ௧௪௬
கருப்புவிலில் மருப்பகழி ௪௨
கரும மானபி ௯௫
கருவடைந்து பத்துற்ற ௮
கருவினுரு வாகி ௩௨
கரையற உருகுதல் ௭௫
கலக வாள்விழி ௩௨
கலகவிழி மாமகளிர் ௧௩௧
கலைமேவு ஞானப் ௧௧௭
கழைமுத்து மாலை ௧௨௮
கறுத்ததலை வெளிறு ௬௧
கனகசபை மேவு ௮௫
கனகதம் பத்தைச் ௯௩
காணொ ணாதது ௧௨௫
காதி மோதி வாதாடு ௧௪௨
காமியத்த ழுந்தி ௫௦
காரணம தாக ௮௨
காலனார் வெங்கொடுந் ௧௨
காவி யுடுத்துந் ௮௭
குகனெ குருபர ௮௮
குமர குருபர ௪௯
கும்ப கோணமொ ௧௪௩
குருதிபு லெலன்பு ௯௯
குருவி எனப்பல ௫௮
கைத்தல நிறைகனி ௫
கொடிய மறலியும் ௭௬
கொம்பனை யார்காது ௧௮
கோடுசெறி மத்த ௧௦௩
சங்குபோல் மென்கழுத் ௧௩
சங்கைதா னென்றுதா ௨௬
சஞ்சல சரித ௧௩௬
சத்தப் படுமைக் ௯௬
சத்தமிகு மேழுகட ௧௩
சத்தி பாணீ ௬௬
சந்ததம் பந்தத் ௯
சரணகம லாலயத்தை ௪௬
சரவண சாதா ௭௪
சரியையா ளர்க்குமக் ௯௩
சருவிய சாத்திரத் ௧௫௮
சிந்துற்றெழு மாமதி ௧௨௨
சிரத்தா னத்திற் ௮௫
சிவனார்ம னங்குளிர ௩௧
சினத்தவர் முடிக்கும் ௫௪
சீசி முப்புரக் ௯௫
சீத வாசனைம ௧௧௮
சீரான் திருப்புகழைச் ௧
சீரான கோல ௯௮
சீரு லாவிய ௧௨௦
சீர்சி றக்குமேனி ௮௧
சீற லசடன்வினை ௩௮
சூடரனைய திருமேனி ௮௯
சுட்டது போலாசை ௧௫௩
சுருதி மறைக ௧௧௧
சுரும்பணி கொண்டல் ௧௦௭
சூலமென வோடு ௧௩௦
செங்கலச முலையார்பால் ௯௦
செட்டாகத்தே னைப்போ ௧௫௪
ஞானங்கொள் பொறிகள் ௩௫
ஞானம் பெறலாம் ௨
தடக்கைப் பங்கயங் ௯
தண்டையணி வெண்டை ௧௧
தந்த பசிதனைய ௧௯
தமரு மமரு மனை ௩௩
தமிழோதிய குயிலோமயி ௧௦௪
தரிக்குங்கலை நெகிழ்க்கும் ௨௮
தருப்புகழ் வல்ல ௩
தலைமயிர் கொக்குக் ௮௩
தலைவலி மருந்தீடு ௪௦
தவநெறி தவறிய ௧௫௯
தார காசு ௧௩௪
தீடமிலிசற் குணமிலீசற் ௩௫
திமிர வுததி ௩௭
திரிபுர மதனை ௧௪௯
திருப்புகழைக் கற்கத் ௩
திருப்புகழ் படிக்குமவர் ௨
திருமகளு லாவும் ௯௩
தீதுற் றேயெழு ௧௫௭
தீராப் பிணிதீர ௧௩௯

துன்பங்கொண் டங்க ௧௯
தேனுந்து முக்கனிகள் ௮௦
தொந்தி சரிய ௨௦
தோரண கனக ௧௫௭
தோலெ லும்பு ௧௧௦
தோழமை கொண்டுச ௧௨௦
நாடித் தேடித் ௧௦௦
நாத விந்துக ௨௯
நாவேறு பாமணத்த ௪௮
நாளு மிகுத்த ௧௫௯
நிமிர்ந்த முதுகுங் ௧௫௦
நிராமய புராதன ௭௨
நிலையாத சமுத்திர ௫௩
நிறைமதி முகமெனும் ௪௮
நீதத் துவமாகி ௧௧௯
நீரிழிவு குட்டமீளை ௧௩௪
நீலங்கொள் மேகத்தின் ௧௪௯
நீலமுகி லானகுழ ௧௧௪
நெய்த்த சுரிகுழ ௧௨௨
பகரு முத்த மிழ்ப் ௧௩௧
பகர்தற்கரி தான ௩௮
பகலி ராவினுங் ௫௯
பகிர நினைவொரு ௧௫௧
பக்கரைவி சித்ரமணி ௬
பஞ்சபுல னும்பழைய ௧௩௩
படர்புவியின் மீது ௨௧
பத்தியால் யானுனைப் ௬௪
பரவு நெடுங்கதி ௧௧௭
பரிமள களபசு ௨௨
பரிவுறு நாரத் ௧௩௭
பாட்டி லுருகிலை ௭௮
பாதி மதிநதி ௪௬
பாலாய் நூலாய் ௧௦௫
பாலோ தேனோ ௧௦௬
பிறர்புக ழின்சொற் ௭௩
பிறவி அலை ஆற்றினிற் ௧௪௫
புவிக்குள் பாத ௧௪௪
பூரண வார கும்ப ௨௨
பொருப்பது பொடிப்பட ௨
பொற்ப தத்தி ௯௫
மக்கட்குக் கூறரி ௯௧
மடங்கல் நடுங்கும் ௩
மதிதனை யிலாத பாவி ௧௪௨
மனத்தி ரைத்தெழும் ௧௩௭
மனைமக்கள் சுற்றம் ௧௪௭
மாணிக்கம் பூண்பார்க்கு ௧
மாலாசை கோப ௭௦
மூட்டுப் பட்டுக் ௯௪
முத்துக்குச் சிட்டுக் ௪௧
முத்துநவ ரத்னமணி ௧௧௬
முத்தைத் தருபத்தி ௭
முந்துதமிழ் மாலை ௧௪
முழுகிவட வாமு ௧௦௨
மூல மந்திர ௩௦
மூலா தாரமொ ௧௨௯
மூளும் வினை சேர ௨௩
வசனமிக வேற்றி ௩௭
வஞ்சக லோப ௫௨
வஞ்சத் துடனொரு ௨௪
வடிவது நீலங் ௧௧௬
வரதா மணிநீ ௪௫
வரிசேர்ந்திடு சேல்கய ௬௦
வரியார் கருங்கண் ௧௭
வள்ளிமண வாளன் ௩
வாசித்த நூல்ம ௧௨௧
வாசித்துக் காணொ ௬௭
வாட்டியெனைச் சூழ்ந்த ௧௨௬
வாத பித்தமொடு ௮௯
வாதமொடு சூலை ௪௭
வாதினைய டர்ந்த ௮௨
வாலவய தாகியழ ௧௦௮
வானோர் வழுத்துனது ௧௦௯
விந்ததி னூறி ௨௪
விரகற நோக்கியும் ௧௩௯
விரல்மார னைந்து ௧௫
வேதத்திற் கேள்வியி ௧௧௫
வேதம்வெண் டாஞ்சகல ௨
வேத வெற்பி ௬௫
வேழ முண்ட ௧௦௭

கழக வெளியீடு : ௮௧௮


பதிப்பாளர் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1

தலைமை நிலையம் :

24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி


விலை ரூ. 2-0.

அப்பர் அச்சகம், சென்னை-1—C. 1000.